என ஒருசூத்திரம் தனியே எழுதப்பட்டுள்ளது.

[2] நிலைபெற. [3] பரிச. [ச-பி.]

321 ஓங்கிய வதுகா ணகவலின் வருமே. (கநி0)

322 புலவராற் றுப்படை புத்தேட்கு முரித்தே. (கநிக)

42—கண்படைநிலை.

323 காலைபகன் மாலை யாழ்முறை யறத்தி
லமைச்சிய லரசிய லேனை யியலிசை
[1]நாட கத்திய லோடு நான்மறை
முறையே யெய்திஇன யூழி வாழி
யினிய மகளிரோ டின்பத் துயில் கொள்
றிங்ஙன முரைப்பது கண்படை யாகும். (கநுட)

43 துயிலெடைநிலை.

324 கண்படை மன்னவர் முன்னர்க் கண்டகம்
விடிய லெல்லை யியல்புறச் சொல்லித்
தங்க ணிறையருந் தாயாத் திறையரு
[2]மேத்தி நின்மொழி கேட்டினி நியங்க
வேண்டின ரித்துயி லெழுகென விளம்பி
னதுவே மன்னவர் துயிலெடை நிலையே. (கநுங)

44—விளக்குநிலை.

325 துளக்கறின் மன்னர்க் காம்விளக் குரைப்பது
விளக்கு நிலையென வேண்டினர் புலவர். (கநுச)

45—கடாநிலை.

326 கொற்றவை தனக்குக் கொற்றவ ரெறியுங்
கடாநிலை யுரைப்பது கடாநிலை யாகும். (கநுஞ)

327 வடா அதுறைக்கன்னிக்கு மன்னவ ரெறிந்த
கடாநிலை யுரைப்பது கடாநிலை யாகும்: பெருங்குன்றூர்கிழார்.

[பி-ம்.] [1] நாடகத் தியலொடு நான்கு முறைமுறை, யெய்திஇன யூழி வாழி யினிய, மகளிரொ டின்பத் துயில்கொள்கென் றின்ன, உரைப்பது கண்படை யாகு மென்ப. [2] மேற்ற; மேத்திநின் மொழிகேட் டினிதியங்க வேண்டின, ரித்துயி லெழுகென வியம்பி னதுவே, மன்னவ ரின்பத் துயி லெடை நிலையே. [சு-பி.]

46—யாஃதுநிலை.

328 வையக மன்னவன் [1]மன்னுக பல்யாண்
டெய்துக வென்ப நியாண்டுநிலை யாகும். (கடுள)

[இது பெரும்பான்மை வேரிசைவெண்பாவாற் பாடப்பெறும். சிறுபான்மை எல்லாப்பாவானும் பாடப்பெறும்.]

47—பறைநிலை.

329 காவல ரினிதுறத் தேவர்காத் தளிக்கெனக்
கடவுளர் விழவினுங் கதிர்முடி. விழவினு
நாடு நகரமு நலம்பெற வியம்பி
வருநெறி வஞ்சி வழங்கப் பற்றிய
மொழிவரத் தொடுப்பது பறைநிலை யாகும். (கடுஅ)

48—அந்தாதித்தொகை.

330 வெண்பாக் கலித்துறை வேண்டிய பொருளிற்
பண்பா வுரைப்பதற் காதித் தொகைபோய. (கடுக)

49—புறநிலை, வாயுறை, செவியறிவுறூஉ.

331 புறநிலை வாயுறை செவியறி வுறூஉவென
நிறனையின் மருட்பாச் செய்யுளின் வருமே. (கசுo)

50—பாதாதி.

332 அகவடி யுகிரே விரல்புற வடியே
பரடே கழலே கணைத்தாண் முழந்தாள்
குறங்கே யல்குல் கொப்பூழ் வயிறதன்
வரையே யிடையே மயிரி னெழுக்கே
முலையுகிர் விரலே முன்கை யங்கை
தோளிணை கழுத்தே முகநகை செவ்வாய்
மூக்கே கண்ணே காது புருவ
நுதலெனு மாறறங் குறுப்புட னிரண்டும்
பாத மாதியா வேண்டுதல் புணர்ப்பினஃ
தோதிய பாத மாதியா மென்ப.

[பி-ம்.] [1] மன்னிய பல்யாண், டெய்துவ னென்ப.

51—பயோதராப்பத்து, நயனப்பத்து.

333 பிணைமுலை நயனம் பாங்கா மகவல்
விருத்தம் பத்தென விளம்பினர் புலவர். (கசுஉ)

334 ஆகிய கண்முலை மகவல் விருத்தம்: பெருங்குன்றூர்கிழார். ()

52—உழத்திப்பாட்டு.

335 புரவலற் கூறி யவன்வா ழியவென்
றகல்வயற் றெழிலி யொருமை யுணர்ந்தன
ளெனவரு மீரைந் [1]துழத்திப் பாட்டே. (கசுச)

53—தறத்திப்பாட்டு.

336 இறப்பு நிகழ்வெதிர் வென்னுமுக் காலமுந்
திறப்பட வுரைப்பது [2]குறத்திப்பாட்டே. (கசுடு)

337 குறத்திப் பாட்டு மதமீ ரற்றே. (கசுக)

54—ஒருபாவொருபது.

338 வெள்ளை யாத லகவ லாத
றள்ளா வொருப தொருபா [3]வொருபது. (கசுள)

55—இருபாவிருபது.

339 வெள்ளை யகவல் பின்னர் முறைவைத்
தெள்ளா [4]தியல்வ திருபா விருபஃது. (கசுஅ)

340 ஒருபா [5]வொருபது மிருபா [6]விருபதுங்
கருதிய வெள்ளையு மகவலுங் காட்டினர். (கசுக)

56—கோவை.

341 [illegible]

(பக்கம் 61) [1] துழத்திப் பாட்டே. [2] குறத்தியர் பாட்டே. [3] வொரு [illegible]. [4] தியல்வ திரு [illegible]. [5] வொருபது. [6] விருபஃதுங்.

342 களவினுங் கற்பினுங் கிளவி வகையாற்
றிணைநிலை திரியாச் செம்மைத் தாகி
நாட்டிய கலித்துறை நானூ றுரைப்பது
கோட்ட மில்லாக் கோவை யாகும். (களக)

343 ஐந்திணை தழுவிய வகநிலைக் கோவை
தந்தநா [1]னூ றுந் தாங்கலித் துறையே. (களஉ)

57—கணக்கு. (மேற்கணக்கு—கீழ்க்கணக்கு.)

344 மேல்கீழ்க் கணக்கென [2]விருவகைக் கணக்கே. (களங)

345 மேற்கணக் கெனவுங் கீழ்க்கணக் கெனவும்
பாற்படும் வகையாற் பகர்ந்தனர் கொளலே. (களச)

346 அகவலுங் கலிப்பா வும்பரி பாடலும்
பதிற்றைந் தாதி பதிற்றைம்ப தீறு
மிகுத்துடன் றொகுப்பன மேற்கணக் கெனவும்
வெள்ளைத் தொகையு மவ்வகை யெண்பெறி
னெள்ளற கீழ்க்கண்க் கெனவுங் கொளலே. (களஞ)

347 ஐம்பது முதலா வைந்நூ றீறு
வைவகைப் பாவும் பொருணெறி மரபிற்
றொகுக்கப் படுவது மேற்கணக் காகும். (களகூ)

348 அடிநிமிர் பில்லாச் செய்யுட் டொகுதி
யறம்பொரு ளின்ப மடுக்கி [3]யவ்வத்
திறம்பட வுரைப்பது கீழ்க்கணக் காகும். (களஎ)

58—தொடர்நிலைச்செய்யுள்.

349 வித்திணு ளிலிகாடி தலைவலெ்டு மேவி
யொத்த வெள்ளை விருத்த மகவல்
வைத்த [4]வொருதொடை கொச்சக வுறுப்பு
நடைபெற வருவது தொடர்நிலை யென்ப.

[பி-மீ.] [1] னூற தாங்கலித் துறையே. [2] விதிற்றனர் புலவர். [3] யவ்வகை. [4] வுரைதொடை.

350 [1]வித்தே தெண்டுளி விருந்தியல் கொடியென
வொத்த மூவகை யிறைவனெடு பொருந்தி
யொழுகிய வெள்ளை விருத்த மகவு
லுரையொடு மிடைந்த பாட்டுடைக் கொச்சக
நடைபெற வருவது தொடர்நிலை வகையே. (கஎக)

351 தொடர்நிலைச் செய்யுள் பாட்டுப்பல தொடுத்துத்
தலையிடை கடையென நுவலவும் படுமே. (கஅ0)

352 அவற்றுள்,
தலையெனப் படுபவை மலைவின் றாகி
யறம்பொரு ளின்பம் வீடென [2]விவ்றின்
றிறந்தெரி மரபி னீங்கா தாகி
வென்றிகொ ளிருக்கை யென்றிவை யணைத்துஞ்
சந்தி யாகத் தந்நிலை பெறுமே. (கஅக)

[பி-ம்.] [1] இதற்குமுன் சேர்த்துக்கொள்ளும்படி,
'தொடர்நிலை யென்பது தமிழியற் பெயரே' (கருஉ)
'கடவுள் வணக்க நாடுர் காவலர்
மாப்புனர்ச்சிகொண் மகளிர் முடிசூடல்
க்ற்றல் படைகுடி திறல்செல றுர்து
செற்றோர் ....
....
....
..... தருதிறை கற்றோர்க் குதவல்
கடல்புனல் வரவு கார்ப்பொழி லுண்டாட்டுத்
தான மகப்பெறுதல் காலை மாலையென
விருகதிர்க் கோளை யறுவகைக் காலமு
மியைந்துட னுகர்த லெழிறரு வீடெனப்
பகர்ந்தவும் பிறவுந் தொடர்நிலைப் பண்பே' (கருக)
'உரையிடை மிடைந்த பாட்டுடை ச்செய்யுள்
விரவிய மரபின் விளம்பிய தெறித்தே' (கருச)
'சுருக்க நடையினு மிலம்பக முடிவினும்
விருத்த நடையது வெற்றிசை யான' (கருஞ)
'வெய்ப்பா நடையினும் பண்புற வருமே' (கருசு)
'விதப்புக் கொளவி வேண்டியது விளக்கும்' (கருகூ)
என ஆறு சூத்திரங்கள் தனியே எழுதப்பட்டுள்ளன. [ச-பி.]
[2] விவற்றிற்.

59—பாட்டு. (பத்துப்பாட்டு.)

353 நூறடிச் சிறுமை நூற்றுப்பத் தளவே
[1]யேறிய வடியி னீரைம் பாட்டுத்
தொகுப்பது பத்துப் பாட்டெனப் படுமே. (கஅஉ)

354 அதுவே: அகவலின் வருமென வறைகுநர் புலவர். (கஅங)

60—கடைநிலை.

355 கடைநிலை யென்பது காணுங் காலைப்
பரிசி லுழப்புங் குரிசிலை முனிந்தோர்
கடையகத் தியம்புங் காட்சித் தென்ப. (கஅச)

356 பரிசினீட் டித்த லஞ்சி வெறுத்தோர்
கடைநின் றுரைப்பது கடைநிலை யென்ப.[2] (கஅஞ)

[கடையெனினும் அங்கதமெனினும் ஒக்கும்.]

61—கையறுநிலை.

357 வலங்கெழு வேந்தர் [3]வான்புகக் கவிஞர்
கலங்கித் தொகுப்பது கையறு நிலையே. (கஅசு)

358 வெற்றி வேந்தன் விண்ணக மடைந்தபின்
கற்றோ ருரைப்பது கையறு நிலையே. (கஅள)

359 [4]கலியொ டுவஞ்சியிற் கையற வுரையார். (கஅஅ)

360 [5]சொற்றன வல்ல வேறுபிற தோன்றினு
மத்தகு [6]மரபி னடக்கினர் கொளலே. (கஅக)

இனவியல் முற்றும்.

பன்னிருபாட்டியல் முற்றிற்று.

[பி-ம்.] [1] யொன்றிய.

[2] இதற்குப் பின் சேர்த்துக்கொள்ளும்படி,

'கடைநிலை யெனினும் வசைப்பாட் டெனினும்
அங்கத மெனினு மொருபொருண் மேற்றே' (கசூக)

என ஒரு சூத்திரம் தனியே எழுதப்பட்டுள்ளது. [சு-பி.]

[3] வாழ்வுகக். [4] கூலியே. [5] மற்றவை வல்ல வினம்பெரி தொன்றிலு. [6] பாவி னடங்கின வென்ப.

சூத்திரமுதற்குறிப்பகராதி.

[எண்கள் பக்கங்களைத் தெரிப்பன.]

அகரக்ககர	7
அகரந்தனக்காய	7
அகரந்தானே	8
அகரமுதலாக	8
அகரமோடைங்குறி	6
அகவடியுகிரே	49
அகவல்விருத்தமுங்	27
அகவலுங்கலிப்பா	51
அகவலுமகவல்	38
அகவலுமுரித்தென	42
அடிநிமிர்பில்லாச்	51
அடிவரைநான்கும்	46
அத்திறமிறந்த	34
அதுவே, அகவலின்	53
அதுவே, குடைச்	29
அதுவே, செங்கலை	42
அதுவே, வெண்கலி	45
அந்நச்சாதிக்	22
அந்நணர்சாதி	21
அமுதெழுத்தென்ற	5
அமுதெனவிடமென	4
அரிவைக்கியாண்டே	33
அருக்கனியமன்	8
அவ்வவ்வெழுத்தே	6
அவ்விருபாற்கு	6
அவையர்பெயர்	8
அளபுறுநரம்பு, உயிர்க்	3
அளபுறுநரம்பு, ஒன்ன	21
அளபுறுநரம்பு, முன்ன	52
அளவுறுநரம்பு, கானலூர்	26
அளவுறுநரம்பு, [illegible]	3
அளவுறுநரம்பு, [illegible]	14
அளவுறுநரம்பு, [illegible]	13
அளவுறுநரம்பு, [illegible]	27
அளவுறுநரம்பு, [illegible]	14
அவைதாம், மிகுதரு	15
அறம்பொருள்வீடு	36
அறுசீரெண்சீ	46
ஆ ஓ யரல	4
ஆ ஓ வீரண்டும்	4
ஆகியகண்முலை	50
ஆசிரியத்துறை	43
ஆடவர்திறத்து	42
ஆண்பால்பெண்பா	6
ஆணப்பெயரே	19
ஆதிநிலையே	33
ஆதியந்தம்	38
இகரக்கொகர	7
இணமணிமாலை	37
இதற்கேயாமெழுத்	29
இந்திரன்வெங்கதிர்	2
இந்திரனிரவி	2
இயங்குபடை	47
இயமன்படைத்த	2
இயமனிதிக்கோ	2
இரங்கவருவது	44
இரண்டுரிரண்	10
இரண்டுபொருள்	45
இராப்பொழுதிற்கு	8
இருவகைக்கூட்டத்	4
இருவகையுண்டி	5
இருவகையைங்குறி	6
இவ்வுயிர்மெய்யோ	4
இளங்கதிர்த்திங்க	27
இறப்புநிகழ்வெதிர்	50
இறைவனேயேத்திய	45
உரைசான்றோர்	11
உரையிறுதலை	15
உரையிறுதலைக்கும்	12
உரிமைவழியாயடுத்து	43
ஈரைந்திருநான்	33
ஈரொலியாகிய	40
ஈறுநிரையாகி	14
உகரக்ககர	7
உகரமெகர	7
உகரவெழுத்துக்கு	7
உடம்புபிரிவுயிர்	17
உணவேயமுதமும்	4
உயரமூன்ளமுஞ்	41
உயிர்க்குறி	4
உயிர்முதலுன்குஞ்	9
உயிர்மெய்போல	2
உயிர்மெய்வழக்க	2
உயிரிராறு	6
உயிரொடுபுணரா	17
உரைத்தகுறிலுங்	8
ஏகரக்கொகர	7
ஏகரந்தனக்கு	7
ஏஞ்சியவேளாண்	22
ஏண்ணப்பட்ட	9
ஏண்ணியவகையா	43
ஏண்வகைப்பெயரு	19
ஏந்தையுடைப்	37
ஏப்பொருளேனு	46
ஏல்லாக்கணமு	14
ஏத்தியவோத்திய	1
ஏழ்தலைப்பெய்த	36
ஏழுநிலையு	33
ஐந்திணைதழுவிய	51
ஐம்பதுமுதலா	51
ஐவகைக்குறி	9
ஐவகைக்குறுக்கமு	4
ஒ ஓவிரண்டும்	3
ஒகரக்குகர	8
ஒகரவெழுத்துக்	7

ஒட்டியகுடைப் 29
ஒருகான்குரோகினெ 10
ஒருபாவொருபது 50
ஒருபோகம்மனெ 39
ருபோகுடனே 39
ருவனைக்காக்க 45
ழிந்த ஐ ஔ 3
ழிந்தவிரண்டு 7
ற்றின் வருக்க 6
ற்றுமாய்தமு 6
ற்றுமைக்காலையும் 2
ன்பதுதேவரு 1
ன்பதுபதிஞென் 27
ன்றுபலவாகிய 21
ன்றுமுதலையான்ன 25
ன்றேயாகியு 21
ங்கியவதுதா 48
தியமெய்யொடு 17
ரசைச்சீரு 15
கரவருக்க 9
கட்டாலையென்பது 29
கடவுளர்மேற்றே 36
கடைநிலையென்பது 53
கண்ணியநேர்நிரை 13
கண்ணுதற்றிருமால் 1
கண்படைமன்னவர் 48
கணமே மூவசைக் 12
கதியெனப்படுபவை 3
கலியொடுவஞ்சியிற் 53
கலைதருவண்ணமும் 45
களவினுங்கற்பினுங் 51
காட்டியநேர்நேர் 13
காட்டியமுறையே 33
காப்பின்முத 26
காப்புமுதலாகிய 25
காப்பொடுசெங்கீரை 25
காலைபகன்மாலை 48
காவலர்சாதி 21
காவலரினிதுறத் 49
கிரிசரம்வனசரம் 41
குடிநெறிமரபு 32
குடிப்பெயராவன 19
குணப்பெயரேனைப் 19
குணபாற்பரிதி 8
குலமெனப்படுவது 41
குறத்திப்பாட்டு 50
குறள்சிந்தளவடி 47
குறிலைந்துட 6
கூற்றுவன்படைத்தன 2
கையுமுற்கூறுங் 41
கோச்சகத்தன்மை 30
கொற்றவைதனக்குக் 48
கோத்திரப்பெயரே 19
கோவையென்பது 50
சக்கரந்தனுவாள் 43
சகரகான்கைங் 9
சந்தமும் (சூ. 302, 304)
சாதியிலுள்ளோர் 19
சாற்றியமாறெத்த 29
சிற்றில்சிறுதேர் 25
சிற்றில்பாவை 34
சிற்றிலிழைத்தல் 25
சிறந்தசீர்த்தலைவன் 11
சிறப்புடையெழுத்தின் 1
சிறப்புப்பெயரே 19
சீர்நான்காதி 46
சூடர்கதிர்த்திங்கள் 31
செப்பியவுடம்பொடு 17
சேலையாமை 44
சொல்லியகலம்பகஞ் 31
சொல்லியமரபின் 18
சொல்லின்றிழத்தி 1
சொல்லெனப்படு 17
சொற்றனவல்ல 53
சொன்னகலம்பக 37
ஞகரவருக்கத் 9
தகரவருக்கத் 9
தத்தமினத்தி 40
தந்தை தாயே 25
தந்தைமகப்பெயர் 20
தலைவன்செய்த 47
தன்மைமுன்னிலை 29
தாண்டகமானிடர் 46
தாயர்சேரிய 44
தீருந்தியபெண்மக 25
திருமாலரனே 2, 26
திருமிகுநிதிக்கோன் 2
திறலோன்யாண்டே 34
துளக்கமின்மன்னர்க் 48
தெரிவைக்கியாண் 33
தேவப்பிரணமை 30
தேவபாணி 31
தேவர்க்குமுனிவர்க் 32
தேவர்கதியே 3
தேவர்மக்க 3
தேவர்வாழ்த்தே 35
தோடர்நிலைச் 52
தொடுகழல்வேந்தன் 18
தொண்ணூறேறனு 42
தொன்னிலைவேந்தர் 25
தோற்றமுதல்யாண் 25
தோற்றியசாதகம் 24
தோன்றியவகவல் 39
நகரத்தாறு 10
நஞ்சாமொற்றொடு 5
நஞ்சுமமுதா 5
நஞ்செனவமுதென 4
நட்புப்பகையாம் 8
நட்பேயுதாசீனம் 7
நரகரும்வினங்கும் 17
நரகும்வினங்கும் 3
நல்லுயிர்ப்பகுதி 1
நலமிகுவாழ்நாள் 41
நவையறுசீர்க்கண 11
நறுமலர்த்திசைமுக 1
நன்மைசெய்கடவு 12
நன்மைபொருள்பே 10
நன்மையிற்றலுந் 41
நால்வகைப்பாவிற்கு 22
நால்வகைப்பாவு 22
நால்வகைவருணத் 2
நாலுவருணமு 34
நாவுமோலையு 22

நிரைநடுவாகி 13
நிரைநிரை 15
நிரைநிரைநேர்தாம் 13
நிரைநேர்நேர்நீன் 12
நிரைமுன்றியைந்தது 13
நிரையசைமூன்று 12
நிலனுமதியு 14
நிலைபெறுசீர்மெய்க் 47
நிற்பனநீக்கண 13
நீடியநாற்பத் 34
நீடியமானன் 12
நீணெறியுவகை 27
நீர்க்கணைநேர்நிரை 12
நீரேநிலனே 13
நூறடிச்சிறுமை 53
நெடிலேழிருவகை 6
நெடுநிலக்கலியே 22
நெடுவெண்பாட்டின் 28
நெருப்பின்கணைநிரை 13
நேர்நடுவாகி 13
நேரசைமூன் 12, 13
நேரிசையின்னிசை 47
பணைமுலைநயனம் 50
பத்தியபகரத் 10
பத்தேயேழை 35
பதினுறெல்லை 34
பரிசினீட்டித்த 53
பரிசிலையாஅன 43
பல்வகைத்தேயங் 41
பலவொன்(சூ.160,161) 7,32
பாட்டுடைத்தலைவ 41
பாதகாதுங் 19
பார்ப்பாரரசர் 7
பாலகுமார 33
பாலன்யாண்டே 44
பாவேயினமே 24, 27
பின்னோப்பாட்டே 28
பிறப்பேயோகை 41
பிறழவிடுவது 50
புரவலற்கூறி 47
புரவலன்பரிசில் 48
புலவராற்றுப்படை 49
புறநிலைவாயுறை 27
பெண்மகவிற்குப் 33
பெதும்பைக் 7
பெயர்முதலெழுத்துப் 37
பெருநிலவேந்தன் 33
பேதைக்கியாண்டே 32
பேதைமுதலா 27
பொங்குகதி 16
பொன்பூத்திருமணி 3
மக்கட்கதியே 2
மக்கட்சாதி 10
மகரத்தாறு 14
மங்கலமைமந்த 46
மங்கலமரபின் 33
மங்கைக்கியாண்டே 33
மடந்தைக்கியாண் 36
மடன்மாப்பெண்டிர் 35
மயக்கறுகொச்சகத் 34
மலைபும்யாறும் 35
மலையேயாஞ்ற 33
மறவோன்யாண்டே 43
மன்னர்கடவுளர் 3
மன்னுவதேவர் 19
மனப்பெயராவன 38
மிகுத்தவெள்ளை 33
மீளியாண்டே 19
முடியுடைவேந்தன் 27
முதற்கணைடுக்கு 13
முதனிரையாகி 32
முதனிலைபின்னெழு 13
முந்துநிரையிணைந்து 39
மும்மூன்றெருரு 44
மூல்லையேசாகு 12
முற்பாட்டெடுப்பின் 6
முன்பிற்செய்யுண் 41
முன்னெருன்றிய 17
முன்னிலையெழுத் 28
முன்னீரடியிலுங் 40
மூவகைநிலனு 10
மூவகையாய்ச்செய் 12
மூவசையெண்சீர் 46
மூவிரண்டேனு 17
மூன்றைக்தே 5
மெய்யாமமுதின் 23
மேதகுசாதகம் 51
மேல்கீழ்க்கணக் 51
மேற்கணக்கெனவுங் 42
மைந்தர்க்காயின் 9, 42
மொழிக்குமுத 29
மோனையுமெதுகையுங் 14
யாவர்செய்யுட்கு 10
யாவேயுத்திரட்டாதி 36
யானைசாய்த்த 10
யுயோவிரண்டு 48
வடாஅதுறை 40
வண்ணகமென்ப 30
வரன்முறைபிறழ 40
வல்லினமெல்லின 53
வலங்கெழுவேந்தர் 42
வழுவாதுடையோ 3
வானவர்மக்க 51
வித்தெண்டுளி 52
வித்தேயெண்டுளி 26
விரிசடைக்கடவுளும் 47
விருத்தவகை 3
விலங்குநரகும் 20
விஜயசயன் 40
வெண்கலியுஞ்சில 38
வெண்பாக்(சூ.253,257, 330.) பக். 38, 49.
வெண்பாமுதலாக் 42
வெள்ளடியியலாற் 39
வெள்ளகவித்துறை 50
வெள்ளையகவல் 202
வெள்ளையாத 22, 39
வெள்ளையுமகவ 53
வெற்றிவேந்தன் 34
வேந்தர்கடவுளர் 31
வேந்தன்வேண்டு 49
வையகமன்னவன்

உ

திருச்சிற்றம்பலம்.

உவமானசங்கிரகம்.

விநாயக வணக்கம்

புவனமிசை மாதர் பொருந்தவய வங்கட்
குவமான சங்கிரக மோதக்—கவளடிக்கட்
சிந்து மதவருவிச் செங்கட் புகர்வதனத்
தைந்துகரத் தான்காவ லாம். (க)

நூல்.

உள்ளங்காந்தம், விரலுகீதம் உவமானம்.

வனச மலர்மாந் தளிர்முயலின் வயிறுசெயலை யனத்தூவி
சுனக ணெக்குச் செம்பஞ்சு துகடு எனிச்ச மிலை மடவார்
வினவுள் ளடிநேர் பெருங்காலின் விரல்க டமக்கு மஞ்சண்முளை
பனைய வென்பர் துவருமிணை யாமென் றுவந்து சொல்வாரே. (உ)

கால்விரனகத்திற்தும், புறங்காலுக்தும், காட்டிற்தும்.

காலின் விரல்சே ருகிர்படிகங் கண்பத் தாகக் கடைந்தமதி
சாலும் புறங்கால் கமடமும்புத் தகமுங் கமுகம் பாளையுமாம்
பாலின் பாகா யுட்குரும்பை பந்து தாசு சிப்பியிலை
யாலுங் காட்டிக் குவமையென வில்வரியனூற் கவிவலரே. (ஊ)

தநிக்தும், கணைக்காற்தும்.

பாவு சிறுதூரிசைப்பெட்டி பந்து சங்கு வனசமுகி
ழாச நறுமாங் கனிகுதிங்கா லேய்க்கு முவமை பெறுந்தூணி
யாவுந் தேன்பூ விரிபாளை வேணு காளம் வாலேத்து
மாவுக் கணைக்கா லுக்கிணங்கு முவமை யாமென் றுரைப்பாரே. (எ)

முழங்காற்தும், தொடைக்தும்.

அலவன் பசுமூக் குற்றகிற லாலான் பணிகே டகத்தின்குமிழ்
சொலுநன்முழந்தாட் குவமையெனச் சொலுவர்தொடைக்கா னைத்துதிக்கை
யலரி லீரு விளங்கதலித் தண்டா மல்குற் றடநீத்தக்
குலவு தெப்பந் தூணெனவுங் குறிப்ப ருவமை நெறியெனவே. (ஙு)

ஸ்ரீ :

முத்தொள்ளாயிரச் செய்யுட்கள்.

தேசிகவிநாயம்பிள்ளை
சேர்த்துஸ்மிஸ்தாஸ்லவ்த்துவான்

ரா. ராகவையங்காரால்

பரிசோதிக்கப்பட்டன.

SENTHAMIL COLLEGE
MADURAI
UGC APPROVED
7468

செந்தமிழ்ப் பிரசுரம்—க

இரண்டாம் பதிப்பு.

மதுரைத்தமிழ்ச்சங்கமுத்திராசாலை.

1935

[இதன் விலை அணா-0]

ஸ்ரீ:

கடவுள்துணை.

முத்தொள்ளாயிரம் முகவுரை.

முத்தொள்ளாயிரம் என்பது, சேரர் பாண்டியர் சோழர் என்னும் முடியுடைத் தமிழரசர் மூவரையும் அறம்பொருளின்பம்பற்றிப் புகழ்ந்துள்ள ஈராயிரத் தெழுநூறு வெண்பாக்களான் ஆயதோராரிய பெரிய பண்டைத் தண்டமிழ்நூல். இது மூவேந்தரையும் தனித்தனியே சிறப்பித்துவரும் தொள்ளாயிரம் தொள்ளாயிரம் பாடல்களாக மூன்றுதொள்ளாயிரமுடைமையின், முத்தொள்ளாயிரம் எனப் பெயர்சிறந்ததென்ப. இது முடியுடைவேந்தர்க்கு ஏற்ற பெற்றியான் நாடு, நகர், திறை, தானை, யானை, குதிரை, அமர்க்களம், வென்றி, கொடை, புகழ், இன்பம் என்பன முதலிய பலபல வகைகளாகப் படைத்துக்கொண்டு புகழ்ந்ததாமெனத் தோற்றுகின்றது. "விருந்தேதானும், புதுவது கிளந்த யாப்பின் மேற்றே" (தொல்காப்பியம் செய்யுளியல்-உஉக) என்பதனுரையிற்பேராசிரியரும் நச்சினார்க்கினியரும் புதிதாகத் தொடுக்கப்படுந் தொடர்நிலை மேற்றுகிய விருந்து என்பதற்கு இம்முத்தொள்ளாயிரநூலை எடுத்துக் காட்டுதலான் இது பழையதும் புதியதுமாகிய கதைமேற்றன்றி ஒருவர் புதிதாகத் தாம் வேண்டியவாற்றாற் படைத்துச் செய்த தொடர்நிலைச்செய்யுளென்பதும், "நெடுவெண் பாட்டே முந்நா லடித்தே, குறுவெண் பாட்டி னளவெழு சீரே" (தொல். செய்-கஞ அ) என்பதன் உரையில், அவ்வுரையாளரிருவரும், முறையே, "பதினெண்கீழ்க்கணக்கினுள்ளும் முத்தொள்ளாயிரத்தும் ஆறடியினானுமற் செய்யுள்செய்தார் பிறசான்றோரு மெனக்கொள்க" எனவும், "இக்கருத்தானே கீழ்க்கணக்கினுள் நான்கடியும் ஈரடியுமே மிகவந்தவாறும் முத்தொள்ளாயிரத்து நான்கடியே மிகவந்தவாறும் காண்க" எனவும் கூறியவாற்றான், இந்நூல்வெண்பாக்கள் பெரும்பான்மை நான்கடியானும் சிறுபான்மை ஐந்து ஆறு அடிகளானும் வந்தன என்பதும், பேராசிரியர் "அங்கதப் பாட்டவற்றளவோ டொக்கும்" (தொல். செய். கஞக) என்பதனுரையில் 'கைக்கிளைச்செய்யுள் முத்தொள்ளாயிரத்துட் பலவாயினும்' எனக் கூறுதலான், இதன்கட் சுட்டியொருவர் பெயர்கொண்ட

பாடாண்டிணைப் புறப்புறக் கைக்கிளைச்செய்யுட்கள் பலவா மென்பதும் அறியப்படுவன. வச்சத் தொள்ளாயிரமும் ஒட்டக்கூத்தர் செய்த அரும்பைத் தொள்ளாயிரமும் இம் முத்தொள்ளாயிரநெறியே தழுவி யுரைக்கப்பட்டனவாமென ஊகிக்கப்படுகின்றன. இந்நூல் இந்நாட்டுத் தமிழ்க்குடிகளும் தமிழரசர்களுமே நிலவிய மிகப் பழையகாலத்தே இயற்றப்பட்டதாதலின், இதனுல் அத் தொன்மைக்கால வியல்புகள் பல நன்கறியலாகுமெனத் தெரிகின்றது. இத்தகைப் பெரிய பழையநூலின் ஒருசில செய்யுட்களே புறத்திரட்டென்னும் இனிய செய்யுட்டொகைநூலில் ஆங்காங்குக் கோக்கப்பட்டிருத்தலிற் காணப்படுதலல்லது இந்நூன்முழுதும் ஒருசேரக் காண்பது இக்காலத் தரிதாயிற்று. நல்லாசிரியர் தொல்லுரைகளில் தமிழ் மூவேந்தரிலொருவரைச் சிறப்பித்து இனிய வெண்பாயாப்பின் வரும் பாடல்கள் சில இம்முத்தொள்ளாயிரமா மென்று கருதப்படுகின்றன. அவை, புறத்திரட்டிற் காணப்பட்டனபோல, முத்தொள்ளாயிரமெனப் பெயர்குறிக்கப்படாமையின் ஒருதலையாகத் துணியப்படவில்லை. புறத்திரட்டின்கண்ணுள்ள அவ்வொருசில முத்தொள்ளாயிரச்செய்யுட்களும் தேனும் பாலுங் கன்னலும் அமுதுமாகித் திகழ்பவனவாதலின், அவற்றைப் பலரும் அறிந்து கூட்டுண்டு களிக்குமாறு, இச் 'செந்தமிழ்' வாயிலாக வெளியிடற் கவாவினேன். இந்நூலாசிரியர்பெயர் முதலியன ஒன்றும் இப்போது அறியலாவதில்லை. இந்நூற் கடவுள் வாழ்த்துவெண்பாவாலும் புகழின்கணுள்ள 'மடங்காமயிலூர்தி' 'செங்கணெடியான்' என்னும் வெண்பாக்களாலும் இவர் சமயக் கோட்பாட்டிற் சைவராவர் எனக் கருதுகின்றேன்: ஈண்டு வெளிப்படும் இம் முத்தொள்ளாயிரச் செய்யுட்கள் இச்சங்கத்துக்குக் கிடைத்த புறத்திரட்டுப் பிரதிகளினின்று திரட்டப்பட்டன. இவற்றுள் இன்பப்பகுதிபற்றிய இன்பொருட்பாடல்கள் சென்னையிலிருக்கும் தமிழ்ப்பண்டிதர்ப் ருமம் ஸ்ரீ தி-வேங்கடராமையங்காரவர்களுடைய புறத்திரட்டுக் காமத்துப்பால் ஏட்டிலும், மதுரைத் தமிழ்ச்சங்கத்துச் சைவநூற்பரிசோதகர் ஸ்ரீமத் ரா-சுப்பிரமணியக் கவிராயரவர்களுடைய புறத்திரட்டேடட்டிலும் இருந்தன.

இங்ஙனம்,

ரா. இராகவையங்கார்,

கொற்கைப்பாண்டியபீடாசிரியர்.

ஸ்ரீ:

கடவுள்துணை.

முத்தொள்ளாயிரச் செய்யுட்கள்.

கடவுள்வாழ்த்து.

க மன்னிய நாண்மீன் மதிகனலி யென்றிவற்றை
முன்னம் படைத்த முதல்வனைப்—பின்னரு
மாதிரையா ஞதிரையா னென்றென் றயர்வுறுமீ
யூர்திரைநீர் வேலி யுலகு.*

நாடு.

உ அள்ளற் பழனத் தரக்காம்பல் வாயவிழ
வெள்ளத்திப் பட்ட தெனவெரீஇப்—புள்ளினத்தங்
கைச்சிறகாற் பார்ப்பொடுக்குங் கவ்வை யுடைத்தே...
கச்சிலைவேற் கோக்கோதை நாடு.

ங நந்தி னிளஞ்சினையும் புன்னைக் †குவிமொட்டும்
பந்த ரிளங்கமுகின் பாளையுஞ்—சிந்தித்
திகழ்முத்தம் போற்றோன்றுஞ் செம்மற்றே தென்ன
னைகமுத்த வெண்குடையா ஞடு.

ச காவ லுழுவர் களத்தகத்துப் போரேறி
‡ நாவலோ§ வென்றழைக்கு நாளோதை—காவலன்றன்

---

* இதன் பின்னடியிரண்டையும் நீலகேசித்தெருட்டுக் கடவுள்வாழ்த்துரையிற் சமயதிவாகரமுனிவர் மேற்கோள்காட்டியுள்ளார். 'என்றென்றயருமால்' எனவும் பாடமுண்டு.

† 'கருவிமொட்டும்' எனவும் பாடம்.

‡ "இதனுள் 'நாவலோ' என்புழி உயிரளபெடை [illegible] ளோடு மாறுகொள்ளாதுநின்று அலகுபெற்றமையான்" [illegible] விருத்தி (சூத்திரம். ஈ).

§ 'வென்றிழைக்கு' [illegible]

மதுரை மாநகர்ப் பொதுநூல் நிலையம்

மாறன் பொறையனார் இயற்றியது

ஐந்திணையைம்பது

மூலமும் உரையும்.

இவை,

ஸேதுஸ்மஸ்தான வித்துவான்

ரா. இராகவையங்காரால்

பரிசோதிக்கப்பட்டன

7468

செந்தமிழ்ப் பிரசுரம்—க.

மூன்றாம் பதிப்பு.

மதுரைத்

தமிழ்ச்சங்கமுத்திராசாலை.

1935

[இரட்டிலை விலை—4]

ஸ்ரீ :

இப்புத்தகத்தில் அடங்கியவை.

க.	முதற்பதிப்பின் முகவுரை ...	...	க—சு
உ.	விஷயசூசிகை ...	...	...	எ—அ
ங.	ஐந்திணையைம்பது மூலமும் உரையும் ...		க—உ0
	(1) மூல்லை ...	...	க—ச
	(2) குறிஞ்சி ...	...	ஞ—அ
	(3) மருதம் ...	...	ங—கஉ
	(4) பாலை ...	...	கங—கஙு
	(5) கெய்தல் ...	...	கஎ—உ0
ச.	செய்யுண்முதற்குறிப்பகராதி ...	...	உக
ஞ.	அரும்பத அகராதி ...	...	...	உஉ—உச

ஸ்ரீ:

முதற்பதிப்பின் முகவுரை.

ஐந்திணையைம்பது என்பது கடைச்சங்கம் மருவிய பதினெண் கீழ்க்கணக்குநூல்களுள் ஒன்று. கீழ்க்கணக்கு நூல்களாவன;— க-நாலடி, உ-நான்மணிக்கடிகை, ங-இனியது நாற்பது, ச-இன்ன நாற்பது, ஞ-களவழிநாற்பது, ட-கார்நாற்பது, எ-ஐந்திணையைம் பது, அ-ஐந்திணையெழுபது, கூ-திணைமொழியைம்பது, கo-திணை மாலை நூற்றைம்பது, கக~திருக்குறள், கஉ-திரிகடுகம், கங-ஆசாரக் கோவை, கச-பழமொழி, கஞ-சிறுபஞ்சமூலம், ககூ-முதுமொழிக் காஞ்சி, கஎ-ஏலாதி, கஅ-கைந்நிலை என இவை; இதனை,

*"நாலடி நான்மணி நானாற்ப தைந்திணைமுப்
பால்கடுகங் கோவை பழமொழி—மாமூல
மெய்ந்நிலைய காஞ்சியோ டேலாதி யென்பவே
கைந்நிலைய வாங்கீழ்க் கணக்கு"

என்னும் வெண்பாவினு லறிந்துகொள்க. 'நானாற்ப தைந்திணை' என்புழி நானாற்பது, நாலைந்திணை என வுரைக்க. 'கீழ்க்கணக்கு, நாலடி.....மெய்ந்நிலைய காஞ்சியோடு ஏலாதி கைந்நிலையாமென்ப' என்க. கணக்கு-மேற்கணக்கு கீழ்க்கணக்கு என இருவகைப்படும். ஐம்பதுமுதல் ஐந்நூறிறுதியாக ஐவகைப்பாவானும் வருவது மேற் கணக்கெனப்படும். அவ்வகையெண்ணில் அறம்பொருளின்பங்க ளைப்பற்றி வெண்பா ஒன்றுமே வருவது கீழ்க்கணக்கெனப்படும். இவற்றிற் கிலக்கணம்;—

"மேல்கீழ்க் கணக்கென விருவகைக் கணக்கே"

---

* இவ்வெண்பா, "நாலடி நான்மணி நானாற்ப தைந்திணைமுப், பால்கடுகு கோவை பழமொழி—மாமூல், மின்னிலைய காஞ்சியுடனேலாதி யென்பவே, கன்னிலைய தாகுங் கணக்கு" என ஆற்வார்திருமகளிர்க் கிவை பழையதோர் திருக்குறளுரையேட்டுமுகத்து எழுதப்பட்டுள்ளது. இப் பாடத்து ஐந்திணையென்பது ஐந்து திணைநூல்களை யல்ல; அவை ஐந்தி னையைப்பற்றிய முதலிய நான்கும், கைந்நிலையும் ஆம்.

முதற்பதிப்பின் முகவுரை.

"மேற்கணைக் கெனவுங் கீழ்க்கணைக் கெனவும்
பாற்படும் வகையாற் பகர்ந்தனர் கொளலே"

"அகவலுங் கலிப்பா வும்பரி பாடலும்
பதிற்றைந் தாதி பதிற்றைம்ப தீறு
மிருந்துடன் றொகுப்பது மேற்கணைக் கெனவும்
வெள்ளைத் தொகையு மவ்வகை யெண்பெறி
னெள்ளரு கீழ்க்கணைக் கெனவுங் கொளலே"

"ஐம்பது முதலா வைந்நூ றீறு
வைவகைப் பாவும் பொருணெறி மரபிற்
றொகுக்கப் படுவது மேற்கணக் காகும்"

"அடிநிமிர் பில்லாச் செய்யுட் டொகுதி
யறம்பொரு ளின்பம் வகுத்த லவ்வத்
திறம்பட வுரைப்பது கீழ்க்கணக் காகும்"

எனவரும் பன்னிருபாட்டியற் சூத்திரங்களா லுணர்க. கீழ்க்க
கிற்கு வெண்பாவேயன்றி அகனினமும் அம் என்பது முதலொழு
காஞ்சியில் "ஆர்கலி யுலகத்து மக்கட் கெல்லா—மோதலிற் சிறந்த
றொழுக்க முடைமை" என வெண்செந்துறை வந்தவாற்று னத்
மேற்கணைக்கிற்கே "ஐம்பது முதலா வைந்நூ றீறு" எனவு
"பதிற்றைந் தாதி பதிற்றைம்ப தீறு" எனவும் சிறுமைக்கும் பெ
மைக்கும் எண்வரையறைகூறிக் கீழ்க்கணக்கிற்கு "அவ்வ
யெண்பெறின்" எனவும், "அடிநிமிர் பில்லாச் செய்யுட் டொகு
எனவும் ஓதினமையாற் கீழ்க்கணக்குச் சிறுபான்மை ஐம்ப
குறைந்தும் ஐந்நூற்றின் மிக்கும் வருமெனக்கொள்க. இனிய
இன்னா, களவழி, கார் நான்கும் ஐம்பதிற் குறைந்துவந்தன. மு
பால் ஐந்நூற்றின் மிக்குவந்தது. இக் கீழ்க்கணக்குநூல்களை
தாயபனுவல் என்னும் பெயராற் கூறுவர் எனவும், இவை அ
பொருளின்பமென்னு மூன்றற்கு மிலக்கணஞ்சொல்லுவ எனவு
வேறிடையிடை யவையன்றியுந் தாவய்ச்செல்வது முண்டெனவு
இச்செய்யுட்கள் அடிநிமிராது இரண்டடிமுதல் ஆறடியிறுதிய

வருவன எனவும், அவை எழுத்திணைகன்றுகாட்டாது சில எழுத் திணன் வருவன எனவும், அவை யெண்ணுச் சுருங்கிச் சிலவாகவரு வன எனவும், "வனப்பியருளே" என்னுஞ் செய்யுளியற்சூத்திரத் துப் பேராசிரியரும் நச்சினர்க்கினியரும் உரைத்தவாற்று ணுணர்ந்து கொள்க. "சின்மென் மொழியாற் றுய பணுவலோ, டம்மை தானே யடிநிமிர் பின்றே" என்ற தொல்காப்பியநெறியேபோற்றி இப்பன் னிருபாட்டியற்கண்ணும் "அடிநிமிர் பில்லாச் செய்யுட் டொகுதி" எனக் கூறியதுங் காண்க. இவ்வைந்திணையெம்பது அறம்பொரு ளின்பமென உடனெண்ணப்பட்ட மூன்றனுள் இன்பப்பகுதிபற்றிச் சிலவாய மெல்லிய சொற்களால் நான்கடியினேனுமல் ஐம்பதாய் எண்ணுச்சுருங்கி வெண்பாவான் வந்தமையாற் கீழ்க்கணக்காய வாறு கண்டுகொள்க.

இஃது அவ்வின்பப்பகுதிக்குரிய இருத்தல், புணர்தல், ஊடல், பிரிதல், இரங்கல் என்னும் ஐவகை ஒழுக்கங்களையும் முறையே முல்லை, குறிஞ்சி, மருதம், பாலை, நெய்தல் என்னும் பெய ரான் ஐந்திணையாகவைத்து ஒவ்வொருதிணைக்கும் பத்துப்பத்து வெண்பாவாகக் கூறுதலான் ஐந்திணையெம்பது எனப் பெயர்பெற் றது. இந்நூலுள் ஐந்திணையையும் முல்லைமுதலாக நெய்தலிறு தி யாகவைத்தது, பெரும்பான்மையும் தொல்காப்பியத்து,

"மாயோன் மேய காடுறை யுலகமும்
சேயோன் மேய மைவரை யுலகமும்
வேந்தன் மேய தீம்புன லுலகமும்
வ்ருணன் மேய பெருமண லுலகமும்
முல்லை குறிஞ்சி மருத நெய்தலெனத்-
தொல்லிய முறையாற் சொல்லவும் படுமே"

என்னும் அகத்திணையியற்சூத்திரத்து ஓளாதப்பட்டமுறைமை பற்றியதாகும். மற்று ஈண்டோதப்படாத பாலையையும் உடன் வைத்ததென்னையெனின்;—அது, "நிலம் தான்மூன்றாகக்கூறிற் பாலைக்கு நிலமின்றெனின், அற்றன்று: 'புணர்தல் பிரிதலிருத்த

லிரங்க, ஓட லிவற்றி னிரிந்த மென்னிலை, தேருங் காலைத் திணை குரிப் பொருளே' (தொல். பொருள். அகத். கசு.) என நால்வகைநில துங்கொண்டு உரிப்பொருளை மேற் பிரிதலும் உரிப்பொருளா ஆறினியல் கொண்டார், அப்பிரிவு நான்குநிலத்திடையும் பொதுவா மையின்மையுமென்று கருதி; ஆகலின், ஈண்டுப் பாலைத் திணையையு நிலமாக ஆறினியல் நல்லந்துவனும் மேலுந்நாளென்று கூறுக" எ ஆறினியல் நச்சினார்க்கினியர் தொல்காப்பியனைமுகத்துக் கூறியவாற்ற தணைசெய்யுமிடம். இனி இங்ஙனமாயினார்க்குக் காரணம் வருமாறு;- இவ்வொழுக்கமெல்லாம் இல்லறவாழ்வின ஒழுக்கமாதலின் க பொதுவொருந்திக் கணவன்மனைமாட்சியாய இல்லிருந்து நல்லற செய்தன் மகளிரதியற்கை முல்லையாதலின் அது முற்கூறப்பட்டத புணர்தலின்றி இல்லறம் நிகழாமையின் புணர்தற்பொருட்டாகி குறிஞ்சி அதன்பின் வைக்கப்பட்டது. புணர்ச்சியின் ஊடனிகழ் தலின் அதன்பின் மருதம் வந்தது. அம்மருதத்து நிகழும் பாட் தையிற்பிரிவுபோலப் பிரிவொப்புமைகொண்டு பிரிதலையின பாலை அதன்பின்னையது. பிரிவுபற்றி உளதாகும் இரங்கலையின மெய்ந்நி அப்பாலைக்குப் பின்னின்றது என்பது. இவ்வைவகை நிலையினும் நிகழ் பலவற்றை இந்நூல் சுருங்க விளங்க வைக்கும். இந்நூற் பாயிரத் துள் "ஐந்திணை யைம்பது மார்வத்தி னேதாநாம், வெந்நிறற் சோக தவர்" எனக் கூறியவாற்றானே இதன்பெருமை நன்கறியத்தக்கது. இதன்கண்ணுள்ள பாடல்கள் பல நச்சினார்க்கினியர் முதலிய நூ லாசிரியர்களாற் றம்முரைகளில் எடுத்தாளப்பட்டுள்ளன.

இந்நூலாசிரியர் மாறன்பொறையனார் என்பார். பாண்டியன் பெயரும் சேரன்பெயருமே இவர்க்குப்பெயராக இணைந்திருத்தலின் இவர் அவ்விருபேரரசர்க்கும் நட்பினராம் உரிமையுடையரோ என ஊகிக்கப்படுகிறார். மாறன்-பாண்டியன்; பொறையன்-சேரன். கோப்பெருஞ்சோழற்கும் பிசிராந்தையார் என்னும் புலவர்க்கும் உளதாகிய நட்புரிமையாற் பிசிராந்தையார் தம்பெயரைப் பிறர்க்குவ

சொல்லும்பொழுது தம்பெயர் சோழனென்று அவ்வரசன்பெய
ரையே தம் பெயராகச் சொல்லியதனையும் எண்ணிக் காராய்ந்து
கொள்க. அதனைத் "தன்பெயர் கிளக்குங் காலை யென்பெயர்,
பேதைச் சோழ னென்னுஞ் சிறந்த, காதற் கிழமையு முடையன்"
எனவரும் புறப்பாட்டான் (உகசு) அறிக. இவர் தம்நூன் முதற்
செய்யுளில் திருமாலையும், முருகக்கடவுளையும், சிவபிரானையும்
எடுத்தோதுதலான், இவர் வைதெறிப்பட்ட ஒழுக்கினரென்பதும்
அறியலாகும். இவரது சொற்பொருள் வழக்குக்களும், உவமைக
ளும், பிறவும் மற்றைக் கீழ்க்கணக்குநூல்களிலும் பத்துப்பாட்டி
லும் எட்டுத்தொகையிலும் திருச்சிற்றம்பலக்கோவையிலும் ஆங்
காங்குக் காணலாகும். இந்நூற்கண்ணுள்ள வெண்பாக்கள் ஒவ்
வொன்றன்பின்னும் தனித்தனியே கருத்துரையும் பொழிப்புரை
யும் உள்ளன. அவற்றை இயற்றியோர்பெயர் முதலியன ஒன்றும்
தலைப்படவில்லை. அவ்வுரைகளை யியற்றியவர் உரையும் முற்
றுங்கிடைத்திலது. இவ்வுரைகளுள்ளதிகமுடைய ஐந்திணை
யைம்பதுரையின் பிரதியும் இப்பதிப்புக்குக் கிடைத்தன. இவை
இவ்வுரையைத் தனிப்பிரதியாக வெழுதியதும் அக்கிராசனாதிபதியுமாகிய
தலைமைத்தமிழ் ஜூரிக்தார் ஸ்ரீமான்-பொ. பாண்டித்துரைத்தேவரவர்
கள் தன்முயற்சியாலே பெறப்பட்டன. இவற்றை உதவிய பேருப
காரிகள் பெயரினிக்வான்: மகா-ரா-ரா ஸ்ரீ தி. செல்வக்கேசவராய
முதலியாரவர்கள் எம். ஏ., திருமயிலை வித்துவான்: மகா-ரா-ரா-ஸ்ரீ
சண்முகம்பிள்ளையவர்கள் என்னும் இவர்கள். இவ்விருபிரதிகளி
னும் உள்ளவாறே இந்நூல் பதிப்பிக்கப்பட்டது.

இந்நூல் முல்லையில் "மின்னுமுழக்கும்" என்பது முதலாகப்
"பிரிந்தவர்மேனி" என்பதிறுதியாக உள்ள வெண்பாக்களாறும்
"அணிநிறமஞ்ஞை" என்பதுபோலப் 'பருவங்கண்டழிந்த நலை
மகள் தோழிக்குச்சொல்லியது' ஆயிற் செவ்வனம் இயைவன
வாகும். அவ்வாறன்றிப் பிரதிகளிற் 'பருவங்கண்டழிந்த

திக்குந் தோழி சொல்லியது' எனவேயுள்ளது. தலைவியது ஆற்றாமைக்குக் காரணமாய காரும் மாலையும் சிறுகுழலோசை முதலியவும் தோழிகண்டு கேட்டுத் தானும் ஆற்றுளாய்க் கூறி ஆற்றுவித்தலென ஒருகாற் கொள்ளவுமாமென்று கருதி அதனையான் மாற்றுந் துணிந்திலேன்.

இஃது இம்மதுரைத் தமிழ்ச்சங்கத்தினின்று வெளியாகின்ற "செந்தமிழ்"ப் பத்திரிகைக்குரிய முதற்பிரசுரமாவது. இவ்வாறே இதுகாறும் அச்சிடப்படாமலுள்ள பொருளாற் பெரியவும் அவற்றிற் சிறியவும் ஆகிய பண்டையோருரைத்த தண்டமிழ் நூல்கள் பலவற்றை இச்செந்தமிழ்வாயிலாக வெளியிடக் கருதியிருத்தலின், அப்பழைய வடிவுகளுடைய நல்லோர் அவற்றை இச்சங்கத்திற் கனுப்பியருளுமாறு அவரைப் பன்முறை வேண்டுகின்றேன்.

'அறிவு தந்தியு மறிவினுட் சீகண்மை
நெறியீ யுரையாசீ தா மற்று' (ஐந்திணையைம்பது-2)

'மிக்க மிகுபுகழ் நான்குபலோ தற்சேர்ந்தா
சொற்கங் கடைட்பிடியா நார்' (வெ, 48.)

இங்ஙனம்,

ஸேதுஸமஸ்தானவித்வான்,

ரா. இராகவையங்கார்

செந்தமிழ்பத்திராசிரியர்.

விஷய சூசிகை.

[எண்கள்-பாட்டெண்கள்.]

அருவி நறுவிரைகலந்திழிதல் 13
அருவியாடல் 13, 15
அருவியாடிக் கண்சிவத்தல் 15
அல்லகுறிப்படுதல் 49
அழல்போலத் தாமரையலிழ்தல் 25
அன்றில் செம்பூப்போலுஞ் சூட்டுடையது 41
ஆயன் குழலோசை 7
ஆனிரை 7
இளவேனி லின்பம்படயத்தல் 31
உடல் 30
கடம்பமர்ந்தான் 1
கடல் 44
களிறு பிடியைக் குளிப்பாட்டல் 32
காடெறிந்து நிலனினிளத்தல் 18
கார் 1—4
கிளியின்வாய் பவளம்போறல் 33
குதிரையைத் தேரிற்பூட்டல், மணி கூடலிழைப்பு 43 [யணிதல் 50
கூடல் 30
கூந்தல் அரன்மனல்போல்வது 27
கூந்தல் ஐவகை 27
கூந்தல்வெண்மரல்போலத்திரிதல் 27
கோற்சேரியி லுசிவிற்றல் 21
சந்தனச்சாந்து 24
சூரம் 32
சுணையிற் சிறுநீரைப் பிணையுண்ணவே ண்டிக் கலை பொய்யே யுறிஞ்சுதல் சூரியன்-தேரோன் 7 [38
தலைவன் இரவின்வருதல் 19
தலைவன் தேரூர்ந்து பரத்தையர் மனைக்குப்போதல் 28
தலைவன் நறுமேனி 30
தலைவனும் தலைவியும் உடன் போதல் 33
தலைவனைப் பிரிந்த மகளிர்கையிற் றொடி ஓடிவீழ்தல் 36
தலைவி தலைவன் முயங்கிப் புடை பெயர்காலத்தும் ஆற்றாளாதல் 39
தழையணி 14
தாழையினது பூநடுவுள்ள சோறு வெண்ணெய்போறல் 49
தினைகாத்தல் 12, 14
தென்றல் குளிரும்பருவத்து மினிதா [தல் 30
தேர் 26
தேர்போனவழியை நெண்டுசிதைத் தல் 42
தோழியர்சூழ முற்றத்தில் விளையா டல் 37 [டல் 35
நலம்புனைதல் 11
படைத்துமொழிதினெளி 44
பாக்கம் 12
பாகன் தூல்பயிறல் 10
பாணன் 21
பாணன் தலைவற்குத் தூதாய்த்திரி தல் 22 [தல் 25
பாலகன் குடுமி
பாலையில் ஆறலைப்போர் 34
பாலையில் வேட்டுவச்சாதி 34-35
பீர் 2
புண்ணிற்குக் காரமிடுதல் 24
புதுமணங்களின்முழவொலித்தல் 26
புன்னையரும்புபல்லிமுட்டைபோறல்
புனத்தின்கட் களைவொழுக்கம் 11[43
பேய்த்தேரை நீரெனக்கருதல் 36
பேய் நடுகல்நிழலி லுறங்கல் 35
பேய் நின்னந்தின்றல் 35
பொருண்மேற்பிரிதல் 35
மகளிர்க்குச் செல்சார்வு கொழுநர் 6
மகளிர் கவுண்மிசைக் கையூன்றல் 10
மகளிராகற்பு 10
மகளிர் பாவை, பந்து, கிளியுடைமை
மகளிர் மாந்தளிர்மேனி 15,45 [33
மகளிர் மீனுணங்கல்காவலும் புள்ளோப்புதல் 47

மகளிர் வண்டலிழைத்தல் 46 [44
மகளிர் வண்டலைக் கடல் சிதைத்தல்
மகளிர் வேங்கைப்பூக்கொய்தல் 15
மகளிராயம் 33
மகளிரைத் தெய்வம் வருத்தல் 20
மல்லரைவென்றவன் 1
மழலை 25
மறியறுத்து உதிரந்தூவல் 20
மாவேட்டம் 14
மான்போன்ற மதர்த்தகண் 13
மீனுணங்கல் 47
முத்தினை விளக்காகவிரும்பல் 46
முத்து 46, 48
முப்புரங்களை யெய்தவன் 1
முரசின்குரல்போற் காரிடித்தல் 4
முரசு 4
முருக்கரும்புவேங்கையுகிர்போறல் 31
முல்லைமுகைபோன்ற பல் 3
மொழி பால்போறல்
யானை புலிக்கு வெருவுதல்
வதுவைவிழவு
வம்பமழை
வயல்செய்தல்
வலைவீசி மீன்பிடித்தல்
வள்வார்முரசு
வள்ளிகள்
வளை
வளைத்தோள்
வாட்கண் 9, 28,
வெண்பாவில் ஐஞ்சீரடிவந்தது
வெறியாடல்
வேங்கைப்புலி
வேங்கைப்பூ
வேல்போலுமின்னுருகல்
வேலன்

ஸ்ரீ:

கடவுள் துணை.

மாறன்பொறையனார்

இயற்றிய

ஐந்திணையைம்பது

மூலமும் உரையும்.

பாயிரம்.

*பண்புள்ளி நின்ற பெரியார் பயன்தெரிய
வண்புள்ளி மாறன் பொறையன் புனைந்தியாத்த
ஐந்திணை யைம்பது மார்வத்தி னேதாதாம்
செந்தமிழ் சோரா தவர்.

க.—முல்லை

மல்லர்க் கடந்தா னிறம்போன் றிருண்டெழுந்த
செல்வக் கடும்பமர்ந்தான் வேண்மின்னி—நல்லா
யியங்கெயி லெய்தவன் மூர்பூப்ப வீதோ
மயங்கி வலனேருங் கார்.

என்பது தலைமகளைத் தோழி பருவங்காட்டி வற்புறுத்தியது.

இதன்பொருள். மல்லரைவென்றான் நிறம்போல இருண்டெழுந்த செல்வக் கடும்பத்தாரினை விரும்பினான் வேண்மின்னி போல மின்னி யியங்கின்ற மும்புரங்களை யெய்தவன் கொண்மூர்த்தான் பூப்ப மயங்கி வலனேர்கின்றது கல்லாய்! இக்கார் என்றவாறு. (க)

---

* இச்செய்யுள் சங்கநூற்றொகையுள் முல்லையில் இருபதாவது காணப்படுகின்றது.

2 *அணிநிற மஞ்ஞை யவகை விரங்கி
மணிநிற மாமலைமேற் றூழ்ந்து—பணிமொழி
கார்நீர்மை கொண்ட கலிவானங் காண்டொறும்
பீர்நீமை கொண்டன தோள்.

எ-து பருவங்கண்டழிந்த தலைமகள் தோழிக்குச் சொல்லியது

(இ-ள்) அழகிய நிறத்தையுடைய மயில்களழைக்க முழங்கி நீல நிறத்தையுடைய மாமலைகளின்கட் படிந்து, மெல்லிய மொழியையுடைய கார்காலத்துத்தன்மையைக்கொண்ட மிக்க முகில்களைக் காணுந்தோ, எண்றோள்கள் பீரின்தன்மையைக்கொண்டன எ-று.

3 மின்னு முழக்கு மிடியுமற் றின்ன
கொலைப்படை சாலப் பரப்பிய முல்லை
முகைவென்ற பல்லிணர் யில்லையோ மற்று
நமர்சென்ற நாட்டுளிக் கார்.

எ-து பருவங்கண்டழிந்த கிழத்திக்குத் தோழி சொல்லியது.

(இ-ள்) நமர்சென்றநாட்டின்கண் மின்னும் முழக்கும் இடியும் எல் சொல்லப்பட்ட இக்கொலைப்படைகளை நிரம்பப் பரப்புதற்கு இக்காரில்லே முல்லைமுகைவென்ற பல்லிணரில்லை! எ-று.

4 உள்ளார்கொல் காதல ரொண்டொடி நந்திறம்
வள்வார் முரசின் குரல்போ லிடித்துரறி
கல்லார் மனங்கவர்ந் தோன்றிப் பணிமொழிமைக்
கொல்வாங்குக் கூர்ந்ததிக் கார்.

இ து வு ம து .

(இ-ள்) நந்திறத்தைக் காதலர் உள்ளார்கொல்லோ ஒண்டொடி! ஏ-லார்ந்த முரசின்குரலிணைபோல இடித்து முழங்கித் தங்கொழுநனை பிரிந்த கல்லார் மனங்கவரும்படி தோன்றி நங்காதலர் சொன்ன இன்சொற்களை நினைப்பதுபோல மிக்கது இக்கார் எ-று.

---

*இச்செய்யுளைப் பருவங்கண்டு பெருமகன் புலம்பற்கு உதாரணங்காட்டினர் அகப்பொருள்விளக்கவுரைகாரர் (களவியல். 54).

5 கோடெயர் தோற்ற மலைமே லிருங்கொண்மூக்
கூடி நிரந்து தலைபிணங்கி—யோடி
வளிகலந்து வந்துறைக்கும் வானங்கண் டோறும்
துளிகலந்து வீழ்ந்தருங் கண்.

இ து வு ம து .

(இ-ள்) குவடுகளுயர்ந்த தோற்றத்தையுடைய மலைகண்மேற் பெருமுகில்கள் திரண்டு மிடைந்து ஒன்றோடொன்று பிணங்கியோடிக் காற்றொடு கலந்து பெய்கின்ற விசும்பு காணுந்தோறும் துளிகலந்து பெய்யாநின்றன என்கண்கள் எ-று. (இ)

6 முல்லை நறுமல ரூதி யிருங்கும்பி
செல்சார் வுடையார்க் கினியவாய்—நல்லாய்மற்
றியாருமி னெஞ்சினே மாயி யுறைவேமை
யீரு பிருண்மாலை வந்து.

இ து வு ம து .

(இ-ள்) நல்லாய்! இருங்கும்பி முல்லைநறுமலரை ஊதுதலாற் றமக்குச் செல்சார்வாகிய சொழுநரையுடையார்க்கு இன்பத்தைச் செய்வனவாய், யாரும் துணையில்லாத நெஞ்சினேமாகி உறைவேமை இருண்மாலை வந்து சாராநின்றன எ-று. (கூ)

7 *தேனேய் மலைமறைந்த செக்கர்கொள் புன்மாலை
யானம்பி னுப வுலவந்தூ துத்—தீர்சால்
சிறுகுழ லோசை செறிதொடி வேல்கொண்
டெறிவது போலு மெனக்கு.

இ து வு ம து .

(இ-ள்) தேனினையுடை பகலவன் மலையின்கண் மறைந்த செக்கர்கொண்ட புன்மாலையின்கண் ஏறிய ஆனிரையின்பின்னே ; ஆயன் விரும்பி ஊதுஞ் சிலமைந்த சிறுதுளையினோசை, வேல்கொண்டு எறிவதுபோலாநின்றது செறிதொடி! எனக்கு எ-று. (எ)

---

* இதனை அகப்பாட்டினுள் இருவகைத்தலைமக்களும் வாராதொழிந்ததற்குக் காரணங்காட்டினர் அகப்பொருள்விளக்க உரைகாரர் (ஒழி. 40).

8 பிரிந்தவர் மேனிபோற் புல்லென்ற வள்ளி
பொருந்தினர் மேனிபோற் பொற்பத்—திருந்திழாய்!
வானம் பொழியவும் வாரார்கொ லின்னுத
கானங் கடந்துசென் றார்.

இ து வு ம து .

(இ-ள்) தூணவரைப்பிரிந்தார்மேனிபோலப் புற்கென்ற வள்ளி, தூணவரோடு பொருந்தியிருந்தார்மேனிபோலப் பொலிவுதோன்றும்வ, வானம்பொழியவும் வாரார்கொல்லோ, திருந்திழாய்! இன்னுதகானங்கடந்துசென்றார் எ-று.

9 வருவர் வயங்கிழாய் வாளொண்க ணீர்கொண்
டுருகி யுடன்றழிய வேண்டா—நெரிதேற்
பைங்கொடி முல்லை பனிமுறும் பின்றன
வம்ப மழையுறக் கேட்டு.

எ-து பருவமென்றழிந்த கிழத்தியைத் தோழி பருவமன்றென் வற்புறுத்தியது.

(இ-ள்) விளங்கிய இழையினையுடையாய்! கந்தாதலர் பருவம் வந்த வருவர்; வாளினை ஒக்கும் நின்கண் நீர்கொள்ள நீ யுருகி மாறுபட்டு அழ வேண்டா; ஆராய்வாயாயிற் றன்பருவமல்லாமையின் நிலையில்லாத முழ கேட்டுப் பைங்கொடிமுல்லைகள் அழிதருமழை யுறுதன்றனகாண் எ-று.

10 தூணவின்ற பாகதேர் கொவ்விதாச் செல்றீக
தேனவின்ற கானத் தெழிலேகுக்கித்—தூணவின்ற
கற்புத்தாள் வீழ்த்துக் கவுண்மிசைக் கையூன்றி
நிற்பா னிலையுணர்கம் யாம்.

எ-து வினைமுற்றிய தலைமகன் தேர்ப்பாகற் கேட்பச் சொல்லியது

(இ-ள்) தூண்பயின்ற பாகனே! நின் தேர் கடிதாகச் செல்வதாக; தேன் பயின்ற காட்டினது அழகை நோக்கித் தூண்பயின்ற கற்பென்னுநின் தாளினைச் செறித்து உயிர்காத்துக் கவுளின்மிசைக் கையூன்றிநிற்பானது நிலையை நாம் சென்று அறிவாம் எ-று.

மூல்லை முடிந்தது.

உ.—குறிஞ்சி.

11 பொன்னிணர் வேங்கை கவினிய பூம்பொழிஇ
ணன்மலை நாட னலம்புனைய—மென்மூலையாய்
போயின நின்னுள் புனத்து மறையிஇ
லேயிரு நின்றி யினிது.

எ-து பகற்குறிக்கட் டலைமகன் சிறைப்புறத்தானாகத் தோழி தலை
கட்குச் சொல்லுவாளாய்ச் செறிப்பறிவுறீஇயது.

(இ-ன்) பொன்போன்ற பூங்கொத்தையுடைய வேங்கைகள் அழகு பெற்ற பூம்பொழிலின்கண் வந்த நன்மலைநாடன் தினது நலத்தினைப் புனையக் கழிந்தன சிலநாள்; புனத்தின்கட் களவினள் எதிர்ப்பட்டோரின்றி இடை தூறின்றியே யினிதாக எ-று. (க)

12 *மால்வரை வெற்ப வணங்கு குரலேனல்
காவ லியற்கை பொழிற்கேம்பயம்—தூவடிநீள்
நோக்கமன் னாடிய பூந்தினைப் பொன்னினைப்பும்
பாக்க நினதென்ப மிடம்.

எ-து பகற்குறிவந்தும்படர்கின்ற தலைமகனைக்கண்ணளிற்றுத் தோழி செறிப்பறவுறீஇயது.

(இ-ன்) பெரிய குலைகளையுடைய வெற்பனே! வளைந்த கதிர்களையுடைய தினைகளையைக் காத்தல் யாம் தொழிலாதலால்; தூவடிகள் பூவின்கண்களைக் கழுவுகின்ற காட்டினையுடைத்தாய்ப் பொன்னிளையும் இப்பாக்கம் எம்முடைய இடம், ஆதலால், நீ யிங்கே வரக்கடவன் அருவாயாக எ-று. (உ)

13 கானக நாடன் கலவானென் றேனென்று
மானமர் கண்ணாய் மயங்கனீ—நானும்
கலந்திழியு நன்மலைமேல் வாலருவி யாடப்
புலம்பு மகன்றகில் லா.

எ-து சிறைப்புறத்தானாகத் தலைமகனை யியற்பழித்ததோழிக்குத் தலைமகள் இயற்படமொழிந்தது.

---

*இதனைப் பாங்கி தலைமகன்மூன் னின்று செறிப்பறிவுறுத்தற் குதாரணமாகக் காட்டினர் அகப்பொருள்விளக்கவுரைகாரர் (கள. 38); 'பாக்க முதலென்ப மிடம்' என்பது அதனுட் கண்ட பாடம்.

(இ-ள்) கானகநாடன் எல்லோளைப் புணராணெண்ணுசொல்லி, போன்ற மதர்த்த கண்ணினையுடையாய்! [1]அறிவுகெடாதொழிவா பல நாவிரைகளையுங் கலந்து இழியாநின்ற கண்மலையின்கண் உள்ள வ அருவியையாட எண்ணுள்களின்கட் புலம்பும் நீங்கி நில்லாது எ-று.

14 * பூணூர் தழையல்குற் பொன்னெண்ணுய் சாரற்
றினைகாத் திருந்தேம்யா மாக—வினைவாய்த்து
மாவினவு வார்போல வந்தவர் நம்மாட்டுத்
தாம்வினவ லுற்றதொன் றுண்டு.

எ-து தோழி தலைமகட்கு மெலிதாகச்சொல்லிக் குறைநயப்பு கூறியது.

(இ-ள்) செய்யப்பட்ட பூந்தழைகளான் அணியப்பட்ட அல்குல யுடைய பொன்னன்னாய்! மலைச்சாரலின்கட் டினையைக் காத்து நாம் இருந் மாக, வேட்டைவினையை வாய்க்கச்செய்து ஒரு மாவினவுவார்போல வ ரொருவர் நம்மாட்டுத் தாம் வினவலுற்றது பிறிதொன்று உண்டு எ-று.

15 †வேங்கை கமழுமலர் வெற்பிடை யாங்கொய்து
மாந்தளிர் மேனி வியர்ப்பமற்—றுங்கென்னைத் தும்
பாய்த்தருஞி யாடினை மாகப் பணிமொழிக்குச்
சேந்தனைவாஞ் சேயரிக்கண் டாம்.

எ-து பகற்குறிக்கட் டலைமகன் சிறைப்புறத்தானாகத் தோழி தான் கேட்டதற்கு மறுமாற்றஞ்சொல்லுவாள்போலப் பகடத்துமொழிகிளவி யான் வரைவுகடாயிற்று.

(இ-ள்) வெற்பின்கண் வேங்கைமலரை யாங் கொய்து நின்மகள் மா தளிர்மேனி வியர்த்தலான் அவ்விடத்து எல்லாவருஞியும் பாய்ந்தாடிவே மாகப் பணிமொழியையுடையாட்குச் சேயரிக்கண் டாம் சிலந்தனகாண் எ-று.(

[டீ-ம்] [1]அறிவுகோடா தொழிவாயாக என்பது சங்கத்து எட்டுப்பிரதியிற் கண்ட பாடம்.

*இதனை, 'மறைந்தவளருகத், தன்செறி மன்னோர் முதன்முனை நிலை இப் பின்னிலை பலசேறு விகழும் மருங்கினும்' என்பதற் குதாரணங்காட்டின நச்சினார்க்கினியர் (தொல். பொருள். கள. 23).

† இதனை, 'ஐயச் செய்கை தாய்க்கெதிர் மறுத்துப், பொய்யென மாற்றி மெய்யுறு கொடுப்பினும்' என்பதற்கு உதாரணங்காட்டினர் நச்சினார்க்கினியர் (தொல். பொருள். கள. 23); 'சேந்தனவாஞ் சேயரிக்கண்' என்பது அதனுட் கண்ட பாடம்.

16 *கொடுவரி வேங்கை பிணைத்தக்கோட் பட்டு
மடிசெவி வேழ மிரீஇ—யடியோசை
யஞ்சி யொதுங்கு மதருள்ளி யாரிருட்
டுஞ்சா சுடர்த்தொடி கண்.

எ-து. இரவுக்குறிவந்துபோரும் தலைமகனைக் கண்ணுற்றுநின்ற தோழி வரைவுகடாயது.

(இ-ள்) கொடுவரிவேங்கையாற் கோட்பட்டுப் பிணைத்து மடிந்த செவியையுடைய வேழம் பிரிந்து தன் னடியோசையைப் புலி கேட்குமென்று அஞ்சி மெல்ல நடக்கும் வழியை நினைந்து, கங்குலின்கட் சுடர்த்தொடியையுடையாள் கண் துயிலா எ-று. (ஈ)

17 மஞ்சிவர் சோலை வளமலை நண்ணுட
லெஞ்சாது நீயருந்தி யேன்றனென்னெனா—யுற்றித்
திருவொடுங்கு மெண்சாயற் றெங்கோதை மாதர்
முருவொடுங்கு மூள்ளுருகி நின்று.

இ து வு ம து.

(இ-ள்) முகில் படராநின்ற சோலையையுடைய வளமலைநாடனே! ஒரு காள் ஒழியாது இரவின்கண் நீ வாராநின்றாய் என்ன எண்ணித் திருவொடுங்கு மென்சாயற் றெங்கோதை மாதர் அஞ்சி யுள்ளுருகிநின்று தன்மேனி மெலியா நின்றாள் எ-று. (எ)

18 †எறிந்தெமர் தாழுழுத வீர்ங்கா லேனல்
மறந்துங் கிளியினமும் வாரா—கறங்கருவி
மாமலை நாட மடமொழி தன்கேண்மை
நீமறவ னெஞ்சத்துக் கொண்டு.

---

*இதனை, 'ஆற்றது தீமை யறிவுறு கலக்கமும்' என்பதற் குதாரணங்காட்டினர் நச்சிஞர்க்கினியர் (தொல். பொருள். கள. 23).

†இதனை 'ஒப்படைக் கிளவிப் பாங்கிக் கண்ணும்' என்புழி எடுத்தோதிஞர் நச்சிஞர்க்கினியர் (தொல். பொருள். கள. 23); 'இன்குரலேனல்' என்பது அதனுட்கண்ட பாடம். அகப்பொருள்விளக்கவுரைகாரர், பாங்கி தலைமகனை முன்னின்று செறிப்புணர்த்தி ஒம்படைகாத்தற்கு உதாரணங்காட்டினர் (களவியல். 38).

எ-து தோழி செறிப்புறிவுறீஇத் தலைமகனை வரைவுகடாயது

(இ-ள்) காடெறிந்து எமர்தா முழுத சர்ங்குரலேனலின்கண் மறனும் கிளியினமும் வாரா, நாங்களும் வாரோம்; கறங்கருவியினையுடைய மாடனே! மடமொழியோடு நீ கொண்ட கேண்மையை நின்னெஞ்சு கொண்டு மறவாயாக எ-று.

19 *நெடுமலை நண்ணுட நீள்வே லுணையாக்
கடுவிசை வாலருவி நீந்தி—நடுவிரு
ளிஞ்ஞு வதர்வர வீர்ங்கோதை மாதரா
ளொஞ்ஞுவர வெஞ்ஞுமென் னெஞ்சு.

எ-து தோழி இரவுக்குறியின்கண் நெறிவிலக்கி வரைவுகடா

(இ-ள்) நெடுமலை நண்ணுடனே! நீள்வேலை துணையாகக் கடிய விசையுடைய வாலருவியை நீந்தி, நடுவிருளின்கண் இன்னுத வழியின்கண் ஈர்ங்கோதைமாதரான் எப்பெற்றியாளோ என்று தடுமாறுதிற்கும் எம்மென எ-று.

20 †வெறிகமழ் வெற்பனென் மெய்ந்நீங்மை கேண்ட
நறியாண்மற் றஞ்ஞை வணங்கணங்கி னென்று
பறியீர்த் தகிர்த்தாய் வேலற் றரீஇ
வெறியோ டலமருப் பாய்.

எ-து தலைமகள் தோழிக்கு அறத்தொடுநின்று வெறிவிலக்கவே டும் உள்ளத்தாளாய்ச் சொல்லியது.

(இ-ள்) விரைகமழாநின்ற வெற்பன் எனதுமெய்யின்கண் உள்ளமையைக் கொண்டது அறியானாய், அற்தோ தெய்வம் என்னை வருத்தி, என்று வேலனைத் தந்து மறியை யறுத்து உதிரத்தைத் தூவி வெறியோ வருந்தாநின்றுள் அன்னை எ-று.

குறிஞ்சிமுடிந்தது.

---

*இதனை இரவுக்குறி விலக்கியது என்றார் நச்சினார்க்கினியரும் (தொ. பொரு. கள. 21); 'கிம்வேல்' என்பதும் அதனுட்கண்ட பாடம்.

† இதனை வெறியச்சுறுத்தியது எல்பர் நச்சினார்க்கினியர் (தொ. பொருள். கள. 23); அகப்பொருளவிளக்கவுரையாசிரியர் வெறிவிலக்குவித்தது என்னாணங்காட்டினார் (கள 48). 'வெறியோ டலமருப்' என்பது அவர்க் கண்ட பாடம்.

நடு—மருதம்.

21 கொண்டுழிப் பண்டடம் வீலையொரீஇக் *கொற்சேரி
நுண்டுளைத் துன்னூசி விற்பாரி—னென்றுனும்
வேறல்லை பாண வியலூரன் வாய்மொழியைத்
தேற வெமக்குரைப்பாய் நீ.

எ-து பாணற்குத் தலைமகள் வாயின்மறுத்தது.

(இ-ள்) பண்டங் கொண்ட வீலையை வேறுபடுத்துவிற்றும் கொற்ரியின்கண் நுண்ணிலிய துளையையுடைய ஊசியை விற்றும் திரிவாரின் தானும் வேறல்லை; பாண! லியலூரன்வாய்மொழியைத் தெளிய எமக்குரைக்கின்ற நீ எ-று. (க)

22 போதார்வண் டூதும் புனலவய லூரற்குத்
தூதாய்த் திரிதரும் பாண்மகனே—நீதா
னறிவயர்ந் தெம்மில்லு ளென்செய்ய வந்தாய்
நெறியதுகா ணெங்கையை றிற்கு.

இ து வு ம து.

(இ-ள்) மலர்களைநுகராநின்ற வண்டுகள் ஊதும் புனல்வயலூரற்குத் தூதாய் உழல்கின்ற பாண்மகனே! நீதான் அறிவுகலங்கி எங்கள் னையுள் என்செய்யவந்தாய்? எங்கையர்மனைக்கு வழி அதுகாண் எ-று. (உ)

23 யாண ரகல்வய லூர னருளுதல்
பாண பரிந்துரைக்க வேண்டுமோ—மாண
வறிவ தறியு மறிவினர் கேண்மை
நெறியே யுரையாதோ மற்று.

இ து வு ம து.

---

*"வைகொண்ட வூசிகொற் சேரியின் விற்றெம்மில் வண்ணமைந்தொரீஇ, பாய்கொண்டு நிற்கலுற் றோடுலை யாற்றின்னி டோன்முதுமோ" என்னும் ருச்சிற்றம்பலக்கோவையிலும் (386); "இருபாற் கண்ணிய நிலையுறுவலை யிகையொன் றியற்றி, விரும்பிற் கோடியாம் விலைக்கெடுமென் றுரையிற் டோன்" என்னும் [illegible]

(இ-ள்) மானமையுடைய அகல்லையாளுரான் எமக்கு அருளை என்பதனோம் போனேனே! நீ காதலித்துரைக்கவேண்டுமோ? மாட்டு அறியக்கடவதனையுமறியும் அறிவினையுடையாரிச் சய்யுட் கட்டுரையை அருளுவை யல்லையோ உரையாதொழி? எ-று.

24 கோலஞ் சிறைகுருகின் குஞ்சுகஞ்சி யீர்வாளை
நீலத்துப் புக்கொளிக்கு மூரற்கு—மேலலைநீர்
ச்சார் கற்குச் சங்கஞ்சார் தாயிதனை யிப்பருவங்
காதற்கின் லெய்பவெனக் கேதகாள்.

இ து வு ம து .

(இ-ள்) அழகிய சிறகுகளையுடைய குஞ்சுகளையஞ்சிக் குளிர்ந்த மலரினிடத்துப் புக்கு ஒளிக்கும் வளமையையுடையவூரனுக்கு மேலலைகளையுடைய நீர்ச்சார் கற்குச் சங்குகள் சார்தலையுடைய இப்பருவத்தை காதலிக்கின்ற எமக்கு யாது செய்வதாகக் கருதினாய்? எ-று.

25 அழலனிழ் தாமரை யாய்வய லூரன்
னிழைதகு மார்ப முழைதோய்—னிழையிற்
குழலுங் குடுமியென் பாலகன் கூட
மழலைவாய்க் கட்டுரை டால்.

எ-து வாயில்வேண்டிச்சென்றார்க்குத் தலைமகள் வாயின்மறுத்தது.

(இ-ள்) அழல்போல அவிழும் தாமரைகளையுடைய ஆய்வயலூரனது கண்டார்விழையப்பட்ட மார்பம் துன்புறுகின்றது; குழலுங் குடுமியும் பாலகன்கூறும் மழலைவாய்க்கட்டுரையாகாள் எம்மைவிரும்பிப் புனைந்துரை எ-று.

26 பெய்வளைக் கைபாய் பெருநகை யாகின்றே
செய்வய லூரன் வதுவை விழவியம்பக்
கைபுனை தேரிற் செல்வானைச் சென்றிவ
னெய்தி யிடருற்ற வாறு.

எ-து புதல்வனை முனிந்து தலைமகண் மறுத்தானோப்போ தோழிக்கு வாயினேர்ந்தது.

(இ-ள்) பெய்வளையினையுடைய தலைவனே! எனக்குப் பெரிய [illegible] ; செய்த வயல்களையுடைய ஊரனே, பரத்தையர்வீதிகளில் உள்ள முழவு ஒலித்தலால் [illegible] இரவுதோறும் இன்பந்தருவதை விட்டு நீங்கி, அவ்விடத்தில் [illegible] (ஈ)

27 தண்வய லூரற் புலக்குந் தகைகெம்மா
நுண்ணறல் போல நுணங்கிய வைங்கூந்தல்
வெண்மரற் போல நிறந்திரிந்து வேறுரூஉ
வண்ண முடையேமற் றியாம்.

எ-து வாயில்வேண்டிச்சென்றார்க்குத் தலைமகள் வாயின்மறுத்தது.

(இ-ள்) தண்வயலூரனை ஊடுந்தன்மைபோமா ? நுண்ணிய அறல்போலும் நுணுகிய ஐம்பால்களினையும், கூந்தல் வெள்ளிமரற்போலத் தன்னிறம் திரிந்து வேறுபட்டநிறத்தையுடையேமும் ஆகுவமன்றோ எ-று. (எ)

28 ஒல்லென் றெழிலிக்கு மொலிபுன லூரற்கு
வல்லென்ற தென்னெஞ்சம் வாட்கண்ணுய்—நில்லென்னு
தேக்கற்றாங் கென்மகன் முனிற்ப வென்னுளு
நோக்கான்றே நூர்த்தது கண்டு.

எ-து தலைமகள் தோழிக்கு வாயின்மறுத்தது.

(இ-ள்) ஒலிபுனலையுடைத்தாய்ப் பிறமில்லாளைப்பாராட்டும் நல்லிளமையுடைய நம் ஊரற்கு எவ்வெனெஞ்சம் மெதிர்ந்தாது வலிதாயிற்று; கட்கயல்போன்ற! புதல்வன் தன்னை விரும்பிப்பார்க்கவும் [illegible] என்றுசொல்லாதே புன்புதல்வனையும் பின்பாராட்டாத [illegible] வீட்டைப்பார்க்கும்படி சென்றது கண்டு எ-று. (அ)

29 ஒல்லென் றெழிலுள் ளூரன் னியல்காடோர்ப்பப்
புல்லென்பா வினன்பென் புன்னையிணழுயாய்—புல்லில
னெனைத்தோ குறிப்பு முடைத்தியோ வென்ன வூரன்
றனைத்தோ வுவல் செய்தொழுகு வேன்.

எ-து ஆற்றுமையே வாயிலாகப்புக்க தலைமகன் புனர்ந்துநீங்கிய பின்பு சென்ற தோழிக்குத் தலைமகள்சொல்லியது.

(இ—ள்) அவர் செலவினை விலங்காதொழிக; விளங்கிய இழையு யுடையாய்! செல்லமாட்டார்; காட்டழற்பட்டு வருந்திய பிடியினை அரு எறிற்களிறு கற்சுனைச் சேற்றிடையுள்ள சின்னீரைத் துன்னையாசிலைகா அப்பிடியின் உச்சியின்கண் ஒழுக்குந் சுரத்தை எ—று.

33 பாவையும் பந்தும் பலவாய்ப் பைங்கிளியு
மாயமு மொன்று மிலைநினையாள்—பால்போலு
மாய்ந்த மொழியிளுள் செல்லுங்கொல் காதலன்பின்
காய்ந்த கதிர்கெறாஉங் காடு.

எ-து மகட்போக்கிய நற்றாய் கவன்றுசொல்லியது.

(இ—ள்) பாவையையும், பந்தையும், பலவம்போன்ற வகையையு பசுங்கிளியையும், ஆயத்தையும் இவற்றை ஒன்றும் நினையாளாயிரு பாலும் சின்மொழியையுடையாள், தன் காதலன்பின் செல்லுங்கொ லோ! கனன்று பகலோன் சுடுகின்ற காட்டினை எ-று.

34 கோட்டைமை வல்லிற் கொலைவிரியா வன்கண்ணை
காட்டினிட் டாறலைக்கு மத்தம் பலநீத்தி
வேட்ட முணவயிற் சேறிரோ வையநீர்
வாட்டடங்கண் மாதரை நீத்து.

எ-து தோழி தலைமகனைச் செலவழுங்கியது.

(இ-ள்) கோட்டுகின்ற குறுங்கிளைத்தெங்கிலையை இடையறாத வெய்ய வெயிலையுடையாள் ஆறலைத்து ஓட்டி வழியின்கண் நின்று அலைக்கும் கா கள்பலவற்றையும் நீத்தி, வேட்டினையுடைய வெம்முலையின்கட் செல்லிரோ ஐய! நீர் வாட்டடங்கண் மாதரைத் துறந்து எ-று.

35 கொடுவி லெயினர்தங் கொல்படையால் வீழ்ந்த
கடுநினை மாந்திய பேதைப்—நடுகல்
விரிநிழற் கண்படுக்கும் வெங்கான மென்பர்
பொருள்புரிந்தார் போய சுரம்.

எ-து தலைமகன் பொருள்வயிற்பிரிந்தகாலத்து ஆற்றுளென கவன்ற தோழிக்குத் தலைமகள் ஆற்றுவலென்பதுபட மொழிந்தது.

(இ-ள்) தோட்டிய லிவ்லினையுடைய வேட்டுவர்தங் கொல்படையானே ழ்ந்த தசையையும் நிணத்தையும் தின்ற போய்கள், போரின்கட்பட்டார் பயர்பொறித்துகட்ட கல்லின் மிசிலிமுற்றுயிலும் வெய்யகாவி..ன்று சொல் ஷவர் ; தோழி ! பொருள்வினும்பினைர் போஇய கடறு எ-று. (கு)

36 கடிதோடும் வெண்டேரை கோமான் றண்ணிப்
பிடியோ டொருங்கோடித் தாள்பினைங்கி வீழும்
வெடியோடும் வெங்கானஞ் சார்வார்கொ னல்லாய்
தொடியோடி வீழத் துறந்து.

எ-து பிரிணவுர்த்திய தோழிக்குத் தலைமகள் உடன்டாதுசொல் லியது.

(இ-ள்) விரைந்தோடும் தேர்க்கோமான் றண்ணிக் களிறுகள் பிடியோடே.. ஓடித் தாள்தளர்ந்து வீழும் வெம்மையுடைய வெங் கானத்தைச் சென்று நம்காதலர் சேர்வார்கொல்லோ? கல்லாய்! கைகளிற் றொடியோடவீழ்த் துறந்து எ-று. (கூ)

37 தோழியர் சூழத் தனிமுன்றி லாடுங்கால்
வீழ்பவள் தோளைத் தளருங்கா—ழூழாதுர்
கல்லுத் தத்தத்தைக் காதலர் சென்போதல்
வல்லரோ மாதர் நடை.

எ-து உடன்போய தலைமகட்கு நற்றாய் கவன்றுரைத்தது.

(இ-ள்) தோழியர்சுற்ற முற்றத்திற்றனிமையின் விளையாடும்பொழு தும் வீழ்பவளைதோளைத் தளருங் காள்கள் ஓய்த்து நாழாதே கல்வழியை புடைய அத்தத்துத் தன் கொழுநள்பின் போதலைவல்லரோ? காதலை புடையாள் நடை எ-று. (எ)

38 சுரைவாய்ச் சிறுகீரை பெய்தாதென் றண்ணிப்
பிரைமோ ரினிதுண்ணை வேண்டிக்—கலைமாத்தன்
கள்ளத்தி னூச்சுஞ் சுரமென்பர் காதல
ருள்ளம் படர்ந்த நெறி.

எ-து பிரிவின்கண் ஆற்றளாயின தலைமகளைத் தோழி யாற்ற வித்தது.

(இ-ள்) தோட்டிய யிம்லினையுடைய வேட்டுவர்தங் கொல்படையானே ழ்ந்த தசையையும் நினத்தையும் தின்ற போய்கள், போரின்கட்பட்டார் பயர்பொறித்துகட்ட கல்லின் சிரிமுற்றுயிலும் வெய்யகாவி ன்று சொல் ுவர் ; தோழி ! பொருள்விரும்பினர் போகிய கடறு எ-று. (நி)

36 கடிதோடும் வெண்டேரை கீராமன் றெண்ணிப்
பிடியோ டொருங்கோடித் தாள்பிணங்கு வீழும்
வெடியோடும் வெங்கானஞ் சேர்வார்கொ னல்லாய்
தெரிதியோடி ஒழுக் துறைக்து.

எ-து பிரிணவுர்த்திய தோழிக்குத் தலைமகள் உடன்படாதுசொல் ியது.

(இ-ள்) விரைந்தோடும் பெரிய தேரை சீராமன்றுகருதிக் களிறுகள் பிடியோடொ ருங்கு ஓடித் தாள்தழுவி மிணங்கியுயிர் வீழும் வெடியோடிய வெங் கானத்தைக் கொல்லாது நீங்குதலைச் சேர்வார்கொல்லோ ? நல்லாய்! நீங்கையிற் றெரிதியோடியுயிர் துறைக்து எ-று. (க)

37 தோழியர் சூழத் துணைமுன்னி லாதிங்கள்
வீழ்பவள் சேலைத் தளருங்கா — ழுழாது
கல்லுத் ரத்தத்தைக் காதலன் பின்சேறல்
வல்லனோ மாதர் நடை.

எ-து உடன்போய தலைமகட்கு நற்றாய் கவன்றுரைத்தது.

(இ-ள்) தோழியர்சூற்ற முற்றத்திற்றுறையின் விளையாடும்பொழு தும் வீழ்பவளைபோலத் தளரும் கால்கள் ஓய்ந்து தாழாதே கல்வழியை புடைய அத்தத்துத் தன் கொழுநன்பின் போதலிலவல்லளோ ? காதலை புடையாள் நடை எ-று. (எ)

38 சுரைவாய்ச் சிறுநீரை யெய்தாதென் றெண்ணிப்
பிரிணமா னினிதுண்ணை வேண்டிக்—கலைமாத்தன்
கள்ளத்தி னாச்சுஞ் சுரமென்பர் காதல
ருள்ளம் படர்ந்த நெறி.

எ-து பிரிவின்கண் ஆற்றளாயின தலைமகளைத் தோழி யாற்று வித்தது.

(இ-ள்) சுணையின்கண் உள்ள சிறியநீரைப் பிணைக்கு உண்ண நிரம் தென்றெண்ணிப் பிணைமான் இனிதாக உண்ணவேண்டிக் கலையாகியம தனது கள்ளத்திலுனே பொய்யே உறிஞ்சும் சுரமென்று சொல்லுவர்; காதலர் தம் அகத்திறற் போயினெறி எ-று.

39 மடவைகா ணன்னெஞ்சே மாண்பொருண்மாட் டேடாடப்
புடைபெயர் போழ்தத்து மாற்றுள்—படர்கூர்ந்து
விம்மி யுயிர்க்கும் விளங்கிழையா ளாற்றுமோ
நம்மிற் பிரிந்த விடத்து.

எ-து தலைமகன் பொருள்வலித்தநெஞ்சிற்குச் சொல்லிச் செ வழுங்கியது.

(இ-ள்) அறியாய்காண் மிக்கலெருத்தே! மாட்சிமைப்பட்ட பொருளி மாட்டுச் சேறலான், முயங்கி நாம் புடைபெயருங்காலத்தும் ஆற்றமாட்ட ளாய்த் துன்பமிக்கு விம்மி உயிராகின்ற விளங்கிழையாள் ஆற்றவல்லளோ நம்மை நீங்கியவிடத்து எ-று. (க

40 இன்றல்க ளீர்ம்படையு ளீர்ங்கோதை தோடுணையா
நன்கு வதிந்தனை நன்னெஞ்சே காலைநாங்
குன்றத ரத்த மிறந்து தமியமா
யென்கொலோ சேக்கு மிடம்.

இ து வு ம து .

(இ-ள்) இன்றிரவின்கட் குளிர்ந்த சேக்கையுள் ஈர்ங்கோதையை யுடையாள் தோள் நமக்குத் துணையாக மிகவுந்தங்கினை; நன்னெஞ்சே! இவ் வின்பத்தைவிட்டு நாளையிரவின்கண் யாம் மலைவழியே யிறந்து தமியேமாய் யம்மிடம் தங்குமிடம்? எ-று. (கo)

பாலை முடிந்தது.

நெய்தல்.

1 தெண்கடற் சேர்ப்பன் பிரியப் புலம்படைந்
தொண்டடங்கண் டுஞ்சற்க வொள்ளிழாய்—கண்படைந்த
சேவலுங் தன்னாருயிர்த் தோக்குமா லென்கொலோ
பூங்கலி யன்றில் புலம்பு.

எ-து அல்லகுறிப்பட்ட தலைமகட்குச்சொல்லுவாளாய்த் தோழி தலைமகற்குச்சொல்லியது.

(இ-ன்) தெண்ணீர்த் தண்சேர்ப்பன் பிரிதலாற் றனிமையையடைந்து நின்னுடைய ஒள்ளியகண் துயிலாதொழிக ; ஒள்ளிய இழைகளையுடையாய் ! கண் றுயிலையடைந்த போழ்தும் தன்னையுடைய பெடையன்றில் புலம்புதல் என்னோ? (க)

42 *தொகுத்தா னலனை முணைமா மிடைப்பூ
வகுத்தன்ன வாயிலை யுண்ணீ ரிடைச்சென்
றுகுத்து விடுகையாற் றீ.

எ-து காமமிக்க கழிபடர்கிளவி.

(இ-ள்) கோடியிருந்த தானிலையுடைய அலவனே ! ஒரு காரியம் நின்னை விரும்பேம் ; ஒலியாநின்ற அடங்காத ; கடற்சேர்ப்பன் வெற்றித்தேர் போயினவழியை எம்முடைய கண் நிரம்பக்காணும்வகை அதன்மேல் நடந்து அழியாதொழிவையாக எ-று. (உ)

†3 பொரிப்புறப் பல்லிச் சினையீன்ற புன்னை
வரிப்புற வார்மணன்மே லேறித்—தெரிப்புறத்
தாழ்கடற் றண்சேர்ப்பன் றூதகல நல்குமே
லாழியாற் காணுமோ யாம்.

இ து வு ம து .

---

* இதனைக் 'காமஞ்சிறப்பினும்' என்பதற் குதாரணங்காட்டினார் நச்சினார்க்கினியர் (தொல். பொருள். கள. 20).

† இதனை, 'பிரிந்தவழிக் கலங்கிரங்கும்' என்பதற் குதாரணங்காட்டினார் நச்சினார்க்கினியர் (தொல். பொருள். கள. 20).

(இ-ள்) பொரிந்த புறத்தினையுடைய பல்லிமுட்டைபோல அரும்பின்ற புன்னைப்பூக்களையுடைய வரிப்பட்ட புறத்தினையுடைய உயர்ந்த புன்றின்மேல் ஏறியிருந்து, தெளிவுறத் தாழ்கடற் றண்சேர்ப்பனது தாரகலத்தை நமக்கு நல்குமாயிற் *கூடலிழைப்பாற் காண்பேம் யாம்

44 கொண்கன் பிரிந்த குளிர்பூம் பொழிநோக்கி
யுண்கண் சிவப்ப வழுதே ளெளிமுகங்
கண்டன்ன வெவ்வம்பா தென்னைக் கடல்வந்தென்
வண்டல் சிறைத்தகதன் றோன்.

எ-து பகற்குறிக்கட்டலைமகன் சிறைப்புறத்தாளைகப் படைமொழிகிளவியாற் றோழி தலைமகட்குச்சொல்லுவாளாய்ச் சென்றி வறீஇ வரைவுகடாயது.

(இ-ள்) நம்மை இற்செறிக்கையாற் கொண்கன் பிரிந்த குளிர் பொழிலைநோக்கி உண்கண்சிவப்ப அழுத எம்முடைய எளிமுகத்தைக் கண்ணை நினைக்கு வம்ப இதிற்பை பாது வெண்ணக் கடல்வந்து எம்மூரை வியவாட்டிப் பிற்றிலைச் சிறைத்தது என்று சென்றேனை; எம்மெ முரைமாட்
எ-று

45 ஈர்ந்தண் பொழிலு னிருங்கழித் தண்சேர்ப்பன்
சேர்ந்தென் செறிவளைத்தோள் பற்றித் தெளித்தவ்ம
மாந்தளிர் மேனியாய் மன்ற விடுவணேலா
பூந்தண் பொழிலுட் குருகு.

எ-து தலைமகனைத் தோழி வரைவுகடாதற்பொருட்டுத் தலைமக வரைவுவேட்டுச் சொல்லியது.

(இ-ள்) குளிர்ந்த தண்பொழிலின்கண் இருந்து பெரிய கழியையுடை தண்சேர்ப்பன் புணர்ந்து என் செறிவளைத்தோள்பற்றி என்னைத் தெளிவித்வஞ்சினத்தை, மாந்தளிர்மேனியாய்! மெய்யாக மறந்துவிடவல்லனே அப் பூந்தண்பொழிலுள் வாழுங் குருகுகள் எ-று ((

---

*இதனைக் "கூடலாவது: வட்டமாகக் கோட்டைக்கிறி அதுக்குள்ளே சுழிசுழியாகச் சுற்றுந் சுழித்து இவ்விரண்டுசுழியாகக் கூட்டலால், இடைப்பட்டாற் கூடுகை; ஒற்றைப்பட்டாற் கூடாமையென்று ஐங்கோசு என நாச்சியார்திருமொழி உரையிலும், (கூடற்றிருப்பதிகம்) "மணற்குன்னீத்தகன்றூர் வருகென், றழி திருத்திச் சுழிக்கணைக் கோதி" எனத் திருநம்பலத்தோணையிலும் (186) "வளைத்துக் கிடந்த வரிமணற்கூடலு எனை அம்பிநாடதிதோணையிலும் (322) வருவனவற்றான் உணர்க.

46 ஓதந் தொகுத்த வொளிகடற் றண்முத்தம்
பேதை மடவர்தம் வண்டல் விளக்கயருங்
கானலஞ் சேர்ப்ப ,தகுவதோ வென்றோழி
தோணலந் தோற்பித்த னீ.

.து பகற்குறிவந்து புணர்ந்துநீங்குந் தலைமகனைக் கண்ணுற்றுநின்று ாழி வரைவுகடாயது.

(இ-ள்) ஓதம் எறிந்த திரட்டிய ஒளிகடற் றண்முத்தங்களாகிய பேதமை டைய மடவார் தம் வண்டற்சிறுமனைக்கு விளக்காக விருப்புச்செய்யும் னலஞ் சேர்ப்பனே ! நினக்குத் தகுவதொன்றோ ? என்னுடைய தோழி டைய தோள்களின்னலத்தை நீ தொலைவித்தல் எ-று. (சு)

47 பெருங்கட லுள்கலங்க நண்வலி வீசி
யொருங்குடன் றண்ணாமார் தந்த கொழுமீ
னுணங்கல்புள் ளோப்பு மொளியிழை மாத
ரணங்காகு மாற்ற லெமக்கு.

எ-து தோழிக்குத் தலைமகன்சொல்லியது. தோழற்குச்சொல்லியதூஉ மாம்.

(இ-ள்) பெரிய கடல் உள்ளெல்லாங் கலங்க நுண்ணிய வலைகளாலே லீசி ஒருங்குடனே நுளையர்மார் கொணர்ந்து பிணங்கல்களில் காலைக் கவரும் புட்களோப்பும்படி ஒளியிழையுமாதர் மிகவும் எமக்கு வருத் துந்தெய்வமாம் எ-று. (எ)

48 எக்க ரிடுமணன்மே லோதந் தரவந்த
நித்நில நின்றிமைக்கு நீள்கழித் தண்சேர்ப்ப
மிக்க மிகுபுகழ் தாங்குபவோ தற்சேர்ந்தா
சொற்கங் கடைப்பிழையா தார்.

இதனால் மூவுலகும் ஏவல்செய்யக்கருதலாலே இவனது தவமகிமை இருந்தவாறு என் என்பதாம். அவரவர் ஆசனம் கம்பித்தலான் அறிந்து கருதுவரென்க.* நால்வகைத்தேவர்—பவண வியந்தர சோதிட கற்பவாசியர். முன்னல்—கருதல். (கக)

முன்னையெண் வல்வினை போக்கிமுக் குற்றத்தை நீக்கிமுத்தி
பின்னையு நல்க வமையும் பெருமபிறப்பறுத்த
வுன்னையு மென்னையு மன்றிமற் றொன்றுமுள் ளாசமலுள்ளந்
தன்னையு நின்னருள் போல்வச மாக்கித் தரப்பெறினே.

இ-ள். பெருமானே! உன்னையும் என்னையும் அல்லது வேறொன்றையும் நினையாதபடிபண்ணி, யார்கண்ணு மொப்ப நீ அருள்செய்வதுபோல என்னெஞ்சை வசமாக்கித்தர வல்லையாகில் வினையும் குற்றமும் நீக்கி யான்பெறுகின்ற முத்தி பின்பேயாகிலும் தரவமையும்; எ-று.

இதனால் வினைகெடுதற்கு மனமே முதற்காரணமென்பதாம்; "செய்வினை செய்வான் செயன்முறை யவ்வினை, யுள்ளறிவா னுள்ளங் கொளல்"† என்றாகலின். முன்னை-பழமை. முக்குற்றம்-காம வெகுளி மயக்கங்கள். உன்னல்—நினைத்தல். அருமைபற்றிப் பெறின் என்றார். (கஉ)

பெறுவது மூவுல காளும் பெருமை யருமைபொய்ம்மை
தெறுவது நாதனைச் சிந்திப் பதுசிறு மூள்ளிமொய்க்கு

---

* இப்பூவுலகில் எதேனும் விசேடம் நிகழுமாயின் தேவர்களுடைய ஆசனம் நடுக்கமுறும் என்பதும் அக்குறிப்பால் அதனை அறிந்து அவர்கள் செய்யவேண்டுவனவற்றைச் செய்வரென்பதும் ஜைன பௌத்தர்களுடைய கொள்கை. இதனை, "தரணேந்திரன் தனது ஆஸனங்கம்பித்தலில் அறிந்து" எனவரும் ஸ்ரீபுராணவசனத்தாலும், "நண்டுநீர் ஞாலத் திவன்செய லிந்திரன்—பாண்டுகம்பளந் துளக்கிய தாதலின்" (காதை-கச, அடி-உஅ, உக) எனவும், "தனது பாண்டு கம்பளந் தானடுக் குற்ற தன்மை நோக்கி" (காதை, உக, அடி-உக, உஉ) எனவும் வரும் மணிமேகலையடிகளாலும் உணர்க.

† திருக்குறள், வினைசெயல்வகை—எ.

மறுபத மாமென வைம்புலன் மேல்விழுந் தாவதங்கட்
குறுவது மேது முறுததும் பேதைக ளோர்கிலரே.

இ-ள். ஒருவனுலகிற் பெறும் பயனுவது மூவுலகுமாளத்தக்க பெருவ பெறுவதே; அதற்குக் காரணம் யாதோவென்னில் மிச்சமீங்குதலும் இ வனைச் சிந்திப்பதுமே; பேதைகள் அதனை அறியாதே முள்ளிப்பூவிலுள் தேனுக்கு விரும்பி மொய்க்கின்ற வண்டுபோலச் சிற்றின்பத்தை விரும்பித் த ஞக் குறுவதாவதும் உறுததாவதும் அறிகின்றிலர்; எ-று.

இதனுல் இவ்விரண்டும் பிறராலியார் நீ யலை செய்யவேண்டுமென மன திற் குறுதிகூறியதாம். இதனுள் சிறியமுயற்சியாலே பெரியபயன் பெற யிருக்க அதுதவிர்ந்து பெரியமுயற்சி செய்து சிறிதுபயனும் பெறுகின்றிலரென் பது தோன்றப் பேதைகள் என்றார்; மிச்சம்-பொய். சிந்தித்தல்-நினைத்தல். அறுபதம்-வண்டு. வீழ்தல்-விருப்பம். உறுவது-இலாபம். ஆவதென்பதனை இரண்டிடத்துங் கூட்டுக. (கரு)

ஓர்கின் றிலையுனை யோனிக டோறும்பல் லூழியுய்க்கு
மார்கின் றிலையிவ் வுலகெலஞ் செயினி யந்தகனூர்
சார்கின்ற போதுனக் குச்சர ணர்சொல்லுந் தாமரைப்போ
தூர்கின்ற பாதரல் வாலுளி யார்மற் றுனக்குரைபே.

இ-ள். நெஞ்சமே! சாதலொருதலையே; நீயோ அறிகின்றிலை; உனை யோனிகடோறும் நெடுங்காலம் வினைசெலுத்த அனுபவித்தும் ஆசை நிறைகின் றிலை; கூற்றங் கொண்டுபோகின்றவழிக்குத் துணைவேண்டாவோ; நீ யார்துணை யென்னு இருக்கின்றாய்; ஜிநேசுவரனல்லது உரியாருண்டாகிற் சொல்லாய்: எ-று.

இதனுல் ஜிநதர்மமல்லது சரணில்லையென்பதாம். இதனுள் "வேற்றுவ ரில்லா நமனூர்க்கே செல்வீரும் வெருண்டீர்போல, வாற்றுணைக் கொள்ளா தடிபுறத்து வைப்பீரே யல்லீர்போலுங், கூற்றங்கொண் டோடத் தமியே யகல்நெறிக்கட் செல்லும் போழ்தி, னாற்றுணைக் கொள்ளீ ரழகலா லறி யலாலுற் றிலிரே போலும்"* என்றார் பிறரும். முடியாதகாரியம் முடியிடுவரோ வெனல்பாலது தோன்ற ஆசைநிறைகின்றிலை என்றார். ‡"முடிவு மிடையூறு முற்ற மாங் கொள்ளும்-படுபயனும் பார்த்துச் செயல்" என்றாராகலின். ஊர்தல்-நிறைதல் தூயம் நுவல் தொழிற்றாகலின் உரியாரவரென்றார். (கச

---

*நாலடி நானூறு பாடாண்—கக. ‡திருக்குறள், வினைசெயல்வகை—அ

ஒருத்தரு மத்தர்கள் போலுண ராருயி ரோம்புமெங்க
டிருத்தரு மத்தரல் லாச்சிறு மானிடர் சேர்ந்தவர்க்குத்
தருத்தரு மத்தரை யோவிண் ணோர்பதந் தந்துபின்னு
மருத்தரு மத்தரை யாதிபட் டாரக ராம்பரிசே.

இ-ள். தம்மையடைந்தவர்க்குத் தருவைப்போலே நரேந்திரபதத்தையும் தேவேந்திரபதத்தையும் தந்து முறையே சித்தபதத்தையும் தருகின்ற சுவாமியா மவரை ஆதிகர்த்தாவாமென்கிற முறைமை எமது ஜிநதர்மத்துள்ளாரல்லது பிறரொருத்தரும் உண்மத்தரைப்போலே அறியார்; எ-று.

இதனால் மெய்ந்நூலா லுண்மைவிளங்குவதல்லது பொய்ந்நூ லுண்மை விளக்காவாதலின் மிச்சர் உணராரென்பதாம். *"உலகநூ லோதுவ தெல்லாங் கலகல" என்றார் பிறரும். ஒருத்தரென், தருவைப்போலேயென இரண்டாமுருபும் உவமையும் விரிக்க. மையாத நிழல்செய்தலாலே தருவென்றார். தருமத்தரை-தருமகண்டம். விண்ணோர்பத மென்பதற்கு நரேந்திரபதம் வருவித்தாம். பதம்-செல்வம். அரு-சித்தபதம்; "பண்டெண்டோடியறியாப்பெருஞ்" என்றார் மேலும் (உ). உம்மை வருவிக்கப்பட்டது. (கரு)

ப்ரித்த மலர்ப்பதத் தாயுருக் கொண்டனைய தோலுரஞ்சு
மூரித்த புரிற் சுற்றி மெலுத லுற வார்தொண்ட சோங்குலகை
யரித்த மளிக்க மழிப்பவ ராத்தரென் றுபாணங்
தரித்து முழுத்தர் தவஞ்செய்து வாசோத் தவஞ்செய்வரே.

இ-ள். ஜிநவேஷத்தை யெடுத்துப் பாம்பு பசுமையாகிய தோலையுரித்து நஞ்சை உமிழ்வதுபோலே உட்பற்றுப் புறப்பற்று விடத் துறவார், உலகினைப் படைத்து மளித்து மழித்துஞ் செய்வாரே தலைவராமென்றவர்க் கடியா ராபா ணம் பூண்டும் ஆடைகளையுடுத்தும் தவம்பண்ணுவாரியல்பையொத்துத் தவமல் லாத காரியங்களைச் செய்கின்றார்; எ-று.

இதனைப் பற்றற்றே ரினைகீங்கவேண்டுமாதலாலே பற்றேறுகூடிய தவம் தவமல்லவெனப் † பாசண்டமூடம் விலக்கியதாம். பொறிகளைத் தவனம் பண்ணுதலே தவமாதலால் இவர் இதம்பண்ணுதலாலே யவமென்றார். "பற்றுக

---

* நாலடியார், கல்வி-கo.

† "மாசுண்ட மார்க்கத்து நின்றுரைப் பூசித்தல் - பாசண்ட மூட மெனல்" என்பது அருங்கலச்செப்பு-கூக.

பற்றற்ருன் பற்றினை யப்பற்றைப் - பற்றுக பற்று விடற்கு'' * என்பதனை மறிக. உடுத்து மென்றதனுலே யாடை வருவித்தாம். பரித்தமலர்ப்பத மென்பதனை மலர்பரித்த பதமென மாறுக. பரித்தல்–சுமத்தல். பாம்பு புறத்துள்ள தோலையுரித்தல் புறப்பற்றுவிடுதற்கும், நஞ்சையுமிழ்தல் அகப்பற்றுவிடுதற்கு உவமானமாயின. அரித்தலென்பது படைத்தல். (கஉ)

அவஞ்செய்கின் றேனென் றறிகின்ற தேயில்லை யந்தமில்லாச்
சிவஞ்செய்கின் றுனென்க ளூர்த்தப் பிரான்றிரு வாய்மொழிந்த
தவஞ்செய்கின் றுயில்லை தானஞ்செய் தாயில்லை நீகடவே
யெவஞ்செய்கின் றுயிங் கியஞ்சொன்ன வாசெய்பு மென்னெஞ்சமே.

இ-ள். அவத்தஞ்செய்கின்றேன் என்று சற்றும் அறிகின்றுயில்லை எமது தீர்த்தனுளிச்செய்யப்பட்ட துறவறஞ் செய்கின்றுயில்லை; அல்லது இல்லறத்தானுஞ் செய்கின்றுயில்லை; இரண்டுமாகாதே நீ யாது செய்கின்றனை சொல்லாய்; எ-று.

இதனைப் பிறர்க்கான செய்கின்றனை, நினக்கான செய்கின்றிலை யென்றுமாம். இதனுள், அந்தம் - முடிவு. சிவம்-நன்மை. தவம் - துறவறம். தானம் - இல்லறம். எவன் - யாது. இந்தியம் - ஐம்பொறிகள். (கஎ)

என்னெஞ்ச மேயிட மேயுடைத் தேயிந்தி ராதிவிண்ணோர்
முன்னஞ்செய் பன்னிரண் டோசனைத் தாய்முழு மாமணித்தூண்
மன்னிஞ்சி மூவெழு மாஞ்சு கணூறு தலேழ்நிலத்துப்
பொன்னின் சிலையு மாயிற்றன் றேவெங்கள் புங்கவற்கே.

இ-ள். எங்கள் புங்கவனுறைதற்கு எனது நெஞ்சமானது பன்னிரண் டோசனையுடைத்தாய் எல்லாச்சிறப்புங்கூட இந்திரனிருமித்த சமவசரண மாயிற்றுதலாலே மிகவு மிடமுடைத்தா யிருந்தது; எ-று.

இதனால் இறைவனை இடைவிடாது நினைத்த மனத்தை ஒருவன் புகழ்வாம். இதனுள், ஓசனைத்தாய்-ஓசனைவிரிவுடையதாய். இஞ்சி–மதில். இஞ்சி மூன்றுவன:—உதயதரம், பிரதிதரம், கல்யாணதரம் என்பனவாம். பாலுங்கணமுதல் ஏழ்நிலம்-மானஸ்தம்பமுதலாகிய ஏழிடங்கள்: அவை;- மானஸ்தம்பம் ஜலகாதிகை, புஷ்பவனம், சைத்தியவிருக்ஷம், துவஜபூமி, சித்தார்த்தவிருக்ஷம், ஸ்தூபபூர்மாவலி என்பன. அங்கணம்-இடம். நிலம்-விருத்தாகாரமுடையதாய்ப் பிராகாரமாகிய ஸ்தானம். அன்றே என்ப தசை. (கஅ)

---

* திருக்குறள்-கூடுo.

புங்கலன் பூரணன் புத்தன் பூராதனன் பூண்டுனையாச்
சங்கரன் சக்கரன் ரூமரை போனனைத் தாவில்செங்கட்
சிங்கவன் போரணைத் தீர்த்தனைத் தீவினைத் தெவ்வெனும்போர்
மங்கவன் ரோவெள்ளை வாள்கொண்ட வீரனை வாழ்த்துவதே.

இ-ள். உயர்ந்தவன், குணங்களாலே நிறைந்தவன், அறிவுடையோன், பழையவன், சுகத்தைப் பண்ணுமவன், அறவாழியுடையோன், அதிசயத்தாலே நான்முகனென்று நினது திருநாமங்களைச் சொல்லிச் சிங்காதனத்தில் வீற்றிருக்கப்பட்ட வீரனே! தம் வினைப்பகை வெல்லவேண்டியன்ரோ நின்னை வாழ்த்துவார் வாழ்த்துவது; எ-று.

இதனால் நீ வானாளிருக்கலாமோ பரிசிலீயாயாகவெனப் பிறர்போலே ஆசீர்வாதி வீடுவேண்டியதாம். இதனுள் இறிஞ்சோர், குறைஞ்சோர், அறிவிலார், புதியவர், தவஞ்செய்வோர், மறவாழியர், விபரீதத்தாலே நான்முகனென்னுந் தலைப்பெயராக்கியவரை இரவெனுமென்பது குறிப்பெச்சம். வினைகளை வென்ரோரதலாலே வீரனென்றார். தெவ்-பகை. மங்க-கெட. வெள்ளைவாள்-சுக்கிலத்தியாணம். (கக)

வாழ்த்துதி நின்புகழ் வாழ்த்தவல் லாரைத்தம் வாய்வலத்தாற்
பாழ்த்துதி செய்துனைப் பாடா தவர்களைப் பல்வினைக்கே
சூழ்த்துதி யாமறி யாச்சுழ லுன்பப் பெருந்துழிக்கே
யாழ்த்துதி யார்வமுஞ் செற்றமு நீக்கிய வச்சுதனே.

இ-ள். அச்சுதனே! கேளாய்; நினது புகழை யேத்தவல்லவரைத் தேவர்தங்கள் முதலிய கொடுத்து வாழப்பண்ணுவிப்பை; தமது சொல்வல்லபத்தாலே பாசண்டராகிப் பாழான துதிகளைச் செய்து நின்னைத்துதியாதவர்களைத் தீவினைகளை வளையப்பண்ணுவிப்பை; அவ்வளவோ எம்போல்வாரறியாத கடத்துண்பமாகிய கடலினு ளாழப்பண்ணுவிப்பை; இப்பெற்றியுடைய நீ விழையும் வெறுப்பும் விட்டவரே சொல்லாய்; எ-று.

இதனாலவ்விரண்டும் விடாதவனென்பது குறிப்பெச்சம். இதனுள் அச்சுதனே என்பதனுள் ஏகாரம் வினி. அறந்தலைப்பட்டோர் வாழ்த்துவாராதலாலே அவர்க்கு நற்கதியும், எனையோர் வாழ்த்தாராதலாலே அவர்க்குத் தீக்கதியுமொருசாலதுணிந்து அதனை இறைவன்மேலேற்றிப் பழிப்பதுபோலப் புகழ்தலாம். "என்பி லதனை வெயில்போலக் காயுமே-யன்பி லதனை யறம்"* என்ரூற்

* திருக்குறள்—எ.

போலக் கொண்க. "விரத மிலரெனினும் காட்சி யுடையோர் - நரகம் புகு விலர்"* என்பது கருதி 'யாமறியாச் சுழறுன்பப் பெருங்குழி' என்றார். வாய்வலி சொலல்வல்லபம். அச்சுதன்-கேடில்லாதவன். வினைக்கே குழிக்கே—வே ணமைமயக்கம். (உ

அச்சுமல் லாவல்லு மாமெழுத் தாதியு மந்தமுமா
வச்சதெல் லாமறி நூலும் பொதிந்தது மந்திரமாய்
மெச்சுமெல் லாருக்கும் வேண்டிற் றளிப்பது மெய்த்தவத்தோர்
நச்சுமல் லார்குடை மூன்றுடை நான்முக னற்பெயரே.

இ-ள். உயிரும் உயிரல்லாத ஒற்றெழுத்துமே முதலும் இறுதியுமாக வைக்கப்பட்டதும், எல்லாப் பரமாகமங்களுள்ளும் பொதியப்பட்டதும், கொண் டாடப்பட்ட மந்திரமாகி எல்லாருக்கும் வேண்டியவற்றைக் கொடுக்கத்தக்கதும் ஸந்மார்க்கமுநிவர் விரும்பும் ஸ்வாமியினது திருநாமமேயாம்; எ-று.

இதனால் அருகனென்னுந் திருநாமம் கூறியதாம். அச்சு-உயிர். அல்-மெய். மதிநூல்-பரமாகமம். அல்லார்குடை-இருளைப் †போக்குகின்ற குடை. குடை மூன்றுவன;—சந்த்ராதித்யம், நித்யவிநோதம், ஸகலபாஜநம் என்பனவாம்.

பெயர்த்தண்ப நிம்பர்கண் ணுமைகள் கும்பெரு மைச்சரணும்
புயத்தம்ப ராம்பரா போற்றியின்ன னைப்பமப் புன்னெறிக்கண்
ணயத்தண்பி லாரொடு தீவினைத் தெவ்வென்று காட்டியருட்
சயத்தம்ப மோகம்ப நின்றிரு வாயிற் றனித்தம்பமே.

இ-ள். இவ்வுலகில் அன்பர் மீண்டும்வந்து பிறவாமல் வீட்டைக் கொடுக் கும் திருவடியையும் திசையாடையையுமுடைய தம்பனே! ஒருவிண்ணப்பங் கேட் டருள்வாயாக; நினது திருவாயிலிலே காட்டப்பட்ட ஒப்பற்ற மானஸ்தம்ப மானது, மித்தியாமார்க்கத்திற் சேருகின்ற உள்ளன்பில்லாத பாஷாதிகளையும் வினைகளையும் வென்று காட்டப்பட்ட சயத்தம்பமோ சொல்லவேண்டும்; எ-று.

இதனால் வினைவென்றோரே சயத்தம்பகாட்டவேண்டுமாதலாலே ஏனை யோர் வினைவெல்லார் என்பதாம். இம்பர்-இவ்வுலகம். தம்பம்-தூண். (உ

---

* அருங்கலச்செப்பு-சூ எ.

† ஊர்தல்-உண்ணுதல்; "பகல்கான் றெழுதரும் பல்கதிர்ப் பரிதி" என் புழிக் காலுதல் ஆக்குதற்பொருட்டாதல்போல, ஈண்டு, ஊர்தல் குறிப்பால் அழிதற்பொருட்டாயிற்று.

தம்பத்தின் மேற்புழை யேழுள வாக்கித் தமித்துவைத்த
கும்பத்தி னேநி நிகரொக்கு மாங்குணிப் பிற்றியைந்தாம்
பம்பத்தி காயம் பணித்தபி ரான்பசுந் தாமரைத்தாள்
செம்பத்தி யாலவணங் காச்சிறி யார்தஞ் சிரத்தினரே.

இ-ள். விசாரமின்றியே பஞ்சாஸ்திகாயத்தை அருளிச்செய்த பிரானது ஸ்ரீபாதங்களைச் செவ்விதாகிய அன்பால் வணங்காத சிறியவரது தலைத்திரன், ஒரு தறியின்மேலே எழுதுழையுளவாக்கித் தனியேவைத்த குடத்தினையொக்கும்; எ-று.

இதனால் நிறைவுளே வணங்குவதே தலைமை என்பதாம். "கோளில் பொறியிற் குணமிலமே யெண்குணத்தான் - றாளை வணங்காத் தலை"* என்றுர் பிறரும். தம்பம்--தறி. புழை-துளை. குணித்தல்-விசாரம். பஞ்சாஸ்திகாயம் என்பது பம்பத்திகாயம் எனத் திரிந்தது. அவை ஜீவாஸ்திகாயம், அஜீவாஸ்திகாயம், தர்மாஸ்திகாயம், அதர்மாஸ்திகாயம், ஆகாசாஸ்திகாயம் என்பனவாம்†. பஞ்சாஸ்திகாயம் என்பது விசேஷ்யமாகபதப்பொருளைத் தராமல் விசேஷ்ய மாகவேயின்று இந்தவிடத்திற விசேஷணத்தைத் முதலிற் பெற்றுநின்றது. பசுமை- செவ்வி. (உக)

சிரத்தின ரைன்னில சீனம்பை யோந்திலன் றிண்சிலையாற்
புரத்தின யங்கனை யுய்யவெய்து மகஸ்திலன் போதியென்றேர்
மரத்தினள் சோர்ந்தபண் மாயஞ்செல் லானெங்கை மண்ணுயிர்க்குப்
பரத்தின யங்கள் பணித்த பிரானெங்கள் பண்ணவனே.

இ-ள். அரிசயத்தாலன்றி விபரீதமுக நான்கில்லாதவன், பகையில் லாமையாலே ஆயுதமிடாதவன்‡, அன்பரை விரகாலே அன்புநீக்கிக் குற்றங் காட்டி மூப்புமத்தைச் சுடாதவன், அசின்கீழேயிருந்து உயிரில்லை என்று பலபல மாயஞ்செல்லாதவன்; அவன் யாவனெனின்;—மண்ணுயிர்க்கு மேலாகிய தந்தரயத்தை அருளிச்செய்த எங்கள் பண்ணவன்; எ-று.

இதனால் இச்செய்கை தலைவர்க்கேலாவாதலால், தெய்வமூடம் விலக்கிய தாம். "சக்கரஞ்ஞன்முகன்.....மாத்தன் துணிபு" என்றுர் பிறரும். ஐம்படை-

---

*திருக்குறள்—கூ.

†"மன்ற லாறு மணிமுடி" என்னுஞ் சிந்தாமணியுள் "தெளியும் பொருள்க ளோரைந்தும்" என்றது இவ்வஸ்திகாயங்களை.

‡"சினஞ்செய் வன்பகை வருமென வலி - சிதைத்து லெம்பலுட பலசா வலர்" என்றுர் திருக்கலம்பகத்தினும்-கஅ.

சங்கு, சக்கரம், கதை, வாள், தண்டு என்பன. புரத்திரயம்-மூப்புரம். போதி என்றோர் மரத்திரள் - அரசென்னும் பெயரையுடைய திரண்ட மரம். மாயம். சூனியவாதம். பரத்திரயம்-மேலான ரத்நத்ரயம்; அவை;—ஸம்யக்தர்சனம், ஸம்யக்ஞானம், ஸம்யக்சாரித்ரம் என்பன. * (உச)

பண்ணவ னுர்சக மூண்றுமொர் மாத்திரை பார்க்கு மெங்கள்
கண்ணவ னுர்தன்மை கேட்டறி யார்கொல் களிகளிப்போல்
விண்ணவன் காற்றவன் வெந்தீ யவன்விரி நீர்பொதிந்த
மண்ணவன் மற்றுமெல் லாமவ னேயென்னு மானிடரே.

இ-ள். விண்முதலாக எண்ணியவையெல்லாம் அவனே; பிறரல்லர் என்று சொல்லுகின்ற மாக்கள், மூவுலகத்தையும் ஒருகணப்பொழுதிலே பார்க்க வல்ல கருத்தையுடையவர் இயல்பைக் கேட்டறியார்போலே இருந்தது; எ-று.

இதனால் அவர் கேட்டால் அவ்வாறு சொல்லார் என்பதாம். அத்துவித கண்டனங் கூறியவாறு. கண்ணவனுர்-கருத்தையுடையவர். களிகன்-மாதங் கர். விரிநீர் என்பதனோடு அவன் என்பதை ஒட்டிக்கொள்க. (உடு)

இடரார் பவக்கங்கு லின்கண்மற் றெண்ணெயுங் கண்ணெரட்டாப்
படரார் வினைத்தொல் விருள்போ யிடியப்பைம் பொன்னணைமே
லடரார் மலர்ப்பிண்டி யோடும் புகுந்தென் னகத்திருந்த
சுடரார் விளக்கைமெய்ஞ் ஞானங் குலிகொண்டு தூண்டினனே.

இ-ள். என்னைப் பிறப்பாகிய இடின்கண்ணெண்ணையைத்து ஞானக்கண்ணெயு மறைத்த வினையிருள்கெட, என்மனத்துட் புகுந்திருந்த பரஞ்சோதியாரது பரமாகமத்தை யான் மெய்யுணர்வாலே ஆராய்வேன்; எ-று.

இதனாற் பரமாகமம் உணர்ந்தன்றிப் பிறப்பும் வினையும் நீங்கா என்பதாம். மற்று அசை. படரார் வினை—தன்பற்றிறைந்த ஞானவாணீயம். அடர் ஆர் மலர்—தகடி நெருங்கிய பூ. சுடர் - பரஞ்சோதியார். அச்சோதி;—ஆலோகம், பிரபா மூர்த்தி, கனப்பிரபை என மூன்றும். எல்லாப்பொருளையும் விளக்குதலாலே பரமாகமத்தை விளக்கென்றும், அதற்கேற்ப விரலாலே தூண்டுவன் என்றுங் கூறினர். (உசு)

---

* "நற்காட்சி நன்ஞான நல்லொழுக்க மிம்மூன்றுங்-தொக்க வறச்சொற் பொருள்" என்பது அருங்கலச்செப்பு-உ.

தூண்டுதிண் டேருருள் போலச் சுழன்றுதொல் யோனிகட்கே
மீண்டுகொரண் டேதுமவ் வெவ்வினைக் கஞ்சிநின் மெய்ச்சரணம்
பூண்டுகொண் டேனினிப் போகவொட் டேன்பொரு ளாகவென்னை
யாண்டுகொண் டாயற வாழிகொண் டேவென்ற வந்தணனே.

இ-ள். அறவாழியால் வினைகளை வென்றோனே! பண்டே யான் தேருருள்போலச் சுழன்று, யோனிகடோறும் மீளவுங் கொண்டுசெல்லுமோ என்று அந்தப் பவவினைக் கஞ்சி னினதடிகளைப் பற்றிக்கொண்டேன்; இனி உன்னைப் போகவொட்டேன்; என்னைப் பொருளாக முன்னே அடிமைகொண்டாயாதலாலே; எ-று.

இதனால் ஆகமங்கேட்டுப் பிறப்புணர்ந்தவன் பின்னும் இடர்ப்படுதற் கஞ்சி உரிமைகூறியதாம். முன்னிற்கவியில் என்னைகத்திருந்த விளக்கு என்பது கருதியே ஆண்டுகொண்டாய் என் பிறந்தகாலத்தாற் கூறினர். தூண்டல்-செலுத்தல். மீண்டும் என உம்மை வருவிக்க. (உஎ)

அந்தா மேலொரு மந்தாம் வந்தென வம்மலர்மேல்
வந்தபி ரானடிக் கன்பில தாயின் மறையவரே
னிந்தர்கள் சாதியி னீசர்கண் மூந்த நீசருமச்
சுந்தர னேசர்க ளாயின்விண் ணோரினுஞ் சுத்தர்களே.

இ-ள். யாவரேயாயினுந் தலைவனடிக்கு அன்பிலராயிருந்தாராயின், மறையவராயினுங் கீழ்க்குலத்தவரினும் இழிந்தவரேயாவர்; அன்புளராயிருந்தாராயின், இழிகுலத்தில் இழிஞரேயாயினும் தேவர்சாதியினும் அதிகரே யாவர்; எ-று.

இதனால் உயர்குடிப்பிறந்துந் தலைவன்மேல் அன்பிலராயின், அதனாற் பயனில்லை என்பதாம். "பறையன் மகனெனினுங் காட்சி யுடையா - னிறைவ னெனவுணரற் பாற்று"* என்றார் பிறரும். அந்தரம்-ஆகாயம். அம்மலர் என்றதனால் வெண்மையாகிய மலர் எனப் பொருள்கொள்க. மலருக்கு அந்தரத்தை உபமானமாக்கினமையால் நிர்மலமான வெள்ளிய ஆகாயம் எனப் பொருள்பெற்றும். சாதியிலும் என உம்மை வருவிக்க. சுந்தரனுக்கு நேசர் என நாலாவது விரிக்க. இந்திரனை அதிகராதலினாலே சுத்தர் என்றார். (உஅ)

சுந்தினையத் தாணுடைத் தெல்லரும் பல்குணத் தெல்சுகத்த
†சித்தினையத் தாவென்று செப்புகி லேன்முதற் சீவனுள்ளிட்

---

* அருங்கலச்செப்பு-கூ எ

† "முத்தினையத் தாவென்று மோகிக்கிலேன்" எனவும் பாடம்.

டத்திலைத் தாதுள்ள வாறறைந் தாயடி. லிட்டகலாப்
பத்திலைத் தாவது முத்திபெற் றூரிற் பதின்மடங்கே.

இ-ள். சிவன்முதலாகப் பஞ்சாஸ்திகாயத்தை உள்ளவாறே அருளிச் செய்தவனே! நிர்மலமாகிய அநந்தகுணமும் இன்பமுமுடைய மோக்ஷத்தை நீ தா என்று சொல்லுகின்றேனில்லை; நினது திருவடிகளை விட்டுநீங்காத அன்பினையே தருவாயாக; அஃது எனக்கு அம்மோக்ஷத்தைப்பெற்றவரின்பத்தினும் பத்துமடங்கு நன்று; எ-று.

இதனால் முன்னிற்கவியிற் கீழோரையும் மேற்கதி செலுத்துவது அன்பா மாதலால், அதுவே சுருதி பிரந்ததாம். முதற்சிவன் என்பதனைச் சிவன்முத லென மாறுக. சுத்தி—நிர்மலம். அஸ்தி—பஞ்சாஸ்திகாயம். முத்திபெற்றூர் இன்பம் என வருவிக்க. (உக)

மடங்கலி ஞசனம் வார்தளிர்ப் பிண்டிழும் மாமதில்சூழ்
கிடங்கலர் சோலைக ணுடக சாலைகள் கெடில்விண்ணே
ரடங்கலு மார்கின்ற வாடகக் கோயிலி னும்மடியேன்
மூடங்கன் மனலய மேயினி தாயிற்றெம் மூத்தனுக்கே.

இ-ள். மூத்தனுக்கு எமது மனக்கோயிலாகிய தாமரைப்பூவே, ஆசனமுதலாக எண்ணப்பட்ட பிறப்பெல்லாமுடைய சமவசரணத்திற் பொற்றூமரைப் பூவினும் நன்மையாயிற்றன்றே; எ-று.

இதனாற் பொற்றூமரையிற் பற்றியிராமையானும், தன் மனத்தைதப் பற்றியிருந்தமையானும் தலைவன் அன்புமிகுதி கூறியதாம். ஆடகக்கோயில் என்பதனாற் பொற்றூமரைப்பூவும், அதற்கேற்ப மனத்தாமரையும் வருவித்தாம். வார் தளிர்-நீண்டதளிர். மூடங்கன் மனலயம்-சிறிய மனமாகிய தாமரை. (உ0)

மூத்தனெண் கோமுதன் மூர்த்தியென் கோசக மூன்றினுக்கு
மத்தனெனன் கோவெனை யாளியென் கோவடி யேனுடைய
சித்தனெனன் கோபத்தர் செல்வமென் கோவினைத் தெவ்வொன்றில்லா
நித்தனெனன் கோபிண்டி நீழலின் கோனை நிரந்தரமே.

இ-ள். என்னுடைய வேந்தனை, மோக்ஷநாயகனென்றுசொல்லலோ; உலகுக்குச் சுவாமி என்று சொல்லலோ; என்னை ஆண்டவனென்று சொல்லலோ; என்றும் மனத்தாமரை உறைபவனென்று சொல்லலோ; அன்பர் செல்வமென்று சொல்லலோ; இவனை யாவனென்று சொல்வேன்; எ-று.

இதனுல் இதயம்விடாத உறைதலிருலே தலைவனை நலம்புனைந்துரைத்தலாம். இதனுள் என்கோ என்பது என்றுசொல்லுவோ என்பதாம். நிரந்தரம்-எப்பொழுதும். (நக)

நிரந்தர காண்மை நிறைந்திருந் தாணுவின் முர்த்தியோப்போற்
றரந்தர மல்லவெண் ணேவருள் செய்வது கண்டலமேற்
கரந்துர நின்றெழுந் தால்வினைக் கட்பெறிற் காமர்செல்வப்
புரந்துர லோகம் புழைக்கைடை யானகுடையும் போலிகட்கே.

இ-ள். அடைவாக அநந்தஞானாதி குணங்களால் நிறைந்த எம்மூடைய சுவாமியும் ஒழிந்த தேவர்களைப்போல, இவன் மோகூத்துக்கு உரியனெனின்முன், அவன் உரியனல்லன் என்று ஆராய்ந்துபார்த்தோ அருள்செய்கின்றவனுவன்; எம்போல்வார் ஒருதலை வணக்கஞ்செய்யப்பெறின், அவர்க்குத் தேவலோகத்தைப் புழைக்கையினை தன்மைபோல எளிதாக்கிக்கொடுக்கும்; எ-று.

இதனுல், அங்ஙனம் ஆராய்வார் மனிதராதலின், அவர் தெய்வத்தன்மையிலர் எனத் தெய்வமூடம் நீக்கியதாம். இதனுல் 'நிரந்தராணும்' என்பது ஸ்வாமிக்குப் பொருளில்லாமையும், நம்மைச்சிறப்பு, காமர்-அழகு. (நஉ)

போலிப் பொருளுடைப் புனைனெறி யாமப் புலிகடக்குங்
காலிற் றடுகெறி பொய்க்கழி வீர்கழி மாவளத்த
மேலிற் பொருகெரி வீடே புகிற்பிண்டி வேந்தனெங்கோ
னூலிற் பகர்தெச் தெறிபோய்ப் புகுமி னுழிவரையே.

இ-ள். போலிப்பொருளுடைய புலிகடக்கின்ற தன்மார்க்கமாகிய சிற்றடிப்பாடுபோய் இறந்து கீழ்ப்போகின்றவரே! நீங்காத பொலிவுபத்தையுடைத்தாய மேலான வீடுபேறுவேண்டின், எம்மிறைவன் அருளிச்செய்த பரமாகமஞ் சொல்லுகிற பெரியவழி செவ்வையாமத்தறிந்து; விரையப்போய்ப் புகுவீராமின்; எ-று.

இதனைற் பொருளில்லா தூனெறிசெல்லிற் பயனீங்கா என்பதாம். இதனுன் அவர் தொன்னெறிநூலிற்குப் பொருளில்லாமையாற் போலிப்பொருள் என்றும், கொலையஞ்சாக் குலைவாதசித்தம் புலி என்றுங் கூறினர். *"பொருளல் லவற்றைப் பொருளென் றுணரு-மருளாளு மாணைப் பிறப்பு" என்றுர் பிறரும். மேல் என்றதனைற் கீழ் என்பது வருவித்தாம். காலி என்பது மாட்டின் கூட்டம். புலிகட்

* திருக்குறள்-அ நூ

குங் காலிச் சிறுநெறியாவது புலிகிடத்தற்கும் அது கிடப்பதறியாமல் மாடு போதற்கும் இடனுய்க் காட்டடர்ந்த சிறிய மார்க்கம். கழிதல்-சாதல்; *"கழிந்தாரி தலே" என்றுர் பிறரும். வளம்-பேரின்பம். கொடிவரை-சிறுபொழுது. (கூ

வரையம் புகாயெரி மாரிக ளாயவ் வயிரிசெய்த
திரையம் புகாக்கடல் பூக்கட லாகத் தியானமென்னு
கரையம் புகாவீணைத் தெவ்வென்ற வாநன்று நாயடியே
னிரையம் புகாநன னெறிபணித் தாட்கொண்ட நின்மலனே.

இ-ள். நின்மலனே! அந்தக் கமடனுகிய மேகமானது கல்லும் அம்பு நெருப்புமாகப் பொழிந்த வெள்ளமெல்லாம் †பூவெள்ளமாகத் தியானமென்னு இடபத்திலே புகுந்து நீ வினைப்பகையை வென்றபடி தர்மமாகும்; எ-று.

இதனுல், பிறர்செய்த நிந்துபொறுத்தலே தலையாய தர்மம் என அதை வியந்ததாம். ‡"இணரொரி தோய்வன்ன வின்னு செயினும்-புணரின் வெ ளாமை நன்று" என்றுர் பிறரும். வரை-கல். காயெரி-சுடுகின்ற தீ. மாரி-வ ஷம். வயிரி-கமடன். திரையம் புகாக் கடல்-அலையெறியாத கடல். திரையம்-அ சாரியை; அம் திரை புகாக் கடல் எனக் கொண்டு நீருருவமாகிய அலையில்லா, கடல் என்பாரு முளர். கரை-விடபம்; "கருங்கரைமேற் சூடேபோல்"§ என்று பிறரும். அம் சாரியை. புகா-புகுந்து. (கச

நின்மா மலர்ப்பதந் தாங்கு நினையிதழ்க் காமரையை
வன்மா வெனக்கொண்ட மற்றதற் காகக்கொல் வான்கருப்பு
ஷின்மா ரனைச்செற்ற வீரமென் போதென வீற்றிருப்பப்
பொன்மார் பளித்ததப் புண்டரி காலயப் பொன்னிலுக்கே.

இ-ள். வீரனே! நினது திருவடிகளைத் தாங்கும் திருமகளுறையும் தாமரைப்பூவைக் குதிரையாக வாங்கிக்கொண்டதற்காகவோ அந்தத் தாமரை யென்ன வீற்றிருக்க அவளுக்கு நின்மார்பைக் கொடுத்தது சொல்லாய் எ-று.

---

* நாலடியார்-தாய்தன்மை-கூ.

† இதனை "அறனிலடல்கெழு கமடனக்கிரம சண்டத்துட் குறக்கனன் றெறி யனலமடுபடை யசனிவெற்பெனு மென்பற்பத் துணர்க்கமர்ந்தன" என்னும் திருக்கலம்பகத்தானும் (கூ) உணர்க.

‡ திருக்குறள்-கூஅ.

§ நாலடியார்-பெருமை-கூ.

இதனால், பெரியோர் செய்த உதவிக்கு அளவுண்டோ என்பதாம்; "உதவி வரைத்தன் றுதவி யுதவி-செயப்பட்டார் சால்பின் வரைத்து" என்றாகலின். திருமகள் மார்பிலே வைத்தும் மோகமில்லாதிருந்தவர் என்பது தோன்ற 'விண்மாமணைச்செற்ற வீர' என்றார். (௩௫)

பொண்குண மாமணிப் பூந்துகி லாதிப் பொருளடியேன்
முன்கொணர் வீசென்று மோகிக்கி லேனிந்த மூவுலகு
நன்குணர் கேவல நாயக நேமுன்பு நானுடைய
வெண்குணம் யாண்பெற வெம்பெரு மானே யிரக்கின்றதே.

இ-ள். கேவலநாயகனே! பொன்னும் மணியும் துகிலும் முதலான பொருளை எனக்குத் தருவீராக என்றிரக்கின்றேனல்லேன்; முன்பு நானுடைய அநந்தஞானாதிகுணங்களை யான் பெறுவது காரணமாக இரக்கின்றேன்; எ-று.

இதனால், †மாற்றிற்கும் வீட்டிற்கும் காரணம் கூறியதாம். மணியினதொளியும் மலரினது நாற்றமும்போலே உயிர்க்கெல்லாம் குணமியற்கையாதலால் 'என்குணம் யான்பெற' என்றார். குணமென்பது கயிறும் பண்பும். (௪௰)

இரக்குந் தொழிலொழிந் தியாமே யினியிந்த வேழுலகும்
புரக்கும் பொருளுடை யோம்புலி வீர்வம்மின் பூமியெல்லா
நிரக்கும் பொருட்குவை யாவையு நீர்நின்ன பாதவெலாஞ்
சுரக்குஞ் சுரபிகண் மூன்றிண்டி நாதன்றன் றொல்லறமே.

இ-ள். அறிவுடையீர்! புறப்பாரைத் தேடியிருக்கும் தொழிலைவிட்டு எந்தை ஸ்ரீதர்மம் தேற வருவீராமின்; யாம் எல்லாவுலகத்தையும் காக்கத்தக்க தொழிலுடனே, உலகில் எல்லாப்பொருளையும் உடையோமாவோம்; அவ்வளவல்ல; மோக்ஷத்தையும் கொடுக்கத்தக்க சுரபிகண்மூன்றே ஜிநதர்மமானது; எ-று.

---

* திருக்குறள்-௩௫௰.

† மாறு - பிறவி. "சுணங்கணைப் போலுநீர் மாற்றிடைச் சுழலு நீரார்" (மேருமந்தரபுராணம், வைசயந்தன்றோத்திச்சருக்கம்-௧௫௪) "மறப்ப னேன் மாற்றையாக்கு மிவையும் வந்தணுகா" (மே, பூரணசந்திரன் அ ரியற்சருக்கம்-௯௦) "வைம்தலு மடம்தைதாலு மாற்றிடைக் சுழன்ற பெற்றி" (யசோதரகாவியம்-௯, ௭௫) என்பவற்றிற் கண்டுகொள்க.

இதனால், உயிர்கட்கு ஜிநதர்மமல்லது சரணில்லை என்பதாம். "சிறப்பீனுஞ் செல்வமும் மீனு மறத்தினூஉங் - காக்கமெவனோ வுயிர்க்கு" * என்றார் பிறரும் இதனுள், அறிவுடையீர் என்றது இழிபு; அறிவிலராதலால் வீட்டினை 'அவ நினையாத' என்றார். நினையாதவும் என உம்மை வருவிக்க. (நே

தொல்லற மேபடை யாவுடை யச்சுத நாயகன்றன்
னல்லற மேவியிற் நாற்கதி நீக்கிலர் தீக்கதிசேர்ந்
தல்லற மேவுவ சென்றறைந் தாலு மறிவிலிகள்
புல்லற மேவுவர் போகத்தின் மேலுள்ள மோகத்தினே.

இ-ள். தீயமார்க்கத்தைச் சேர்ந்தாற் பாவமே வருமென்று சொன்னாலும், அறிவில்லார், எம்பிரானது திருவறத்தைச்சேர்ந்து நாற்கதியில்வரும் பாவம் போக்கமாட்டாராய்ப் போகத்திலுண்டான மயக்கத்தாலே மீளவும் அந்தத் தீயமார்க்கமே பொருந்துவர்; எ-று.

இதனால், † 'கொடிதும் பேதையுங் கொண்டது விடா' என்பதாம். சுதம். ஆகமம். நாற்கதியில் வரும் பாவம் என வருவிக்க. நாற்கதியாவன;—தேவகதி மனுஷ்யகதி, திர்யக்கதி, நாகஜதி என்பன. அறமல்லாததனை அல்லறமென்றார் புல் அறம்-தீய மார்க்கம். (நே

மோகங்க ளாற்சில மூர்த்திகள் கண்டது நற்றுணர்ச்சிதந்
சோகங்க ளூர்த்து மதேசகர்சொல் லாதது தண்மதிகள்.
யாகங்கள் செய்து மிருந்தசை நின்றுமீர்ங் கள்ளொடொக்கும்
போகங்க ளார்ந்துதம் மெய்யொடும் போய்ப்பட நும் பொய்முத்தியே.

இ-ள். அறிவிலிகள், கொலைமுதலிய பாவமெல்லாஞ் செய்தும் கீழ்ப் போகாமல் அந்த உடம்புடனே புகுவதாகிய பொய்முத்தி, முற்றுணர்ந்தவனாலே சொல்லப்படாதது; சிற்றறிவினராகிய சில தேவர்களாலே கற்பிக்கப்பட்டது; எ-று.

இதனால், இது வீட்டுநெறியன்றென மூடம் விலக்கியதாம். ‡ "நன்றுடை மாக்கம் பெரிதெனுஞ் சான்றோர்க்குக் - கொன்றுகு மாக்கங் கடை" என்றார் பிறரும். முற்றுணர்ந்தவர் என்ற வதனாலே சிற்றறிவு வருவித்தாம். கள்ளுட

---

* திருக்குறள்-கூ.

† "கொடிதும் பேதையுங் கொண்டது விடாதெனும், படியே யாகி" என்பர் திருவாசகத்தும் (போற்றித்திருவகவல்).

‡ திருக்குறள்—கூ உ

போலே அறிவழிக்கும் ஸ்த்ரீபோகமென்றது காணமின்றியே அவர் விதவா சமன முதலிய செய்வன கருதி.* ஆர்ந்தும் என உம்மை வருவிக்க. (ஙக)

முத்திற் பொலிகுடை மூன்றுடை யார்க்கிரண் டின்றிபொன்றும்
பத்திப் பெருமபத மல்லதுண் டோபகி நோய்முதலாம்
புத்திக் கலேசக்க ணீங்கிப்புக் கார்க்கெண் ணும் போதலில்லாச்
சித்திப் பெயர்ப்பத் தனம்புகு வார்கட்குச் செவ்வழியே.

இ-ள். சித்தியென்னும் பட்டணம் புகுவார்க்குச் செவ்விய வழி மூன்று குடையினையுடைபார்மேலுண்டாகிய அன்பென்கின்ற பெரிய வழியல்லது வேறுண்டோ; எ-று.

முன்னிற் கவியில்லை தீவினை யில்லக்கிலார்; இதனுல் அருகதப்பத்தியே நன்னெறியென்பது கூறப்பட்டது. இரண்டென்றி ஒன்றும் பத்தி - வேறு தெய்வ மில்லை யென்கிற ஒப்பற்ற பத்தி. பதம்-வழி. போதல்-திரும்புதல். பத்தனம்-பட்டணம். செவ்வழி-செவ்விய மார்க்கம். (சo)

வழுவாதல் வாவதற் பல்லென தாவின் வாதரற்றல்
தழுவாத் தலைவரிற் றீவுறு வாக்கொண்டு குற்றமற்ற
வழுவாத வாழுறி யாமைப் போலடி யேனுநின்னைத்
தொழுவாதல் வாழ்தும் முழுதுணர்ந் தாய்க்கெல்கொல் சொல்லுவதே.

இ-ள். முற்றமுணர்ந்த வரதனே! யாக்க, சரீரம் பொறுக்கவல்லனவாகிய நாதங்களோடு பொறுத்து, நினது தபோதனராகிய குழுவெல்லாம் நினது நிருமானிமடிவாகக் வகக்கொண்டு, குழுவியானது தனக்கு ஒரு விதனம் வந்த பொழுது மனக்கு இன்னவிதனம்வந்ததென்றுசொல்லவுமறியாது அழுவதே அறிவதுபோல, அடியேனும் நின்னைத் தொழுவதல்லது வேண்டியது சொல்லித் தொழுவுமறியேன்; எ-று.

இதனுல், கன் தனது அறியாமைகூறுவதுபோலே, தவத்தியல்பு கூறிய தாம். தீயே அறிவில என்பது தோன்ற 'முழுதுணர்ந்தாய்க்கு' என்றும், சரீரத் திற்கேற்ற வதமாதலால் 'வதம் வல்லனதாங்கி' என்றுங் கூறினர். வதம்-விரதம்.

---

* கன்னுண்டல் வைணத்ரமணியாகத்தும், விதவாகமனம் பிளஞ்டிய யாகத்தும் விழுங்கின், இவ்வாறு கூறப்பட்டதுபோலும்.

சொல்லார் பிறர்க்கிதஞ் சூழார் தமக்கரண் சூழ்பொருண்மேற்
*கில்லார் நசைவிடக் கேளார் திருவறங் கேள்வியினுங்
கொல்லா வதத்தெங்கள் கொற்றவன் கூறிய நற்றவத்தே
நில்லார் நிரயத்து நிற்பா னிருக்கின்ற நீசர்களே.

இ-ள். கேள்வியினுங் கொல்லாவிரதத்தையுடைய கொற்றவன் கூறிய நற்றவத்தே நில்லாராய்க் கொல்லுதே துணிந்து நரகத்தே நிற்கின்ற நீசராமவர் பிறர்க்கு இதஞ்சொல்லார்; தமக்கும் அரண் விசாரியார்; தாந் தேடப்பட்ட பொருண்மேலேயுள்ள பற்றுவிடமாட்டார்; அப்பற்றுவிட ஜிநதர்மங் கேளார்; என-று.

பிறர்க்கிதஞ்சொல்லுவர், தமக்கும் அரண்விசாரிப்பர், அறங்கேட்பர் நல்லோராதலாலே, அச்செயல் வீட்டுலகநிக்கு வினக்கென்பது இதனாற் கூறியதாம். இதனுட் கேள்வியினுங் கொல்லாவிரதம் என்பதனால் 'கொல்லுதே துணிந்து' என்னுமுடிநிலைத்தொடர்க்கப்பட்டது. உயிர்மேல் அன்பிலராதலாலே இதஞ்சொல்லாரென்றும், பொறிவேட்கையராதலாலே தமக் கரண்சூழாரென்றும், கெடுகின்ற பற்றுவிடாராதலாலே கேளாரென்றும், 'சித்திரத்திலுருவுஞ் சிதைத்தலாகாது' என்பது அறநூலாதலாற் 'கேள்வியினுங் கொல்லா வதத்தது' என்றுங் கூறினர். மாவாற் செய்த கோழியாலுங் கொலை வந்தது †யசோதாகாவியத்தைத் காண்க. சூழ்தல்-விசாரித்தல். நசை-ஆசை. கேள்வி-வார்த்தை. (உ)

---

* கில் என்பது வலியுணர்த்துவதோர் இடைச்சொல். இது வினையாய்க் கிற்பன், கில்லேன் என வருதல்போல, ஈண்டும் கில்லார் என வந்தது. சூழ் பொருண்மேல் நசைவிடக்கில்லார், சூழ்பொருண்மேல் நசைவிடத் திருவறங் கேளார் என இயைத்துரைக்க. நசைவிடக்கில்லார்-பற்றுவிடமாட்டார் என்க வாறு. நன்மையினை வல்லேனென்று செய்கிலன்; தீமையினை மாட்டேனென்று தவிர்ந்திலன்; எண்ணும் பொருளில் "கிற்பன் கில்லேனென்றிலன்" (திருவாய் மொழி-நஉசு) எனப் பெரியார் பணித்தவாற்றான் இதனை அறிக.

† யசோதரன் அவந்திநாட்டு உஞ்சையினிகர்க்கணிருந்த ஓரரசன்; மாவினாற் கோழியுரு வினைந்து, அதனைக் காளிக்குப் பலிகொடுத்ததனால் இவனும், இவனை ஈதுபுரிகவென்று தூண்டியதனால் இவன்தாய் சந்திரமதியும் கொலையுண்டு பின்னரும் பல இறப்பிறப்பெய்தி அப்பிறப்புக்களிடாறும் கொல்லப்பட்டழுன்றனர் என்பதனை இச்சரிதை விரித்துணர்த்தும். இது தமிழில் மூன்றாந்திருபது செய்யுட்களால் ஒருசிறுகாப்பியமாகமுன்னோர் பாடப்பட்டுள்ளது. இது யசோதரகாவியம் எனப்படும்: இதன் பாடலிற் சில புறத்திரட்டுநூலுட் கோக்கப்பட்டுள்ளன. இற்றைக்கு முப்பத்தைந்தாண்டுகட்குமுன் சரியம்புத்தூர்ப் பாதுபலிநயினாலி இம்நூ அச்சிடப்பட்டுள்ளது.

நீசா ணுவிடங் கண்டுகொண் டாய்கெஞ்ச நின்றிலங்குந்
தேசா ணுமொளி மூண்றுடை யானிரு செஞ்சுடரோ
டேய்சா ணுரவிக் தங்களல் லாற்சுமக் தீன்றெடுத்த
தாய்சா ணுதந்தை தான்சா ணுைநைந்து சாமவர்க்கே.

இ-ள். நெஞ்சமே! நிலைபெற்று உலகில் விளங்குகின்ற ஒளிதருதற்கெல்லாம் ஆதாரமாயிருக்கின்ற பிரபாவலயமூன்றினையு முடையவராது இரண்டு சூரியனையொத்த பூதகாமரைகளல்லாமல், கர்மபந்தத்தால் வருத்தமுற்று இறக்கின்ற மானிடர்க்குத் தாயும் தந்தையும் புகலிடங்களல்ல வாதலால், நீ, உனக்கு நல்ல புகலிட மறிந்து புகுந்தாய்; எ-று.

இதனால், தன்னெஞ்சுக்கு உறுதிகூறுவதுபோலே பிறப்பு அற்று நீங்கற்கு உபாயங்காட்டலாற் *பிறிதுமொழிதலாம், நெஞ்சம்-அண்மைவிளி. ஒளி மூன்றும் முன்னர்க் கூறினும் (உசு). வய்-ஒத்த. (சநு)

சாமனை சுத்துகின் காசன மாசனஞ் சாதுரங்கள்
சோமனை வெல்சுடர் வெண்குடை நல்கொடித் தங்கமன்னர்
காமர சாஞைவ ரத்திக ளாதல்கண் டாலுங் தொண்டர்
பூமனை மேல்வருங் கற்பக நீழற் புகுகிலரே.

இ-ள். சாமனை முதலாகத் தவளசத்திர மீறாக எண்ணப்பட்ட சிறப் பெல்லாமுடைய †ராசாதிராசரும் அந்நல்வினை நீங்கலோடும் இரக்குந் தொழி லுடையராதலைக் கண்டுவைத்தாலும், மிச்சர், இச்செல்வம் நிலையல்லவென் றறிந்து இறைவன் சொன்ன துறவறம் புகுகின்றிலர்; எ-று.

இதனால், நிலையாமையண்டும் பற்றுவிடுகிலர் மிச்சர் என இரங்கியதாம். மாசனம்-மந்திரி புரோகிதர் முதலியோர். அத்திகளாதல் - இறக்குந்தொழி லினராதல்; எலும்பாதலுமாம். "யானை யெருத்தம் பொலியக் குடைநிழற் கீழ்ச்-சேனைத் தலைவராய்ச் சென்றேரு-மேனை, வினையுலப்ப வேறுகி வீழ்வர் தாங்கொண்ட, மனையாளை மாற்றூர் கொள" ‡ என்றூர் பிறரும். இறை வனைக் கற்பகமென்று உருவகஞ்செய்ததனாலே, துறவறத்தை, அதற்கேற்ப நிழல் என்றூர். (சச)

---

* இஃது ஓரலங்காரம். இதனைப் "பீலிபெய் சாகாடு மச்சிறு மப்பண் டஞ் - சால மிகுத்துப் பெயின்" (திருக்குறள்-சஎடு) என்பதற்குப் பரிமே லழகர் உரைத்தவாற்றால் உணர்க.

† தங்கமன்னர் சாம் அரசானவர்-உயர்வாகிய வேந்தர்கள் இச்சிக்கின்ற அரசர்; இதனைற் போந்தவாருள் ராசாதிராசர் என்பது.

‡ நாலடியார்-ங

திருநூற்றந்தாதி மூலமும் உரையும்.

புகாநின்ற ஞாயிறு போகின்ற செல்வமும் போம்புனலுட்
டொகாநின்ற தூய்மண லொக்கின்ற சுற்றமுஞ் சோர்ந்திளமை
யுகாநின்ற மேனியு மேலுந்த வாவென் றுணையடைந்தே
னகாநின்ற தாமரை மேனடந் தேகிய நற்றவனே.

இ-ள். எழுந்துவிழுகின்ற ஞாயிறுபோலத் தோன்றிமறைகின்ற செல்வமும், யாறுமணல்போலே வேறுபட்டசுற்றமும், கணந்தோறும் இளமை கெடுவதாகிய உடம்பும் உயிர்போம்பொழுது கூடவாரா என்று உனது திருவடிகளே அடைந்தேன்; நற்றவனே! **எ-று.**

இதனால், சாணைடைவார்போலே நிலையாமைகூறியதாம். ஞாயிறுபோல என உவமை வருவிக்க. ஆற்றுவெள்ளத்தால் ஓரிடத்தில் மேடிடப்பட்ட மணற்கூட்டம், அற்றைநாளே அவ்விடத்தைவிட்டு மற்றோரிடத்தை மேடாக்கலும் அவ்விடத்தை வேறிடத்துமணற்குவை வந்து மேடாக்கலுமாகிய நிலையாமைபோல, ஒருபிறப்பின்கண்ணே ஒருவற்கு உறவினராயிருந்தோர் இறந்து பிறந்து மற்றொருவற்கு உறவினராதலும் மற்றொருவற்கு உறவினராஞ்சு அவ்வாறே மூன்றொன்பானுக்கு உறவினராதலும் இயல்பாதலால் 'மணலொக்கின்ற சுற்றமும்' என்றார். நகாநின்ற – ஒளிவிடாநின்ற. (அடி)

நற்றவர்க் குச்சித்தி கல்லெல் லார்க்கிரு கைவினையுஞ்
செற்றவர்க் குச்செய்ய தாமரை யேறிச்செவ் வேநடக்குங்
கற்றவர்க் குக்குரு டொத்தழல் வேற்குமற் காட்டிநந்த
மற்றவர்க் குச்செய்வ தாளல்ல தேதுங்கைம் மாறிலையே.

இ-ள். கல்ல தவத்தைச் செய்பவர்க்கு மோக்ஷத்தைக் கொடுக்கவல்ல வரும் என்வகைவினைகளையும் வென்றோருமாகிய சித்தபரமர்க்கும், தாமரைப் பூவின்மேல் நின்ற அருகபரமர்க்கும், பிறவிக்குருடையொத்து மித்தியாமார்க்கத்தே நின்ற எனக்கும் கல்ல காட்டிநந்த ஆசாரியர்முதல் மூவர்க்கும் ஆட்படுதலல்லது உலகம் செய்யும் கைம்மாறு வேறுண்டோ; **எ-று.**

இதனால், பஞ்சபரமேஷ்டிகளது ஸ்வரூபங் கேட்டோன் மிச்சகீங்கியபின் அவர்போல் புகழ்ந்ததாம். செற்றவர்க்கும், கற்றவர்க்கும், மற்றவர்க்கு மென உம்மை வேறுவிக்க. என்வினையும் செற்றவற்கு என்றவதனால் மித்தராயிற்று. மற்றவர் என்றதனால் பரமரையல்லாத ஆசாரியர், உபாத்தியாயர், சாதுக்கள் என்னு மூவரும் அடங்கினர். (அடி)

மாறு மனங்கொண்டு வாதூர் தொழும்பிண்டி வாமன்மெய்ந்நூ
றேறு தொழிந்த சிறுமா னிடரென்ப தீமுதலாய்
நூறு யிரக்கொலை கோளு தெழுந்து வீழ்ந்தொருகா
லாறு கெடுத்து யர சோடா நாக* மடைபவரே.

இ-ள். தீவினைவது முதலாக நூறுயிரம்மீதம் நாகர் வருத்துவது பொறுக்கமாட்டாராய், எழுந்தும் விழுந்தும் ஒருபொழுதும் ஒழியாத துயரத்தை யுடைய நாகத்தைத் அனைத்தலை, அருகாரமேசுவாரால் அருளிச்செய்யப் பட்ட பாமாகமம் தெளியாதவர் என்று சொல்லுவர்; ஈ-று.

இதனுரை. மிக்க தீவினை யாகிய அந்த நாகத் புகுதேல் என்றவாறு. மாறு மனம்—இடைவிடாமனம். கோளுணை—பொருணை. கொலை—வருத்தம். (சஎ)

அடைபு மன்றுளை யொண்கண் டடைகுவ ராசனமுங்
குடைபு தருவிட நின்றோர் நுவிற்றிய கொய்தகஞ்சே
முடைபு மடர்கொ ளுடற்பிண் டுறைபொரு ணூலெலாங் கரைவெல்லும்
படைபுரி பைம்பொ னிழற் பரமா கமப்பாவே.

இ-ள். ஆசனமும் நுடைபுறுதலிய மீதவர்களோற் செய்யப்பட்ட என் சிறப்புச்சிங்காசனமும் பாவாய்! உலகு முதலாக மகளிர்முக மனிதர் துய்க்குஞ் சிற்றின்பம்விரும்பாத உண்மை வந்நூல்கேட்டு உமதுபெருமையறிக் கடையுமவர் அடையார்; ஈ-று.

இதனுரை. ஊசிக்குழையில் ஆகாசக்காணலாமோ என்பதாம். கண்டு என் பதனுள் னகரம் மறைந்து கண்டெனவு மாம். கண்டு-கேட்டு; "காணுங்காலம்பிறை யாயக்காண்" என்றாராகலின். இன்னுங் கண்டு என்பதனை என்ன செல்வங் கண்டு எனவும் சொல்லிய நிகம்பராதலாற் பழிப்பதுபோலப் புகழ்தலுமாம். குயிற்றிய பொருளுக்கு பெயரெச்சம் பரம்பார் என்னும் பெயர்கொண்டது. பரம் பரர் மேம்பட்ட மனமையுடையர் என்பதாம். குயிற்றுதல்-பண்ணல். தொடர்ச்சிகருதி முடைபுறுதலென்பதனை முடை. படைவிழியாருமில்லாத என்னும் பெய ரெச்சம் உண்மை என்னும் பெயர்கொண்டது. (சஅ)

---

* ஏழாம் நாகம்-தமத்தமப்பிரபை என்பது; இதனை 'இருளினிருளிருள்' என்பர் நீலகேசித்தெருட்டையார் (தருமவுரைச்சருக்கம்-சஅ). நாகர் ஏழின் பெயரினையும் "தெறியத் தொண்ணெறி பொருடெளிக்தார்" என்னுஞ் சிந் தாமணியுரையில் (முத்தி--உசு) நச்சினார்க்கினியர் கூறியதனால் உணர்க.

பாம்பற்றி நீக்கவொட் டாவினைப் பாசமெய்ப் பாவனைவா
ளாம்பற்றி யீர்ந்தடி யேனுய்யப் போம்வண்ண மைவகைப்பூஞ்
சாம்பற்றி ஞங்வலி சாய்த்த வீரனைத் தண்புகழ்போல்
வாம்பற்ற ஞானியை மாசற்ற சோதியை வந்திப்பனே.

இ-ள். காமனை வென்ற வீரனை, ஞானியை, சோதியை அடியேன் வணங்குகின்றது யாதுகாரணமென்னில்;—மேலாயுள்ள குணங்களை யாதும் பற்றி, என்னை ஒருகாலும் பிரியவொட்டாத வினையாகிய இரும்பை உண்மைத் தியானமாய வாளாத்தைப்பற்றி யறுத்துப்போகட்டுப் பிழைத்துப்போம்படி; **எ-று.**

மூன்னிற்கவிலில் இறைவனையடையாக் கீழ்நாளைக் காட்டி, இதனால் அவனையடைந்து வினை வெல்வேமென்ன வியந்ததாம். எனையோர் பெண்ணுலப் பட்டனராதலின் இறைவனை வீரனென்றார். பாம்—மெய். ஆம் என்றதனாலே இரும்பு வருவித்தாம். (சக)

வந்திக்க வும்புகழ் வாழ்த்தவுந் தாழ்ந்திலை வானமெல்லாங்
கந்திக்க மேற்கொள்ளுங் காரிமை யத்தனைத் தாட்கமலஞ்
சிந்திக் கலும்பனை டத்தீப்பரி ணுமத்தரஞ் தீவினையாற்
பந்திக் கவைபண்ணை நுன்னடி களாப்பிற ந்தனனே.

இ-ள். வாழ்த்தவும், வணங்கவும் தாழ்ந்தத்தக்கவல்லவாய் ஞாயமெவ்கும் பரிமளிக்கக் குளிர்ந்த தாமரைப்பூவை மேற்கொள்ளும் எந்தை தாளாகிய தாமரைப்பூவை யான் தியானித்தவுடன், அநாதியில் பித்தியாபரிணுமத்தாலுண் டாகிய தீவினை எந்த மூறையே கட்டினை, அந்த மூறையே நீக்கினை; **எ-று.**

இதனால், வாழ்த்து வணக்க மிரண்டினிற் தியானமே வலியுடைத்தென்ற வாறு. கந்தித்தல்—பரிமளித்தல். கார்க்கமலம்—குளிர்ந்த தாமரை. பந்தித்தல்—கட்டல். (இ0)

பறந்தபுக் குப்பர வாதிகண் ணும் படுகாலுன்
னைறந்தலைப் பட்டவர் கட்டளைத் தேநிற்கு மார்வமுள்ளிட்
டிறந்தமுங் குற்றத்தெ நும் மீசநின் னேயர்கட் கெண்ணெதிரே
நிறந்தநிற் குஞ்சித்தி ரண்ணைகார் வாயிற் நிருக்கதவே.

இ-ள். ஈசனே! விரையச்சென்றபுக்குட் பாசமயிகள் கொருக்குகின்ற கொடிய நாசமானது, உனது ஸ்ரீதர்மத்திலே வந்து தலைப்பட்டவர் புகுதாமல்

அடைத்துக்கிடவாகிற்கும்; உனது அன்பர்க்கென்றுசொல்லி எதிரே திறந்து நிற்கும், சித்தியென்ற நல்ல திருநகரிலாயிலில் உளதாகிய அழகிய கதவு; எ-று.

இதனால், பரவாதிதட்கு தரிசன்நிறப்பும், வீட்டினடைப்புங் காட்ட வேண்டி, அறத்துள்ளார்க்கு வுலத்தின் அடைப்பும் திறப்பும் கூறியதாம். பறத்தல்-விரைதல். ஆர்வம்-ஆசை. இறந்த முக்குற்றம்-வடநூல்வழக்கு. (நிக)

கதமொழி தீர்மின் கருமுக டேய்மின் கருணைநெஞ்சொ
டிதமொழி கூறி னின்னுயி சோம்புமி னொப்பொழு துஞ்
சுதமொழி கேண்மின் சுகமிக வெண்ணிற் றுறவர்செ ன்ன
வதமொழி யேம்மி னிவைநிக ரும்திரு வாய்மொழியே.

இ-ள். அறிவுடையீர்! எக்காலத்தும் பேரின்பம்வேண்டின், சினத் தோடேகூடிய மொழிகளைத் தவிர்மின்; அதற்குக் காரணமான குறிப் பையும் சுருக்குமின்; கருணைகூடிய மனத்துடனே பிறர்க் இதமான வார்த் தைகளைச் சொல்லுமின்; உயிர்க்கொலை தவிர்மின்; பரமாகமத்தைக் கேட்பீராயின்; விரதங்களைப் பொருந்து மின்; இவை ஜினேசுவரனது திரு வாக்கால் அருளிச்செய்யப்பட்டனவாம்; எ-று.

இதனுள், யான் சொன்னவற்றை இகழ்ந்தவனை நினைவுக்கு கருவி கூறியதாம். இதனுள் அறிவுடையீர் என்பது கொல்லெச்சம். கதம்-கோபம். தேய்த்தல்-சுருக்கல். கழுவு-சினகுறிப்பு. சுதம்-பரமாகமம். விதம்-விரதம். எப் பொழுதும் என்பதனை மத்திமதீபமாக்கி எல்லாங் கூட்டுக.

மொழித்தே னியம்புழும் மூடர்சொற் கொண்டு முனைவன்மெய்ந்நூல்
பழித்தேன் மயிர்கள் சொற்பொரு நட் கொண்டுமைப் பாலனென
விழித்தே னெழுந்தி லார்க்கிடர் கொண்டு விலங்குகள்போற்
கழித்தேன் மதிமந்த மாயை யருமந்த காலத்தையே.

இ-ள். மூடர்சொற்பொருளைக் கைக்கொண்டு பரமாகமப்பொருளை இத் தனைநாளும் பழித்துவிட்டேன்; காழுர்சொற்பொருளைக் கைக்கொண்டு விழி யினையுங் குழலினையுமுடைய மதனிர்பொருட்டு வருத்தமுற்றுப் புத்தியீனனாய் அருமந்தகாலத்தைக் கழித்துவிட்டேன்; எ-று.

இதனால், உண்மைதெரிந்தவர் வெகுளாமல்செய்வரோ என்பதாம். கழித் தேனென்பதனால் இத்தனைநாள் எனபது குறிப்பால் வந்தது. மூடர் சொல்லுகிற விஷயங்கள் செய்தற்கெளியனவாதலால் 'மொழித்தேன்' என்றும், அவையும் தெரிவிலக்காயிருத்தலால் அவற்றைச் சொன்னவர்களை மூடர்களென்றுங் கூறி னர். முழுமூடர் என்பது மும்மூடர் எனத் திரிந்தது. முனைவன்-ஜினசுவரன்.

மயரிகள்-காமநூலியர். மயரிகள் சொற்பொருள் கொள்ளுதல்:—முற்றிழை மூலையார் மூலமுக டழுந்தக்—கைத்தல மினண்டிற் களிப்புறத் தழீஇ-வாயமு துண்டுபல் வகையிற் புணர்ந்து—காளொரு கணமென நண்ண வாழ்தலே—வீ டடையுநெறியென்றுகொள்ளுதலாம். பானல்-நீலோற்பலம். முறையழித்த லால் விலங்கென்றார். (உக)

காலங் கழிதொறுங் கோலங் கழியக் கறுத்தருஞ்சி
நீலங் கழிதர நீருங் கழுத்தி நிருமலன்றாண்
மூலங் கழிதல்செய் யாதுய்ம்மி னென்னினு மூர்க்கர்தேய
வேலங் கழிவிழி யார்வலைக் கேபட்டு வீடுவரே.

இ-ள். நமதுநாட் கழியுந்தோறும் நமதழகுங் கழிய, மயிர் கறுப்புப் போய் வெளுப்ப, நீரும் இறந்துபோகின்றீர்; திருமலனது திருவடிகளாகிய மூலங்களை விட்டுநீங்காதே பற்றிப் பிழைத்துப்போமின் என்று கூறினும், அந்தோ மூர்க்கர்கள் வேலைத்தோற்பித்த விழியினையுடையார்வலைக்கேபட் டிறந்துபோவர்; எ-று.

இதனால், புல்லறிவினரை அறிவுகொளுத்தல் யார்க்கும் அரிதென்பதாம்; "காணுதாற் காட்டுவான் காண்பானைக் காணுதான், கண்டானுங் தான்கண்ட வாறு" என்றாராகலின். கோலமும் என உம்மை வருவிக்க. வேலம்-அம் காரியை. கழி விழி-தோற்பித்த விழி. (இச)

வீடும் வினைகளின் பந்தமு மெய்ம்மை விரித்துரைத்த
நீடு மலர்ப்பிண்டி நின்மல நின்மலர்ப் பாதநண்ணீ
ராடு மவர்க்கர மங்கைய ராவி யனுங்கரீர்
பாடு மவரையும் மூவுல கேசர்களும் பாடுவரே.

இ-ள். வினைகள் விடும்படியையும், அவைகள் ஆத்துமாவினிடத்தே கட்டும்படியையும் உண்மையாக விரித்துச்சொன்ன நின்மலனே! தினது திரு வடிவிலக்கியதீர்த்தந் தெளித்துக்கொள்ளுமவர்க்குத் தெய்வமகளிர் ஆடாநிற் பர்; நின்புகழைத் துதிக்குமவர்களை இம்மூவுலகு லிக்கிழரும் துதியாநிற்பர்; எ-று.

அருங்கேளனார் குன்றம் முன்னிற் கூறி, இதனால் அது கேட்டாரது இன் பமு கூறியதாம். பந்தம்-கட்டு. மெய்ம்மை-உண்மை. நீடுமலர்-அதிசயத்தால் எக் காலத்தும் மலர்கின்ற பூ. அனங்கனல்-பெயர். (நஇ)

"திருமகளும் — அரசு.

பாவை னேசில பாத்தகத் தெவரைப் பண்ணெறிமே
லோவை னேரின் ஒளிநெறி கண்டபின் னென்னேயுண்ணு
வேவை னேரினை னெறத்நினை யீத்தி விளைத்துணைப்பெற்
றூவை னேயின்று மாநாயிர் வேட்டை யதிசயனே.

இ-ள். மூன்றதிசயங்களையுடைய ஸ்வாமியே! நின்னைப்பாடின காவாலேலில் வஞ்சகத்தேவரையும் பாடுவனோ; நின் ஒருவழிப்பட்ட சங்மார்க்கத்தைக் கண்டும் பலவகைப்பட்ட மார்க்கத்தின்மேற் செல்லுவனோ; யான் மூன்று உண்னைக் கருதாத வேடனையொப்பக் கொலைபுரிந்தேனாயினும் நினது பரிதர்மத்தை நினைத்து அதனை நாடோறும் உயர்ந்தகொலைபுரிவனே; எ-று.

இதனால், விளக்கைப்பிடித்துக் கிணற்றில்விழுவனேனே; இனி அவை செய்யேன் என்று சுட்டுங்கூறியதாம். பரமாகமங்கேட்டோன் கொலைபுரியான் என்பது தோன்ற 'வேவை னேயாடுவனே' என்றார். வேட்டை-கொலை. மூன்றதிசயமாவன;---ஸ்தானாதிசயம், கர்மகூபாதிசயம், ஸ்தவீகாதிசயம் என்பன. (நசு)

அதிதேசை யெவ்வு மாயிரோர் மேலிவ் வுற்றுள்ளந்தான்
மதிதேசர் முன்பன் பின்பு தேவர் மலர்ந்தனர்
குதிதேச நிலைபெற் றாக்கப்பெற் றோர் கொடுப்பதொன்றையும்
பொதிதேச மறைப்பொரு ளிவை தேர்ந்தனிற் பேரெறிக்கே.

இ-ள். உலகிலுள்ள நூலையற்ற அஞ்ஞர்களைப்போலே அஜர் சொல்லுகின்ற கூற்றம் எக்காலமும் மயலையுறாமே அறிவிழந்துகிடவோம்; மலர்மேனடந்தார் இவ்வையகமெங்கும் நன்னிலையோடே அவர்திருவுறமாகிய பொதிசோறுடையோம்; ஆகலால் தனிப்பேரெறிக்கு மறந்தோம்; எ-று.

இதனால், உடம்பின் பயன் பெற்றோம் என்பதாம்; "உடம்பின் பயன் கொண்டார் உற்றம் - மருவுக்கற பரிவ திலர்" என்றாராகலின். அதுதல்-கொல்லுதல். (நஎ)

நெறிக்கொண் டெழுந்தவை-நின்னற மாகிய நீணிலச்செந்
நறிக்குந் தியுலண்ண மனத்தனி யானை நினைபரிந்தைதம்
பொறிப்படுத்தி யோடைடம் புலன்களும் புக்கழி யாமலின்னும்
குறிக்கொண்ண உருகுநன் டாய்பிண்டி நீழற் குணதானே.

இ-ள். குணங்களோடு தரித்தவனே! பரமமாகிய நிலைபெறுத கொடுநெறியெங்கும் தடுமாறி, ஒருபடியாக நினது திருவுறமான நன்றுகி நீண்டு

தாலடியார், அறுசெலவியுரைத்தல்---கி.

நிலைபெற்றுச் செவ்விதாயிருக்கிற கீர்த்தியுடனே வந்துசேர்ந்த என்னுடை மனமாகிய தனியானையானது தலையையறுத்து ஐந்துபொறியாகிய பன்னியுடனேகூட ஐந்துவிஷயமாகிய கழனிகளிலும் புகுந்து விரதங்களாகிய பயிரை அழியாதபடி இன்னமும் குறிக்கொண்டு காப்பாயாக; **எ-று.**

இதனால், அறைபோய நெஞ்சினர்க்கு விரதமில்லை என்பதாம். மூன்றுங்கொடுத்தது அதுவேயாதலால் 'இன்னமும்' என்றார். நிலைபெற்ற செவ்விதாகிய தறி என்பதனாலே நிலைபெறுத கொடுநெறி வருவித்தாம். தலைவிலங்கு. பரிதல்-அறுத்தல். (இ)

குணதா ரேமுனி மங்கைய ரேகொலை நேர்விலங்கே
பணதா ரேமுத னுற்சுர ரேயவர் பாணையரோ
டணதரு நேமி யாதன ரேயன வாறிருமாக்
கணதா ரேறுசெந் தாமரை காரணெங் கருந்தலையே.

இ-ள். முனிவரர், ஆர்யாங்கனைகள், கொலையைவிடவுடன்பட்ட விலங்கு ஜாதி, பவணர் முதலான நால்வகைத்தேவர், அவரது மனைவியர், சக்கரவர்த்தி என வுலகிற் சொல்லப்பட்ட பன்னிரண்டுகணமுஞ் சூழ்ந்த அருகத்தேவர் எழுகின்ற தாமரைப்பூவாம்; பிறரேறுகின்றதன்று என்னுடைய பெரிய தலையானது; **எ-று.**

இதனால், யான் பிறரை வணங்கேன் என்றதாம். குணங்கொடுத்தலால் அது முனிவர்க்குப் பெயராயிற்று. நேர்தல் - உடம்படல். மானத்தம் பங் காண்டலோடு மானகஷாயம் விடுதலாலே 'நேர்விலங்கு' என்றார். கொல்லவிட என வருவிக்க. ஏகார மாறும் எண். அணதரு அரதனர்—நல்வினை தானேயாகையாலே இட்டப்பட்ட சக்காரத்தினத்தையுடையர். அணைவல்-இட்டல். கருமை - பெருமை. (ஈ)

கருந்திரை காணிலும் வெண்ணுரை காணிலுங் காட்சியுள்ளிட்
டருந்திர யந்தந்த வண்ணலைக் காண்கில மாகனிவாய்
வருந்திரை யோய்வதும் போம்புனல் மாய்வது மாத்திரையிற்
பருந்தினை கொள்ளமெய் வீழ்வது காணும் பளகர்களே.

இ-ள். தமது மேனி நிறைபுகக் கண்டாலும் நிறைபுகக் கண்டாலும் காட்சி முதலிய ரத்நத்ரயத்தை அருளிச்செய்த ஸ்வாமியைக் காணுதற்கு வேண்டிய முயற்சி செய்கின்றாரில்லை; கடலினின்று வருகின்ற திரை கையருகே வந்தோய்வதும், பிரவாஹமாகப் போகின்ற ஜலம் போகப் போகச் சுருங்குவதும் போல, இறக்கின்ற தமதுடம்பைக் காண்கின்ற மூடர்கள் **எ-று.**

இதனால், அவர் அறங் கேட்டாராயின் நிற்கின்றது அறமேயென்று டைப்பிடிப்பர் என்பதாம். காட்சி-ஸம்யக்தர்சனம். அருந்திரயம்—பெறுதற் ரிய ரத்நத்ரயம். ஸ்வாமியைக் காண்டற்கு வேண்டும் முயற்சியாவது-காட்சி முதலிய ரத்நத்ரயத்தைக் கேட்டல். ஆர்கலி-கடல். மாய்வதும்போல என வமை வருவிக்க. பளகர்-மூடர். (கூ0)

பளகரெல் லாமனைப் பாரம் பரித்தனர் பல்வினைக்கே
யுளகரெல் லாமொத்தெரவ் வாநெறி நின்றன ரோடரிக்கண்
ணளகமெல் லோதியர்க் கார்வமில் லாவற வேந்தவந்தச்
சளகரல் லாத சதுரர்நின் வேடந் தரித்தனரே.

இ-ள். அறவேந்தனே! நீ தரித்த வேடத்தை ஒப்புக்கொண்டு மகளிர்மேற் பற்றிலராய் வீடுசேருஞ் சதுரர் துறவறமே தரித்தனர்; அதனை மேற்கொண்டு மகளிர்மேற் பற்றுவிடாராய்ப் பளர் இல்லறமே பூண்டனர்; அதுநிற்க, பல் வினைக்குமுள்ளான மிச்சத்தர் இவ்விரண்டறத்திற்கும் ஒவ்வாதெறி நின்றனர்; எ-று.

இதனால், அணிமையில் வீடுசேர்வாரையும், சேய்மையில் வீடுசேர்வாரை யும், ஸம்ஸார ஜீவனையும் விளக்கியதாம். நின்வேடத்தை ஒத்துப் பற்றில்லார் துறவுற்றனர் என்றவாறு. பற்றுள்ளார் ஒத்து இல்லற்றின்றனரென்றும், வினைக்குள்ளானவர் ஒவ்வாதெறி நின்றனரென்றுங் கூட்டுக. பரித்தல்-தரித்தல். உளகர்-உள்ளானவர். ஒவ்வாதெறி-மித்தியாமார்க்கம். சளகர்-இட்டளர்; மகளி ராயிற்று; "ஆதி நளஞ்சளனென்ன முருணைத்தார்" என்றாராகவின். (கூக)

வேடந் தரித்து விதியந் தரிக்க வொழுகிமெய்ந்நூற்
பாடந் தரித்துண்மை பாரா முனிவனிற் பாயரிமான்
பீடந் தரிக்க விருந்தபெம் மானறம் பேணலின்றி
மூடந் தரித்தென்ன மயத்துநின் றார்கல்லர் மும்மடியே.

இ-ள். தவவேடத்தைத் தரித்துச் செய்யவேண்டிய கருமமானது பேதிக்க நடந்து, பரமாகமத்தை ஓதியுணர்ந்து உண்மைப்பொருளைத்தெளியாத முனிவரைக்காட்டிலும், அருகபரமரது ஸ்ரீதர்மத்தைக் காணாமல் மூவகை மூடத்தையுந் தரித்து வண்வரைத்தெருக்கில் நின்றவர்கள் மூன்றத்தனை நல்லவ ராவார்கள்; எ-று.

இதனால், விளக்கைப்பிடித்துக் கிணற்றில் விழுகின்றார்; இவரே தறுகணர் எனக் கூடாவொழுக்கங் கூறியதாம். * "நெஞ்சிற் றூறவார் துறந்தார்போல்

---

* திருக்குறள்—உசு.

வஞ்சித்து - வாழ்வாரின் வன்கணர் நில் " என்றார் பிறரும். அந்தரித்தல்-பே தல். அரிமான்-சிங்கம். மூவகை மூடமாவன:— உலோகமூடம், தேவதாமூட பாஷண்டமூடம் என்பன. எண்வகைச்செருக்காவன ;—பிறப்பு, குலம், வ செல்வம், வனப்பு, சிறப்பு, தவம், உணர்வு என்பனவாம். (க

மும்மடி சூழ்ந்த முழுவொளி நாத செழுஞ்சுடருக்
கம்மடி கல்ல வடியிணை தாங்கிநு நண்ணுதற்குத்
தம்மடி யென்மனப் பேலலம் றேதலி மீதுகொள்ள
வம்மடி கேளென்ன மாட்டா முளரி மதுமலரே.

இ-ள். சிரசின்மேல் தாங்கிக்கொள்ள ஸ்வாமிகளே வாரீர் என்று சொல் மாட்டாத தேன்றங்கிய தாமரைமலரானது, மூன்றுமடிப்பாக வளைந்த மூ வொளியாகிய பிரபாவலயத்தையுடைய ஸ்வாமியினது உதயபாநுவிலும் ஒ மிகுந்த திருவடிகளைச் சுமக்கினும் அடியேனது மனம்போல நண்ணுதற்கு வ மையுடையதோ; என்று.

இதனுள், தாமரையினுள் நிறைந்தது தன் மனம் என்பதாம். தம்-அசை, வ றே-வல்லதோ. வம்மின் என்பது வம் எனக் குறைந்தது. முளரி-தாமரை. (சுந

மலர்தோய் வயிறுமும் மாசை -கங்குரு மல்லு றுப்விச்சு றுங்
கலர்தே டிடக்க வுலகெலாங் சூழ்ந்நங் கவர்தருமைம்
புலர்தோய் பொறியுடைப் பொய்த்தேவர் கள்புன் னெறிகளுப்புக்
கலர்தே னாகிந்த வூர்தி யினியெம்மை யஞ்சலெங்னை.

இ-ள். பொய்த்தேவர்களது புல்லியமார்க்கம்புக்கு, அதனுல் மக்கள் தேவர், நரகர், விலங்கென்னும் நாற்கதியிலும் கலந்து வருந்தினேன்; அ போதும்; இனியேனும் அஞ்சாதேகொள் என்னவேண்டும்; என்று.

இதனுல் மிச்சகீங்க லினைநீங்கும் என்பதாம். மலர்தோய் வயிறு என்ற ஞலே மக்கட்கதியும், மண்ணென் றதனுலே விலங்குகதியும், விண்ணென்ற ஞலே தேவகதியுமாயிற்று. புன்னெறிகளும் என்பதில் உம்மை அசை. கலந்த அலைந்தேன் என்க. உலகாருஞ்சூழ்ந்நங் கவர்தரு மொறியுடைத்தேவர் என்ற அவரும் அவிவித்திரியமையப்பட்டவர் என்பதாம். (சுச

எம்மையும் மண்ணுலக கத்தோர் நியற்கை யிறைவரல்லாத்
தம்மைய வரிகள் செயற்பொரு ணம்புவர் தூமணிசேர்
பொன்னெயின் மன்னிய புங்கவ வல்லவர் பொய்ம்மைகண்டும்
பின்னையு நின்னறற் தெளரர் விடந்து பிணங்குவரோ.

இ-ள். நிலைபெறுத லின்பமார்க்கத்தோரது பொய்ம்மையைக் கண்டு மனத்தும் அவராற் சொல்லப்பட்ட பொருளையே நம்புவர்: நினது திருவுறத் தின் மெய்ம்மை கண்டுணர்த்தும் நூலை நம்பாராய்ப் பிணங்காநிற்பர்; இதற்குக் காரணம் யாதோ சொல்லாய்; எ-று.

இதனுள், கருத்தேற்ற மறியன்றிரு வெய்துமது என்பதாம். நிலைபெற்ற வன் என்றதனால் நிலைபெறுணையும், பொய்ம்மை என்றதனால் மெய்ம்மையும் வருவித்தாம். மற்றுரை—நிலைபெறுதல். கொலை, பொய், களவு, பிறர்மனை விழைதல் முதலிய பிழைபாடுகளை விலக்கிய செய்கையை இம்மையிலே அரசர் தண்டிப்பக்காண்டலின் 'கண்டுந் தேறார்' என்றார். (கூடு)

பிணங்கோ டெவ்வெரோரிற் பேரோத்து நினைறம் பேர்படைத்தங் ருணங்கோ ருயர்ந்தோ ருன்னெனுந் தேவர்தங் கோயில்கண்டாஎல் வணங்கோ டமைந்தெய்தி வாழ்த்தலு லோமவர் மானிடசோ டிணங்கோதை செய்தருளு மெல்லாம் வோமவ் விருவினைக்கே.

இதன் பொருள் வெளிப்படை. இதனுள் கண்மலிசெய்தவர் தீமை பெறுவ ரோ என்பதாம். கல்லாலையாடு மத்தினைத்துக்கும் கருவுகல்லுக்கும் பெயராத லாலே, பெயரும் பையில் வைத்த [illegible] 'ஆர்படைத்தங் குணங் கோழை' என்றார். பிணங்கோதை—மாறாயிருத்தல். குறள்—தீங்கெறியோர். அவர் மானிடர்—மற்ற [illegible] தீவினை. [illegible] (கூக)

[illegible] நீவினை நீயென் சேர்புரிபோ லுருவினை நோய்க ளுனினை நீயொரு வர்க்குமில்லாத் திருவினை நீயரன் மேனிசுடுக னீசிறந் தோங்குபிண்டித் தருவினை நீபுரட் சக்கர மேந்திய சங்கரனே.

இ-ள். கல்வினை தீவினையாகிய கடலைக் கடந்தலனும் நீ, வெந்தவைப் புரிபோலே முருவத்தையுடையையாயினும் விசித்தராமவரும் நீ; கேவல லக்ஷ்மி யையுடையனானும் நீ; அநிசயத்தாலே நிசைருகனும் நீ; அசோகவிருக்ஷத்தை யுடையவனும் நீ; நூலாலே எல்லாம் நீயாய் இருந்தாய்; எ-று.

ரூன்னிற்கவியிற் பெயர்மாத்திரை அவர்க்கு என்றார்; இதனால் அருகனை, மும்மூர்த்திகளும் பிறரும் நீயெனப் புகழ்ந்ததாம். *"ஆவே நருவின வாயினு மாபயந்த—மல்லே நருவின வல்லவாம்—பரல்போ, லொருதன்மைத் தாகு மற தெறி யாபோ—னுருவு பலவெனா னீங்கு" என்றாராகலின். இதனுள், ஆனிரையா

*நாலடியார், பெண்ணைடை—அ.

னென்றும், தசாவதாரனென்றும் அவர் கூறுதலாலே பிறர் பவமுடையர் என்பது தோன்ற 'இருவினை வென்றவன்' என்றும், அருகரே ஹித்தாமகர் என்பது தோன்ற 'உருவினையேனு மருவினை' என்றும், கேவலத்திரு பிறர்க்கில்லாமையாலே 'ஒருவர்க்குமில்லாத் திருவினை' என்றும், அவன் காமத்தா லெண்ணப்படாமல் இழிப்புண்டவனுதலாலே இவனெண்ணப்பட்ட நிசைமுகனென்றும்; அவன் கொல்லுஞ் சக்காத்தனுதலாலே இவன் சுகத்தைப்பண்ணுஞ் சக்கனென்பது தோன்ற 'அருட்சக்காமேந்திய சங்கரன்' என்றும் கூறினர். ஒரு-தல்-கடத்தல். சங்கரன் - சுகத்தைப்பண்ணுமவன். (சுஉ

சங்கையஞ் சார்தளர் நோய்க்கிடை யார்தழல் போல்விழுக்க
வெங்கயஞ் சாரிலு மெய்ங்கடுங் கார்வினை யார்களபக்
கொங்கையஞ் சாயலர் கோலகம் பார்வருங் கூற்றமூட்கார்
பங்கயஞ் சார்பத பங்கபத் தாணைப் பற்றுர்களே.

இ-ள். மித்தியாதேவதைக்கும், பிணிக்கும், கொல்யானைக்கும், யமனுக்கும் பயப்படார்; மகளிர் கோலங்கண்டு நம்பார்; ஜிநதர்மத்துள்ளார்; எ-று.

இதனுல், மெய்யிற் பிறரில்லாதலாலே தமக்குற்ற நோயைப் பொறுத்தலே தவமென்று பொறுப்பரென்பதாம். *"உற்றநோய் நோன்ற லுயிர்க்குறு கண் செய்யாமை, யற்றே தவத்திற் குரு" என்றுர் பிறருமெனக் கொள்க. வழிபடாக்கால் இடையூறுசெய்யுமெனினும் அதற்கஞ்சி வழிபடாராதலாலே 'சங்கையஞ்சார்' என்றுர். சங்கை-மித்தியாத்வம். 'நோவு செய்திடு நோய்பல வாகிடு-மாவி கொள்ளு மலாதன வுஞ்செயுந்-தேவி சிந்தை நிறைத்தனன் சீறுமேற்-காவன் மன்ன கடிதெழு கென்றனன்' † என்றதனுற் காண்க. கயம்-யானை. களபம்-சந்தனச்சேறு. உடலை ‡உட்புறம்பாக நோக்கி அசுசித்துவம் பாவிப்பதல்லது $கருந்தோலாற் கண்விளக்கப்படார் என்பது தோன்றக் 'கோலநம்பார்' என்றும், ¶உடம்பின் பயன் கொண்டவராதலாலே 'கூற்றமூட்கார்' என்றுங் கூறினர். நம்பல்-விருப்பம். (சுஅ)

---

* திருக்குறள்-உசுக.

† யசோதாகாவியம்-சசு.

‡ "பைம்மறியாப்பார்க்கப்படும்" என்பது நாலடி, தூய்தன்மை. உ.

$ "கருந்தோலாற் கண்விளக்கப்பட்டு" ஷை ஷை எ.

¶ "....உடம்பின் பயன்கொண்டார் கூற்றம்,
வருங்காற் பரிவ திலர்"

ஷை, அறன்வலியுறுத்தல்-ஙி.

பத்தர்ந்ற் சித்தனைப் பண்ணிரண் டோசனைப் பொன்னெயில்சே
ரத்தனைப் பண்டறி யாமையில் யானனந் தம்முயிர்கட்
கெத்தனை தந்தையுந் தாயரு மாயின னின்றெனக்கே
யெத்தனை தந்தையுந் தாயரு மானரெவ் வென்னுவனே.

இ-ள். அன்பர் மனத்துள்ளும் பொன்னெயிலுள்ளுமிருந்த சுவாமியை யானறியாமையாலே எண்ணிறந்த உயிர்களுக்கு எத்தனை பரியாயம் பிதாவும் மாதாவுமாயினனென்றும், அதனிற்க; எனக்குத்தான் அவர்கள் எத்தனை பரியாயம் பிதாவும் மாதாவுமாயினரென்றும் அவற்றை இப்பொழுது விசாரியாநின்றேன்; எ-று.

என்றும் என்பதனாலும், யான் என்பதனாலே அவர் என்பதனாலும் வருவிக்க.
* இடைநிலையில் இகரம் விகாரத்தாற் றொக்கது. (ஈக)

எண்ணுடை மாலையொ டோடை கொண்டிடத் தும்வலத்தும்
பெண்ணுடை யார்சிலர் பேதைகட் கீசர் பெருந்திசையா
நுண்ணுடை நாகர் நுவன்ற வருங்கல மாகியழுக்
கண்ணுடை யாரிந்தக் காசினி மேனமக் கீசர்களே.

இ-ள். எண்ணைத்தருந்த மாலையோடு கொல்லுதற்கு ஆயுதங்களெடுத்து, இடப்புறமும் வலப்புறமும் முறைமைய மகளிரையுடைய சிலர் மூடராயினோர்க்குத் தெய்வங்களாவார்; எமக்குக் கடவுள் யாவரெனில்;—திசையாடையையுடையார் அருளிச்செய்த இரத்தினத்திரயமாகிய மூன்று கண்ணினையுடைய முனிவரே, வேறல்லர்: எ-று.

இதனால், தாம்வீழ்வார் பிறர்க்கு ஊற்றமாகாராதலால் அவர் தலைவரல்லரென்று பாஷண்டமூடம் விலக்கியதாம். †"நிலையஞ்சி நீத்தாரு மெல்லாங் கொலையஞ்சிக், கொல்லாமை சூழ்வான் றலை". சூர்தல் - அறுத்தல். குற்றத்தைக் குணமாக்கியும், குணத்தைக் குற்றமாக்கியும் உலகை மருட்டுதலாலே மிச்சர் தெய்வங்களைப் "பேதையாக் கீசர்" என்றார். ‡"பேதைமையென்பதொன் றியாதெனி னேதமெனகாண் - தீயம் போகவிடல்" என்பதனைற் காண்க. ஆகாயம் அநுபமாதலின் 'நுண்ணுடை' என்றார். அருங்கலம் - ரத்நத்ரயம். (எ0)

---

* "தாயருமானார்" என்புழி 'இன்' என்னும் இறந்தகாலவிடைநிலையில் இகரம் என்க.
† திருக்குறள்-கூடு.
‡ திருக்குறள்-அகக.

ஈசனெனல் மூலு மிறைவனெனல் மூலு மிலங்கொளிமுக்
தேசனெனல் மூலுமெய்ந் தீர்த்தனெனல் மூலுஞ்சித் திக்திருவி
னேசனெனல் மூலுமென்ன னெஞ்சு ளிருந்திங்க ணீணிலத்தோர்
சே—ரூர்த்தமக் கேயநின் னாவர் போர்களே.

இ-ள். ஈசன் முதலாகச் சித்திக்கிருவினை னீங்க எண்ணப்பட்ட தலைமையான திருநாமங்கள் உலகமூன்றுக் தனிக்கு மிறைமையுடைய அருகர்க்கே பொருந்தும், மிகை தேவர்களெல்லாம் தம்தம் பெயர்மாத்திரமே உடையராத் தலை; என்று.

முத்தேசு-மூன்று ஒளி; அலை முன்னர்க்கூறினும். *எய்தல்-பொருந்தல். ()

போ யிரத்திரு நான்குடை யாணைப் பிறங்கிடைதற்
சீரா யிரத்திற் சிறந்தடை யாளைந் சித்திசெய்யுங்
காரா யிரத்தினை மூன்றனிப் பாலுள் கனிதைசெய்யா
தாரா யிரத்தி ரறியா தவரை யதிர்ஞர்களோ.

இ-ள். அறிவுடையீர்! திருநாமம் ஆயிரத்தெட்டினையுடையானை, உயர்ந்து கன்றிய புகழ் ஆயிரத்திலும் மிக்குடையவனை, மோகந்தருகிற பயனைத்தரு மேகம்போலே ரத்நத்ரயமாகிய விதையைப் பொறியப்பட்டவனை வணங்கி யிராதே, அந்த மோகத்தையறியாதவர்களை யாராகவினைத்து இரக்கின்றீர்; என்று.

இதனுள் மிடியாரை இரக்கின்ற பேறு பயனில்லையென்பதாம். பிறங்குதல்-விளங்குதல். (எஉ)

வரியோ மதுத்துடி முரியுங் கொட்டுல மகமத்தும்
வரியோ மதரைக் கவிகளல் லோமனம் வெள்ளியவைம்
பொறியோ டுழல்புன் புலனைமீ தெஞ்சம் புலனையல்லா
மூறியோ டுலோபிண்டி யாரை யாமெத்தூர் மூக்கியமே.

இதன்பொருள் வெளிப்படை. தென்கலை வடகலையறிந்து ஆகமமோதி மதாகவிகளான பேரறிவினையே இறையவனே வாழ்த்தவேண்டுமே; மோகாந்த காரச் சிற்றறிவினர் வாழ்த்தற்கு அரியர் என்பதாம். ஆரியம் - வடகலை. வறுமை - ஏழ்மை. மூறி - தளிர். மூக்கியம் - தலைமை. (எந)

---

* ...ம் செய்யுளையிற் காண்க.

முக்குற்ற நீக்கிய நின்குணை மூப்புனை சாமமில்லோன்
புக்குற்ற தீக்கதி போயினை யெத்தனை போலவற்று
ளக்குற்ற மானதல் லாமடி யேன்குற்ற மாட்புகுந்தே
னெக்குற்ற மெய்நினை யெம்பெரு மானினி நின்றமே.

இ-ள். நான் முக்குற்றங்களையு மொழித்த தினது அருந்த ருணைகுணங் களை மூற்காலத்தில் அறியாதிருந்தபடியால், நான் அடைந்த தீக்கதி எத் தனைபோ கழிந்தன; அவைகளி லடங்கிய கணக்கள்ற செய்த பாவக்குற்றங்களும் அடியேனுக்கு; அருட்பெரும்பதமாகிய அழிவில்பதமாய்ப் புகுந்துவிட்டேன்; இனி யான் செய்யுங் குற்றங்கள் எத்தனைக்கொடுமையதாயினும் அவை எமது இறைவன தேயாம்: **எ-று.**

இதனால், இனிமேல் யான்செய்யும் பிழை பிழையல்ல; உண்டாயினும் அவற்றைப் பொருட்டாக்கவேண்டுமென்பது கண்டதாம். (எசு)

குற்றமி டாவுயர் தூமை யாகெதி யீர்த்திடு நின்
செற்றம் விட் டார்நினை யாவெல்லை யம்பட மாகுமிம்மை
வற்றவிட் டார்கண் மலர்நிலை மாறி மயிர்கொலைலாற்
கூற்றவி டாவினை தீர்ந்தவர் போலுங் குணங்களையே.

இ-ள். பிறரை யுதைத்தல் முதலியவற்றை விட்டவர், மன மொழி காய மூன்றா லுமடியாமலும், கோபத்தை விடாதவர், அந்தக் கோபத்தை யெல்லை யில்லாது கொண்டாலும் வினையை நீக்கும் பரிசுத்தபாவத்தை உண்டாக்கி கோபத்தை விட்டவர், அஸ்நாத்தாலே பிணிக்கப்பட்டிருத்தலும், அதனாலே மெய்புலனாவிட்ட வர், பிணியாலேயே பற்றுக்களை உட்பற்றும் புறப்பற்றென்றெல்லாம் விட்டவர், அத னாலே யிவ்வுடம்பு நீங்கப்பட்டாலும், நிரம்பாசையுள்ளவரேயாம் தொழப்படுகின்ற தெய்வமாவார்; **எ-று.**

இதனால், குற்றமுடையவர், அடங்காதவர், கோபம்விடாதவர், காயம் பேணி அநாதனாதலில்லாதவர், ஆசைமேற் பற்றுவிட்டு உட்பற்றும் புறப்பற் றுடையவர், பிறரால் கண்டிலை முதலிய உடுப்பவர், வினைமாசுகழுவாதவர் பிற வாதலில் அவரை யாம் வணங்கினமென்று பாவத்தைடமூடம் விலக்கியதாம். குத்தல்-அடங்காமை. ஈர்த்தல்-அறுத்தல். அடல்-கொலை. விம்மல்-வருத்த. வற்ற-உலர. செற்றம்-கோபம். (எஞ)

தெய்வமுடம் பெனுமுரை தேறினன் றீர்வினைத் தெவ்விரண்டா
லெவுதலி லாவழு தேத்துகன் னீணிரு நால்வினைத்
தாவுத நாத ரழபதம் போதென் றெழுபதந் சேர்ந்
தாய்வுதல் லாலுமக் குய்வு முடையமற் றொன்றிலேமே.

திருநூற்றந்தாதி மூலமும் உரையும்.

இ-ள். எண்வினையுங் தெடுத்து *ஐவகைவிரதங்களையுமுடைய ஆதீசுவரரது அடிகளல்லது உய்யுமுபாயம் வேறில்லை; அதனை அறியாதே வேறே தெய்வமுண்டென்று தேடுகின்ற உலகீர்! அந்தத்தேவரால் விளைப்பகைவராலே வருந்துவதல்லது வீடு காணமாட்டீர்; எ-று.

இதனால், குணமும் விரதமும் இல்லாரைப்பற்றில் வீடுபேறில்லை எனப் பயந்தீர்வித்ததாம். அறுபதம் போதெண்றழுபதம்—வண்டுகள் காமரைப் பூவென்று மொய்க்க எழுகின்ற திருவடிகள். (எசு)

ஒன்றறி யீர்முழு தும்முணர்ந் தீருணர் வொன்முமில்லா
வன்றறி போல்பவர் வந்துமக்மைத் தாழ்ந்திடின் மற்றவர்க்கு
நன்றறி ஞானங் கொடுத்துண்மை காட்டுதிர் நாமுமிவ்வா
றென்றறி யாதவ ரெம்பெரு மானெக்க விச்சிப்பரே.

இ-ள். எம்பெருமானே ! கேளீர் ; அறிவொன்றுமிலாத வலிய தறியை ஒத்திருப்பவர்தாம் உம்மை வந்து வணங்கினால் அவர்க்கு நன்றாக அறியத்தக்க ஞானமெல்லாங் கொடுத்து உண்மைப்பொருளையும் அறிவிப்பீர்; யாரும் இப்படியிருக்கக்கடவோ மென்றறியாதே அவர்கள் உமக்கொப்பாக விரும்புவர்; ஆதலாலே எல்லாமறிந்தவரோ நீர், ஒன்றுமறியீராயிருந்தீர்; எ-று.

இதனால், பிறர் அன்பறிந்தாராய்ந்து கொடுப்பர் ; நீர் ஒன்றுமறியீரெனப் பழிப்பதுபோலப் புகழ்ந்தவாம். இதனுள் ஒன்றுமறியீரெனவும் உண்மைப் பொருளையுமெனவும் உம்மையும், எல்லாமுணர்ந்தவரோ எனவோகாரமும் விரிக்க. வன்றறி-வலிய தம்பம். (எஎ)

இச்சிக னேபுவ னத்திரு நாயக னெண்ணெவர்க்கு
நிச்சய மாக வுணர்த்துதற் காக நிலாவினீத்த
முச்சக மூற்று நிழல்செய மூப்புவ னேந்திராராச்
தச்சர் சமைத்துடன் வைத்தனர் நாதன்முச் சத்திரமே.

இ-ள். இந்த ஜிநேசுவரனே மூவுலகுக்குங் கர்த்தாவென்று யாவர்க்கும் உண்மையாக உள்ளபடியறிவித்தற்காகவோ வெளியினேப்பரப்பி உலகமூன்று நிறைய நிழல்செய்ய மூவுலகுக்கும் வேந்தராகிய தச்சர் மூன்றுகுடையும் ஒக்கப் பண்ணிவைத்தனர் ; நாதனே ! சொல்லாய்; எ-று.

---

* “ கொலைமுதலா வைந்தனையு மூற்றத் துறத்தல்—நலைபாய மாவத மாம்” என்பது அருங்கலச்செப்பு-அஎ.

இதனால், இவர் இழிந்தவராயின் உயர்ந்தோர் பரியாளமாவரோ என்பதாம்: "அறத்தா றிதுவென வேண்டா சிவிகை-பொறுத்தானே போந்தானிடை"* என்பவாகலின். அறியாதவர்க்கும் ஆகவே என்பதுபட ஓகாரமும், சொல்லா யென்பதும் வருவிக்க. நாதன்-அண்ணைமவினி. சமைத்தல்-பண்ணல். சத்திரம்-குடை. (எஅ)

சத்திய மேயொன் றுசாற் றுகின் றேன்சம யங்களெல்லாங்
கத்திய நூனங் கலைந்தின் றதேகடைச் சாரமெய்து
முத்திய மேக முதல்வனு மேக முதல்வனுமுற்
பத்திய நாசமு மொன்றுமில் லாத பாஞ்சுடரே.

இ-ள். உலகத்தீர்! உண்மையாக ஒருவார்த்தை சொல்லுகின்றேன்; எல்லாச்சமயங்களும் ஒருவரையொருவர் மாறுபட்டு அஞ்ஞானங்களைக் கதறிக் கலைப்பதிலையே உடையன; முடிந்தவிடத்திற் பெறுகின்ற மோக்ஷமும் ஒன்று; ஈசுவரனும் ஒருவன்; அந்த ஈசுவரனுடைய ஒருகாலத்திலே தோற்றமும் ஒருகாலத்திலே கெடுதலுமாகியவையில்லாத மேலாயிருப்பதோர் ஒளியாம்: எ-று.

இதனால், தோற்றமுங் கேடுமுண்டாமவர் தலைவராகார் என்பதாம். கலக்-கலை. உற்பத்தி-தோற்றம். பரம்-மேல். (எக)

சுடர்மண் டலஞ்சுர நந்தபி தெய்வத் தலைவனிசைக்கப்
பிடர்மண் டலவிண் டிண்டிவெண் சாமரை பெய்மலரி
னடர்மண் டலமழை யம்பொற் குடைமும்மை யாமடியோ
மிடர்மண் டலங்கெடுப் பார்க்கிமை யோர்செயு மென்சிறப்பே.

இ-ள். ப்ரபாவலயம், தேவதுந்துபி, திவ்யத்வனி, வட்ட அணை பொருந்திய ஸிம்ஹாஸனம், அசோகவ்ருக்ஷம், வெள்ளிய சாமரை, நெருங்கப் பொழிகின்ற பூமழை, அழகிய பொற்குடைகள் மூன்றும் ஆம்; அடியேங்களைச் சூழ்ந்துகிடக்கின்ற துன்பத்தைப் போக்குமவர்க்கே தேவர்களாற் செய்யப்படுகின்ற எட்டுச்சிறப்புக்களும்; எ-று.

இதனையும், இந்தச் சிறப்பு பிறர்க்கில்லையாதலால், இவரே தலைவர் என்பதாம். மண்டலம்-வட்டம். இடர்மண்டலம் என்பதனுள், மண்டலம்-சூழ்தல். அடர்மண்டலம்-நெருங்கிய கூட்டம். கெடுப்பார்க்கே எனப் பிரிநிலை ஏகாரம் விரிக்க. (அ0)

---

* திருக்குறள்-கூ.

சிறப்பின்றிவ் வாழ்வென்று தேவேந் திரர்தொழுந் தீர்த்தநின்சீர்
மறப்பின்றி யேயெண்ணும் வாழ்த்தப்பெற் றுண்மனே யானவற்றுக்
கறப்பின்றி யாயினழு யாதினறி யேசென் றடைபவர்க்கோ
நிறப்பின்றி யேவெளி யாய்நின்ற வீடுமக் கெண்செய்கவே.

இ-ள். இந்த வாழ்வு அதிசயில்லையென்று தேவேந்திரர் தொழுகின்ற தீர்த்தனே ! நினது புகழை இடையிடாதே நாடோறும் துதிசெய்யப்பெற்றுள் அதுவே போதும்; மனையானவற்றுக்கு அதிதாமாய் மகளிருமின்றிச் சென்று சேருமவர்க்கோர் இறப்புமின்றியே வெளியாயிருக்கின்ற வீடுபேறு எமக்கு யாதுக்குத்தான்; **எ-று.**

இதனால், இடைவிடில் வினைக்கிடமாம்; இடைவிடாது நினைப்பார்க்கே வீடுபேறு என்பதாம். இதனுள், அயன்மனை சேர்ந்து மகளிரும் இறப்பும் மறைவு முண்டான வீடு, பிறர்க்குண்டென்ற குறிப்பால் விளக்கியதாமாம்; இதனுல் அது வேண்டாமென்றார். அதுவே போதும் என்பது சொல்லெச்சம். சிறப்பு-அதிகம். சீர்-புகழ். அறப்பின்றி-அதிகதாமாய். (அக)

என்செய லாம்பிழை கண்டுங் கொள்ளன் மெய்ப்பிறரே
யின்செய வாபவர் கேள்வனைத் தேவரென் றீண்டுறுமாத்
தொன்செய வேண்டுங் குறைதரும் பொய்குறை யுடையோர்
தண்செய பாதங்கள் கண்டுகொள் வீரெந் தலைமிசையே.

இ-ள். வினைகாள்! உம்மால் எங்களை என் செய்யலாம்; நாம் பரசமயிகளைப்போல மகளிர் கேள்வனைத் தேவரென்று அவர் சொல்வதே அறமாகப் பயனில்லாதன செய்கின்றவரல்லோம்; மூன்று குடைகளையுடையவர் திருவடிகளை எமது தலைமேலே பார்த்துக்கொள்ளீர்; **எ-று.**

இதனால், வினைபற்றுவது பற்றுள்ளாரையாதலின், பற்றற்றவனைப் பற்றில் வினைபற்றுவாதலாலே அவை நுங்கா என்பதாம். இன்செய்ய வாய்-இனிமையும் சிவப்புமுடைய வாய். கொள்-பண்பில்லாமை. தன்காரியை யாரவேண்டியடத்து ஏதுகைபற்றித் தன்காரியை வந்தது. செய பாதங்கள்-பாலுத்தைப் பெறாத செவ்விய திருவடிகள். (அஉ)

வெண்மையங் கலையினு னென்னோர் கூறுமதை விண்பெறினுங்
கண்மையங் கொடேனெனுங் களவறி யாதிளந் தேங்கையர்மடட்
பெண்மையங் கொடுன்னடைக் கதலைப் பேதுறுஞ் சைம்புலன்மே
லெண்மையு நிலையிலாப் பழுது படாவெந்தை யடிகளே.

இ-ள். இருளுண்ணர், தசையுங் கள்ளுந் தேனும் விரும்பார், துறக்கம் பெறினும் அதுபொருட்டாகப் பொய்சொல்லார், கொலையுங் கனவும் அறியார், மகளிர்மோகத்தாலே மனமசையார், *பஞ்சபாதேமட்டிகளை வணங்குவார்; ஐம் புலன்மேல் விருப்பம்நீங்கிய பிண்டிவேந்தடியாராகிய எங்கள் நாயகர் **எ-று.**

இதனுள், இந்த அறம் பத்தும் பிறர் பேணுர் என்பதாம். மிசைதல்—புசித் தல். நசை—கள். இசையார்—உடன்படார். அசைவு—தளர்வு. 'ஐயரைப் பேணு வர்' என்னும் பாடம். **(அக)**

நாயகத் தேனுங் நன்பூதற் றேவரை நாண்படுவ்வான்
மீயகத் தேவை மேற்கொள்ளுங் தேவரை மெய்யறியார
வாயகத் தேனுரும் வண்புகழ்த் தேவரை மாற்றிநெஞ்சே
நீயகத் தேவை வித்துரீன நாளுந் நினைத்தியே.

இ-ள். நிந்திதர்முதலோர்க்கும் முதலாய தேவரை, தாமரைப்பூ ஆகாயத்தின் மேலேவ அதன்மேல் வீற்றிருந்தருளுகின்ற தேவனை, அன்பர்நாவின்மேல் தோற்று கின்ற புகழையுடைய தேவனைக் கைவிட்டு, நெஞ்சமே! இத்தினைகாளும் யாவனைநினைத்தாய். மொழிமாற்றி **எ-று.**

இதனுள், மெய்யறியாமையை நெஞ்சோடு உசாவியதாம். மீ-மேல். வாய்-ஆகுபெயர். நீ அகத்து ஏவனை-நீ உள்ளே யாவனை. ()

நினை நற நினையினும் வாழ்த்தினை யாயினு நீயுநெஞ்சே
நினைற்க வின நல்லறஞ் செய்தனை யாயினுஞ் சேர்ந்தவரைப்
பினைகதன்ன வந்தனை செய்யவொட் டாப்பிண்டி யாற்கனிதோ
வுனைத்தன்ன யேவொக்க வித்தனை நாளி லுயர்த்துகையே.

இ-ள். நெஞ்சே! பிறரை வணங்காமல் அருகத்தேவனையே தினையளவு நினைத்தலையாயினும், வாழ்த்தினையாயினும், நல்லறமதனைச் செய்தனையாயி னும் அது சாலும்; உலகிற் பகை, நொதுமல், நண்பு என்னுதே தன்னைச் சேர்ந் தவர் யாவனையும் பின்னைத் தன்னையும் வணங்கவொட்டாத பிண்டியானுக்குத் தன்னையொக்கச் சிறிதுநாளில் உயர்த்துதை அறிதன்று **எ-று.**

---

* பஞ்சபரமேட்டிகளை இவ்வுரை என்பது, சசு-ஆம் செய்யுளானுணர்க.

† நற்பூதற் றேவரை என்றும் பிரிவேபதம் உண்டு.

திருநூற்றந்தாதி மூலமும் உரையும்.

இதனுல், 'பாவி! சிறிதும் அறஞ்செய்கின்றிலை' என நெஞ்சைக் கழறியதாம். அதுவே சாலும் என ஒருசொல் வருவிக்க. சேர்ந்தவர் யாவரையும் என்பதனுலே பகை, நொதுமல், நண்பு வருவித்தாம். இத்தனை என்றது குறிப்பாற் சிறிதுநான். (அ6)

கைத்தக் கடிதடுங் காஞ்சிரந் தின்பவண் றீங்கனியைத்
துய்த்தக் கவைகண்ட பின்னிடு மோசுர ராய்நரோ
டொத்தத் திரிபவர்க் கன்புசெய் வாருமை கண்மைகண்டால்
வைத்தப் பிரிவர்க ளோபிண்டி நீழலெம் மாமணியே.

இ-ள். பிண்டிநீழலிலிருக்கும் பெரிய நணியொப்பீர்! கசந்து விரைவிற் கொல்லும் எட்டிக்காயைத் தின்று உடனே துன்புறுமவன் நோய்நீக்கு மருந்தாகிய நெல்லிக்கனியைத் தின்ற இன்பங்கண்டபின் அதனை விடப் பொருந்துவரோ? அதுபோலே, தாமும் தேவராய்வைத்து மக்களின்பந்துய்த்துத் தெய்வத்தன்மைகெடுமவர்க்குப் பத்திசெய்யப்பட்டவர் உள்ளபடியறிந்தாற் பின்னை உம்மைவிட்டுப் பிரிவரோ? எ-று.

இதனுல் உம்மையதிந்தவர் பிரியாரென்பதாம். இதனுட் காஞ்சிரம் ஆகுபெயராலே எட்டிக்காயாயிற்று. இன்பமென்றதனுலே துன்பம் வருவித்தாம். கரும்புதுய்த்து என்று பாடமோதுவர்; அதற்கு வேம்பே முதலாலே அது பாடமல்லாமை அறிக. 'இனிய வளவாக வின்னாத கூதல் - கனிஇருப்பக் காய்கவர்ந் தற்று'* எனபதனுலும் அறிக. இதனுட் சுவை - இன்பம். திரிதல். கெடுதல், சுழலுதலுமாம். அன்பு - பத்தி. (அசு)

மணியா பரணமு மாசில்வெண் டூசும்வம் பார்மலரு
மணியா தழகிய வண்ணல்கண் டூர்பெண்ணி னாசைவிடாப்
பிணியார் முடையுடற் பேயினை யீர்பிறழ் பூங்கரும்பின்
றிணியார் வரிசிலை தேங்கணைக் காமனைச் செற்றவரே.

இ-ள். வடிவுள்ள பேயை ஒப்பீர்! பெண்ணின் ஆசைவிடாதவர் காமனை வென்றவரோ? அன்றன்று; தோற்றவரே: காமமெனும் பெண்ணின் ஆசை விட்டு ஆபரண முதலிய அணியா அழகர் கண்டீரோ? எ-று.

இதனுல் நீர் சொல்வது அழிவழக்கென்பதாம். வடிவுள்ள பேயென்பது தோன்ற மூடையுடற்பேய் என்றார். 'உலகத்தா ருண்டென்ப தில்லென்பான் வையத்–தலகையா வைக்கப் படும்'† என்றாராதலின். இதனுள் செற்றவரே

---

* திருக்குறள் 400.

† வெ. அதி.

என்பது வினைவேகாரம். வம்பு-புதுமை. மூடை-நாற்றம். பிறழ்தல்-விளக்கம். வரிசிலை-அழகிய சிலை. தேங்கணை-தேனையுடைய பூவாளி. (அஎ)

செற்றது காதிக ளூர்ப்பத காதிக டிக்கறியப்
பெற்றது கேவலம் பேசுதல் கேவலம் பெண்முதலாய்ப்
பற்றது தீர்த்தவெம் பாவனை தீர்த்தவெம் பாவமற்ற
லற்றது மேற்முறி யாரையு மேற்றுறி யாட்படினே.

ஓ-ள். எம் பாவனைக்கினையாது பெண்முதலாகிய பற்றுக்களெயெல்லாம் தீர்த்த தீர்த்தனே! உலகமறிய நீ கெடுத்தது யாதென்னிற் *காதிகன்மங்கள்; இனிமேற் கெடுப்பது யாதென்னில் அகாதிகன்மங்கள்; நீ பெற்றது யாதென்னிற் கேவலஞானம்; நீ அருளிச்செய்யப்பட்டது யாதென்னில் ஞானம்; இப்பெற்றிப்பட்ட உன்னை எம்போல்பவரும் பாவமறுத்தால் அவரும் நின்னைத் துதிப்பது கவிராகின்றது; கினக்கு அடிமைபுகின் யாவரையும் நின்னுடனே உயரப்பண்ணுவை என-று.

இதனுல், ஈசனுகிய பெரியோன் பிரமனுக்கு ஐந்துமுகமாதல் கண்டு பொருமல், அவன் நிலோத்தமை பொருட்டாகத்தோற்றிய மேலாகிய தலையைக் கிள்ளினென் என்பர்; நீ அறியாமையால் யாரையும் உயரப்பண்ணுவை யென்பதுபோலப் புகழ்தலாம். இதனுன் திக்கு—உலகம்; இதனை யெங்குந் தீவமாக்குக. தீர்த்தல்—ஒழித்தல். பாவனை—தியானம். யாரையுமேற்றுறி—யாரையுஞ் சமமாக உயரப்பண்ணுவை. (அஅ)

படிதனும் படார்தவம் பாத்தண் பதுமிலர் பார்த்திபரீர்
தடிதனு மடாதன செய்கையுஞ் சாடி யார்தமண்பு
கெடிதனுங் கெடாவருட் கேவலி போலபற் றேவர்கள்தார்
விடிதனும் விடார்கண்†மித் தாக்கள்கர்த் தாக்கள்கொல் வெவ்வினைக்கே.

ஓ-ள். மிச்சத்தர் தவம்பண்ணுவாரைப்போலே வினைக்கே வேடங் கொள்ளினும் கல்ல தவத்துணை புருஷர்; கற்ருனம்பண்ணுர்; அறத்திற்காகா வென்று விலக்கிய கொலை, பொய், களவு, காமம், அவாமுதலிய தீவினைசெய்தால் அக்குற்றத்திற்கு ஆசபாமவர் தமதுடலை அரிந்துகொன்ருலும் அத்தீவை

---

*ஞானாவரணீயம், தரிசனாவரணீயம், வேதநீயம், மோகநீயம், ஆயுஷ்யம், நாமம், கோத்திரம், அந்தராயம் எனப்பட்ட அஷ்டவித கர்மங்கள்.

† "மிச்சத்தர்கள் கர்த்தர்கள் வெவ்வினைக்கே" எனவும் பிரதிபேதம் உண்டு.

செய்தற்கோ அஞ்சார்; அடியார் தம்மேல் அன்பு கெட்டாலும் கெடாத அருளையுடைய கேவலஞானியைப்போலே, ஒழிந்த தேவர் பயன்படாவிடினும் அவரைக் கைவிடமாட்டார்; அதனால் அவர் பாபவினைக்குத் தலைவர்போலே இருந்தது **எ-று.**

இதனால், அவர் பாவவினை நீங்கவேண்டில் அத்தீமை செய்வரோ என்பதாம். வேம்பு பழுத்தாற் காக்கைக்கினையாம்; அதுபோலே மதுமாங்கிசங்களை நுகர்பவர்க்கல்லது ஸத்பாத்திரதானம் இலயாதலிற் பாத்தண்பதுமில்லையென்றார். பார்த்திபரீர்ந்தடினும் என்பதனாலே அவர் குற்றங்கண்டே தண்டிக்க வேண்டலிற் கொலைமுதலிய வருவித்தார். அவர்தாம் கொலைப்பாவம் விலக்காவாதலிற் கேட்டைப்பண்ணுவதுருறித்துப் பயன்படாவிடினும் என்றார். பாத்தல் - பகுத்தல். பார்த்திபர் - அரசர். நல்கல் - பயன்படல். (அக)

விளைவரு மாறு மனைவலல்ல மாறுநிற் காச்சமயத்
தினைவரு மாறு கொளநிற்ற மாறு மலகமெல்லா
நினைவரு மாறு பொருணிற்ற மாறு நிறைந்தநன்ஞாற்
புனைவரு டாறு புரிதடல் போலுமெம் பூசனையே.

இ-ள். நல்வினை தீவினை வருவழியும் அவற்றைப் போக்கும்வழியும் பாசமயத்தவெல்லாரும் மாறுபடநிற்கும்வழியும் உலோகம் அலோகமெலாம் நினைத்தற்கரிய *சோதி முதலாகிய வாறுவகையாருளனவழியும் ஆகிய இவற்றாலே நிறைந்த கன்றிய பரமாகமமாகிய நூலேமேற்கொண்டு வருவது ஓராறாகும் ஒருகடலேயொக்குமவன் ஆதலாலே பூசனைசெய்தும் காமமாயிற்று **எ-று.**

இதனால், இவனை நிறைந்தவன் என்பதனாலே பற்றுள்ளோர் குறைந்தோரென்பதாம். (கo)

பூரண யாற்பதி றுக்கயிற் றோக்கப் புவனமெல்லாம்
நீரண மாருதந் தாங்கிய தொன்று நிலைத்தலிற்கப்
போரண யார்க்கினை யாருயில் வாய்பெரி யோர்க்குவிண்ணோர்
பாரண யாவடி தாங்கச்செந் தாமரை பாரித்ததே.

இ-ள். ஒப்பு ஒருவரு மில்லாமையாலே ஸிங்காசனத்திருந்த பெரியோர்க்கு நிலைத்தலையுடைத்தாகிய திருவடிகளைத் தாங்குதற்குத் தேவர்கள் பொற்றாமரைப்பூவைப்

---

* நிலம், புற்கலம், சுருதம், அதருமம், ஆகாசம், காலம் என்பன. [illegible] என்ப.

பண்ணினது என்போலுமென்னிற், பதினெலுகயிற்றின் உயரத்தையுடைய உலகமெல்லாம் முறையிலே கிட்டிக் காற்றான் அவை கரித்தது ஒக்கும் எ-று.

இதனுல் வெறுமையில்லை யென்பதாம். இதனுள் பூரணை - நிறைவு. லேப்பு--உயர்வு. பாரகலயா--*நிலந்தாயா. பாரித்தல்-பண்ணல்; பரப்புதலு மாம். நீரணை-குணம் அணைந்த; குணம்-குளிர்ச்சி, மணம். (கக)

பாரிடை யீரு நூற்றைம்பத் தெட்டுப்பத் தாம்பலணைத்
தேரொழு கோடியென் றெண்பா னிலக்க முயர்ந்தகற்பத்
தோரியல் யோனிதொள் ளேழா யிரச்சின்ன மெண்ணவொண்ணை
சீரிய வந்தரர் சேரநிட்ட தீசர்நற் சேந்தியமே.

இ-ள். ஏழேகால்நிலமது இயற்கை செயற்கைச் சிறுலயம் பூமியிடத்திலே நூற்றைம்பத்தெட்டு, பத்தடுக்காயிருக்கின்ற பவணலோகத்திலே ஏழு கோடியே யெழுபத்திரண்டிலக்கமாம்; உயர்ந்த தேவலோகத்தில் எண்பத்து நான்குநூறாயிரத்துத் தொள்ளாயிரத்து நிருபத்துமூன்று; இப்பால் வியந்தரலோகம் சேரநிட்டலோகம் இரண்டிலும் எண்ணமுடியா ‡ எ-று.

இதனுல் சூரியலோகத்திலும் கோவற்றவிங்கம் இல்லை யாதலால் இவ்வே தலே வன் என்பதாம். இதனுள் யோனி-எண்பத்துநான்குநூறாயிரம்; குறிப்பு மொழி. வந்தரர்-வியந்தரர். சின்னம் என்பது இருபத்துமூன்று என்னுங் குறைந்த எண்ணைக்காட்ட வந்தது. (கஉ)

சேரிய முப்புவ னத்திரு கூற்றமுக் தீர்த்தருள்ளிட்
டேரில் குணத்தர் வணக்கமொ டைந்து பிடற்பெயரோ
டாரி யெழுத்தை மருகனு மவ்வுமொன் றுநிலைத்தி
றேறி நினைப்பன் வினைத்துக ளோடி யொளித்திடவே.

இ-ள். நூற்றை செற்றையாய் இருகூறுபட்டு மூன்னிற்கவியிற்கூறிய ஆலயத்தாறும் இருக்கப்பட்ட அருகத்தேவருள்ளிட்ட ஒப்பற்ற குணங்களை புடையவர் நமஸ்காரமும் ஓரைந்தும் இயல்பாகிய பெயருன் அருக என்னுந் திரு நாமமும் மகாமுதலாகிய இவையிற்றை ஒன்றுமுதலாக ஐந்தியுதியாகச் சொல்லி

---

* "கானிலந் தோயாக் கடவுளே" என்பது நாலடி, கடவுள்வாழ்த்து.

‡ இவ்வுலகிலுள்ளவெல்லாம் லோகாணி என்னும் நூலுட் காண்க.

நினைப்பன:* யாதோகாரண மென்னில் எனது வினையாகிய குற்றம் விளை ஒளித்தல் காரணம் **எ-று.**

இதனுல் நிலையில்லாதசெல்வம் வேண்டியல்ல என்பதாம். இதனுள் சேதியம்-கோயில். மூப்புவனம் - மூவுலகு. தீர்த்தர்-அருகர். (கூ

ஒளிவந்த நீழ லுயர்பிண்டி வேந்த னொருத்தனுமே
விளிவந்து வேண்டும் விபூதிக ணல்குமெய்ப் பொய்யைகம்பிக்
களிவந் தவாவொடு கைவந்த வாசெய்யுங் கையர்பிண்போ
யிளிவந்து வாழ வருமந்த வாருயிர்க் கெண்வந்ததே.

இ-ள். பிண்டிவேந்தன் ஒருத்தனுமே முன்னின்று தான் விரும்பிய செல்வத்தைத் தருவன்; அவனதுநூலைப் பின்செல்லாதே உடம்பாகிய பொய்யை நம்பிச் செருக்கி அவாவுடனே தாம்வேண்டியவற்றைச்செய்கின்ற திருப பின்னேபோய் இவ்வரவுபொருந்திய வாழ்வுபெறுதலாற் பெறுதற்கரிய உயிர்க்கு வந்த பயன் யாது? **எ-று.**

இதனுல் பொய்ப்பொருளைப் போற்றுமுலகம் விடுமது பற்றுமது அறியா என்பதாம். இதனுள் வேறில்லை யென்பது தோன்ற ஒருத்தனுமென்றும், அவ் தாமவர் பரியானமாகி யேயவன்கேட்பரென்றனர் கூறலின் இளிவந்துவாழ எ றும் கூறினர். (கூ

வந்தன வெண்ணை போயிற்று வாய்மைக்கள் யாக்கைபெற்று
நந்தன மாவொன்று நாடிற்றி லம்பிண்டி நாதனைச்சேர்ந்
தூய்ந்தன மின்றுடன் டோதனைத் தின்றின்செ லார்தனஞ்சேர்ந்
திந்தன மாகநற் சந்தன வேர்பெற் றெளித்தனமே.

இ-ள். வெள்ளிய நறைபொருந்திய மூப்புவந்து இளமை கழிந்தது; பெறுதற்கரிய மக்கள்யாக்கையைப் பெற்றுவைத்தும் நமக்கு ஒரு பொருளாக ஒன்றைத் தேடிற்றிலம்; பிண்டிநீழலின்கீழேயிருக்கிற அருகத்தேவனைச் சேர்ந்து இன்று பிழைத்தோம்; சோற்றைத்தின்று அழகிய சொல்லையுடைய மகளிருடைய தனத்தைச் சேர்ந்து கன்றுகிய சந்தனவேரைப்பெற்று விறகாக வரித்துவிட்டோம் **எ-று.**

---

* "அருகர், அசரீரி, ஆசிரியர் ஆகிய இவ்வியற்கைப்பெயர்களிலே முத லெழுத்துக்களும் உபாத்தியாயரின் முதலெழுத்தாகிய உகாரமும் முனிவர்களின் முதலெழுத்தாகிய மகரவொற்றும் எனப்படுகின்ற இவைகளை ஒன்றுமுதலாய் ஐந்து இறுதியாகச் சொல்வதனுல் உண்டாகிய ஓங்காரத்தை முச்சந்தியிலும் துதித்துத் தியானிப்பேன்" என வுரைப்பர்.

விருப்பத்தை மிகுவிக்கின்ற நெய்யோடுகூடிய சோற்றினை ஒதனம் என்
(கடு)

எரிதின்று போத விழுப்புண்டு போதலின் னையொடுபன்
னரிதின்று போதலல் லாண்மெய்ந்நில் லாநமன் றூதர்வந்தா
லரிதின்று போ தத லெண்ணவொண் ணுதத னுக்குமுன்னே
கரிதின்றி டாவகி யேந்தினை யாவறங் கைக்கொண்மினே.

இ-ள். நெருப்புத் தின்றுபோதல் திரண்டவுடனே பல நாளுமாக ஒக்க இழுப்புண்டுபோய்த் தின்றுபோதலல்லது யாக்கை நிலைபெறுது; எத்தாலும் கூற்றுவனுடைய தூதர்கள் வந்தகாலத்து இன்று வரத்தகாதென்று சொல்லவொண்ணுது; அந்தக் கூற்றுவனுடைய தூதுவர்கள் வருவதற்கு முன்பே யானையைத் தின்றிடாத ஒங்கம் ஏந்தப்பட்ட அணையையுடைய அருகத் தேவனுடைய ஸ்ரீதர்மத்தைக் கைக்கொள்ளுவீர்களாக என-று. (கசு)

கொண்மூ வொருபரு வம்பொழிந் தாங்கிரு கொட்பினுட்பா
ருண்மூ விருவகைக் காலத் திடையுல குய்யக்கொள்ளு
மெண்மூ வருமல்ல *தீசரல் லாமைநல் லீசனென்று
நின்மூ டர்கடொழுந் தேவர்மெய் காட்டித் தெளிவிப்பரே.

இ-ள். மேகம் ஒருகாலத்தைக்குறித்துப் பெய்தாற்போல †வறுகாலம் இழிவுகாலமாகிய இரண்டு சுழற்சியையுடைய பூமியிடத்து மூவிரண்டாறு காலத்துக்கு நடுவே உலகத்தைப் பாதுகாக்கிற இருபத்துநாலு தீர்த்தங்காரு மல்லது இறைவரல்லாமையை நன்குணர்ந்த இறைவனென்று சொல்லித் தின்னிய மூடராயிருப்பார் வணங்குகிற இறைவர் தம்முடைய மேனியைக்காட்டி அறிவித்துவிடுவர் என-று. (கஎ)

தெளிக்குந் திருமொழித் திக்குடைத் தொல்சக முக்குடைக்கீ
ழுளிக்குந் திருவரு ளாழியெம் மானடி யைம்புலர்ச்
சுளிக்குந் திரிவிதக் குற்றத்து மும்மதத் தெம்மனமாங்
களிக்குஞ் சரமணைக் கும்பணைத் தாளிணைக் கந்துகளே.

இ-ள். தெளிவிக்கிற திருவாக்கினையும், திக்காகிய ஆடையினையும், பழையவுலகத்தை மூன்று குடையின்கீழே பாதுகாக்கிற தருமசக்கரத்தையுமுடைய அருகத்தேவருடைய ஸ்ரீபாதங்கள், ஐந்துவிஷயங்களாகிய நீரிலே

---

*தீசரல்லாரை எனவும் பாடம்.

†உற்சர்ப்பிணி, அவசர்ப்பிணியாகிய சுழற்சி எனவும் உரைப்பர்.

சூழுகிற காமம் வெகுளி மயக்கமென்கிற குற்றமாகிய மூன்றுமதத்தை யுடைய என்னுடைய மனமாகிய களிப்பையுடைய யானையை அணைக்கின்ற பெரிய தாளினையுடைய இரண்டு தம்பங்களாம் என-றது. (கூ

கூந்தா தியென்ன கசிந்தநெஞ் சாகக் கடிகமழ்பூஞ்
செந்துஞ் தியைபிண்டி யார்திருப் பாதத்தைச் சேர்த்தமின்சொ
லந்தா தியையணி மாமல ராக வணிந்தடியேன்
முந்தாதி வல்வினை வெல்வனெல் லாரினு முற்படவே.

இ-ள். கந்தமுதலாயினவை என்னுடைய கசிவுற்ற மனமாக, மணமிக்க பூவின்து சிவந்த நாது பொருந்தப்பட்ட பிண்டிநீழலின்கீழே இருக்கும் அருகதேவனுடைய அழகிய பாதத்திலே சேர்த்துச் சொல்லப்படுகிற இனிய சொல்லையுடைய அந்தாதியைப் பூவாக அணிந்து அடியேனுகிய யான் முற்பட்ட பழையவல்வினையைக் கெடுப்பன் எல்லாரினும் முற்பட என-றது.

முந்து என்பதும் ஆதி என்பதும் ஒருபொருட்கிளவி. (கக

முந்திய போல்பிண் மூவுல கேத்த முனீந்திரரோ
டெந்தை பிரானெம் பெழுந்தரு ணம்பொழி தேறவங்கோர்
தந்தி பொருதெஞ் ஞானும் வாதி பொருதெஞ் ஞான்றுந் தாழ்வுடையேன்
புந்தி பொருதெஞ் ஞான்று தேவர்பொற் றூடரைப் பூக்கொண்டதே.

இ-ள். முற்பட்ட பெரிய அன்பினையுடைய மூன்றுலகத்துள்ளவர்களும் புகழ்செய்ய முனிகளுந் இந்திரர்களுமாகிய தேவர்களுடன் கூட எம்முடைய சுவாமி அவ்விடத்துத் திருவுலாச்செய்யும்பொழுது எற்றுதற்கு அவ்வெருது யானையெருமையல்ல; குற்றமுடையேனுடைய புந்தி பொருதபடியினாலே யன்றே தேவர்களாலே நிர்மிக்கப்பட்ட பொற்றூமரைப்பூவின்மேலே எழுந்தருளினது என-று. (கஂ0)

பூக்கொண்டு நாளுமு புனிதன் றிருவறம் போற்றிநின்று
நாக்கொண்ட செஞ்சொ லவிரோதி நாத னவின்றமெய்ந்நூற்
பாக்கொண்டு நாளும் பணிந்து நினைந்தும் படிக்கவல்லார்
நீக்கொண்ட வல்வினை சோர்சிவ கதி சேர்குவரே.

சிந்தா குலமில்லைத் தீவினை போஞ்செய்ய தாமரையாய்
வந்தா தரிக்கு மடநெஞ்சு மேமற வாதிருக்கக்
கொந்தா ரலங்கற் குடைபொரு மூன்றுடை யான்குணத்தை
யந்தா தியாக வவிரோதி சோதிய வாகமமே.

திருஞானசம்பந்தர் தேவாரம் மூலமும் உரையும் முற்றின.

---

* "பெரியதாளினை" எனவும் பாடம்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தில் விற்கப்பெறும் புத்தகங்கள்.

சங்கப்பிரகரம்.

			ரூ.	அ.	பை.
1.	ஞானமிர்த மூலமும் உரையும்	... ...	1	0	0
2.	[illegible]	... ...	1	8	0
3.	யாப்பணியிலக்கணக்கன்	... ...	0	10	0
4.	வைத்தியசாரசங்கிரகம்	... ...	5	0	0
5.	பன்னூற்றிரட்டு	... ...	3	0	0
6.	மகாபாரதம் அநுபந்தவுரையுடன்	... ...	4	0	0
8.	தமிழ்ச்சொல்லகராதி உயிர்வருக்கம் முழுய. முதற்பாகம்.		6	0	0
9.	வை இரண்டாம்பாகம்	... ...	4	8	0
	வை மூன்றாம்பாகம்	... ...	5	0	0
10.	தொல்காப்பியம் செய்யுளியல் (நச். உரை முதலிய)	...	1	12	0
11.	திருவருணைக்கலம்பகம்	... ...	0	6	0
12.	அமுதாம்பிகைபின்னைத்தமிழ்	... ...	0	8	0
13.	கலைசைச்சிலேடைவெண்பா	... ...	0	6	0
14.	தொல்காப்பியப் பொருளதிகார ஆராய்ச்சி	...	1	4	0
15.	திருவாரூர் நான்மணிமாலை	... ...	0	4	0
	பன்னூற்றிரட்டு (செலக்டடன்)	...	0	4	0
	திருவாலவாய்த் திருநீற்றுப்பதிகம் முதலியன	...	0	1	0

கைந்நிலைப்பிரகரம்.

1.	ஐந்திணையைம்பது உரையுடன்	... ...	0	4	0
2.	கூளைதால் (ப) இன்னாநாற்பது (உரையுடன்)	...	0	3	0
4.	புலவராற்றுப்படை	...	0	3	0
6.	கோவைதை (உரையுடன்) ...	... ...	0	12	0
7.	திருமுருகாற்றுப்படை (உரையுடன்)	... ...	0	6	0
8.	திணைமாலை நூற்றைம்பது (உரையுடன்)	..	0	8	0
*9.	அகமாலை விளக்கம்	...			
10.	அட்டாங்கயோகக்குறள் ...	... ...	0	2	0
12.*	பன்னிருபாட்டியல்	...			
13.	நான்மணிக்கடிகை (பழைய உரை)	... ...	0	4	0
14.	முத்தொள்ளாயிரச்செய்யுட்கள்	... ...	0	3	0
15.	திருச்செந்திற்கலம்பகம் ...	... ...	0	3	0
16.	திருவாரூருலா	... ...	0	8	0
17.	சுகசந்தர்சனதீபிகை ...	... ...	0	12	0
18.	இயற்கைப்பொருட்பாடம்...	... ...	0	4	0
19.	தேவையுலா	... ...	0	3	0
20.	கரிவிருத்தம்	... ...	0	2	0
21.	சிதம்பரப்பாட்டியல் (உரையுடன்)	... ...	0	8	0
22.*	திருக்கலம்பகம் (ஷை)	... ...			
24.	குருமொழிவிளக்கிடை ...	... ...	0	1	0
25.	கேசவப்பெருமாள் இரட்டைமணிமாலை	... ...	0	2	0
26.	திருத்தணிகைத்திருவிருத்தம்	... ...	0	1	0
27.	மதுரைத்திருப்பணிமாலை...	... ...	0	8	0
28.*	சந்திராலோகம்	...			
30.	ஞானமிர்தக்கட்டளை ...	... ...	0	3	0
31	[illegible]	... ...	0	4	0

32.	மகீஷாபஞ்சகம் ...	...	...	0	8
33.	வேளிர்வரலாறு ...	...	...	0	8
34.	அகப்பொருள்விளக்கம் ...	...	...	1	4
36.	உவமானசங்கிரகம் ...	...	...	0	1
37.	மாறனலங்காரம் மூலமும் உரையும்	...	...	4	8
38.	திருப்புல்லாணிமாலை ...	...	...	0	2
39.	*பழமொழி மூலமும் பழையஉரையும் (முதல் 100 செய்)			1	0
40.	திருமாலிருஞ்சோலைமலை அழகர்பிள்ளைத்தமிழ்		...	0	8
41.	பொருட்டொகைநிகண்டு ...	...	...	0	6
42.	அகராதிநிகண்டு ...	...	...	0	12
43.	மேகவிடுதூது ...	...	...	0	2
44.	திருக்குற்றாலமாலை ...	...	...	0	2
45.	தண்டலையார்சதகம் ...	...	...	0	4
46.	இராமோதந்தம் ...	...	...	0	3
47.	பழமொழிமூலமும் பழைய உரையும் (2-வது 100செய்)			1	0
48.	சேதுநாடும் தமிழும் ...	...	...	0	6
49.	கடைவள்ளலார்காலம் ...	...	...	0	6
50.	தமிழரும் ஆந்திரரும் ...	...	...	0	4
51.	மதங்கசூளாமணி ...	...	...	1	0
52.	கூடற்புராணம் ...	...	...	0	10
53.	திருவள்ளுவர் ...	...	...	0	6
	ஷ ஆங்கிலத்தில் ...	...	...	0	6
54.	அரும்பொருள்விளக்க நிகண்டு		...	1	4
55.	மாறனகப்பொருளும் திருப்பதிக்கோவையும்		...	0	12
56.	பாப்பாவினம் ...	...	...	0	10
57.	மதுரைமும்மணிக்கோவை ...	...	...	0	5
58.	பழனிப் பிள்ளைத்தமிழ் ...	...	...	0	3
59.	கடம்பர்கோயில் உலா ...	...	...	0	6
60.	சங்கரநயினர்கோயில்அந்தாதி	...	...	0	6
61.	கலைசைக்கோவை ...	...	...	0	12

மேலேகண்ட சங்கப்பதிப்பில்லாத புத்தகங்கள் வேண்டுவோர் புத்தகசாலைகளுக்குத் தாங்களே நேரில் எழுதிப்பெற்றுக்கொள்ளவேண்டும்.

* இவ்வடையாளமிடப்பட்டவை இப்போது கையசமில்லை.

குறிப்பு:-1. சங்கத்தினின்று மாதமொருமுறை அரிய பெரிய விஷயங்களைக்கொண்டுவெளியாகிவரும் இச் "செந்தமிழ்"ப்பத்திரிகைக்கு வருஷ சந்தா ரூ 4. தனிப்பிரதியின் கிரயம் அணா 8. வெளிநாடுகளுக்கு வருஷ சந்தா ரூ 4—8—0. இதுவரை 31 தொகுதிகள் பூர்த்தியாயிருக்கின்றன. இவற்றுள் 1, 2, 3, 7, 8, 9, 10, 16-ம் தொகுதிகள் கையசமில்லை. மொத்தம் செய்யப்பெறுததொகுதிகள் தொகுதி 1-க்கு ரூ 4—0—0-வீதமும், மொத்தம் செய்யப்பெற்ற தொகுதிகள் தொகுதி 1-க்கு ரூ 4—12—0 வீதமும் விற்கப்பெறும். வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

2. சங்கப்பிரசுரம், செந்தமிழ்ப்பிரசுரம், செந்தமிழ் மூழுத்தொகுதி இவற்றுள் ஒவ்வொருபுத்தகத்திலும் ஒரேதடவையில் 10 பிரதிகளும் அதற்கு மேற்பட்டும் வாங்குவோர்கட்கு மொத்தக்கிரயத்தொகையில் 100க்கு 10 கமிஷன்தள்ளிக்கொடுக்கப்படும்.

லக்ஷ்மீநாராயணையர், மானேஜர்.

மதுரைத் தமிழ்ச் சங்க வெளியீட்டின் மறுபதிப்பு

திருக்குருகூர்

சிறிய இரத்தினக் கவிராயர்

இயற்றிய

பூலோகராற்றுப்படை

வெளியீடு :

மதுரைத் தமிழ்ச் சங்கம்,

தமிழ்ச் சங்கத் தெரு, மதுரை-1.

விலை 50 காசுகள்.

மதுரைத் தமிழ்ச் சங்க வெளியீட்டின் மறுபதிப்பு (எண்: 1)

திருக்குருகூர்

சிறிய இரத்தின கவிராயர்

இயற்றிய

புலவராற்றுப்படை

இது

சேதுசமத்தான வித்துவான்

ரா. இராகவையங்காரவர்களால்

பரிசோதிக்கப்பெற்றது.

வெளியீடு:

மதுரைத் தமிழ்ச் சங்கம்,

தமிழ்ச் சங்கத் தெரு, மதுரை-1.

முதலாம் பதிப்பு: 1918.
இரண்டாம் பதிப்பு: மார்ச் 1969.

புலவராற்றுப்படை

இரண்டாம் பதிப்பு முகவுரை

இவ்வாற்றுப்படை இயற்றியவர் திருக்குருகூர் என்னும் தும்வார் திருநகரியிலிருந்த சிறிய இரத்தினகவிராயர் என்பார். இவர் - இற்றைக்கு முந்நூறு வருடங்கட்கு முன் விளங்கிய சந்தமிழ்ப் புலவரும், மாறனலங்கார வுரையாசிரியருமாகிய நெடுமேனி. இரத்தின கவிராயரின் வழித்தோன்றலாவர். இவர் நிறுநூறு வருடங்கட்கு முன் கல்வியுஞ் செல்வமும் ஒருங்கெய்தி விளங்கிய வள்ளலும், மச்ச புராணம், நீடூர்த்தலபுராண முதலிய பல நூல்களியற்றியோருமாகிய இரசை-வடமலையப்ப பிள்ளை அவர்கள்பேரில் இவ்வாற்றுப்படைபாடினர். இந்நூல் திருச்சிராப்பள்ளியிலே கொல்லமாண்டு அசுஅ-இல் அரங்கேற்றப்பட்ட தாக அவ்வேட்டில் எழுதப்பட்டுள்ளது. வடமலையப்பவள்ளலின் வாரிசினர் திருநெல்வேலியில் இன்றும சிறப்புற்றிருக்கின்றனர், இவ்வாற்றுப்படை சொற்சுவை பொருட்சுவை பெரிதுடைத்தாயிப் படிப்போர்க்குப் பேரானந்தம் பயப்பது.

பத்திராசிரியர்.
(திரு. நாராயணையங்கார்

திருக்குருகூர்
சிறிய இரத்தின கவிராயர்
இயற்றிய

புலவராற்றுப்படை

—○—

காப்பு

வேற்றுப் படையை நரிப்படை யாக்கித்தன் வேற்படைக்குங்
கூற்றுப் படைக்கும் விருந்தூட்டும் வீரன் கொழுங்கருணை
யூற்றுப் படைக்கும் வடமலை மால்வரை யூர்ப்புலவ
ராற்றுப் படைக்குமுன் னீற்பான் செந் தூரிலறுமுகனே.

அரச வடமலையே யாதுலர்த்தம் வாழ்வே
யிரசையர சேயரச ரேறே — முரசப்
புலவராற் றுப்படையும் போர்வேலோய் நின்மேற்
புலவராற் றுப்படைபொற் பூண்.

பாயிரம்

கன்ன னவரத கல்யாணன் பார்புரக்கு
மன்ன னிரசை வடமலைமேற் — பன்னுதமி
ழேற்றுப் படைக்கு மிரத்ன கவி ஞன்புலவ
ராற்றுப் படைபாடி னான்.

நூல்

பார்புரக்கும் தெய்வப் பசுந்துழாய் பூத்த
கார்முகுன் மேனிக் கருணையங் கடவு
ளண்டமு மகண்டமு மீன்றுப் பூத்த
முண்டக நாபி முளைத்தெழும் பிரம

---

* இச்செய்யுள் 'வடமலையப்பன் கவிராயர் பாடியது' என இவ்வேட்டில் எழுதப்பட்டுள்ளது.

பாடலாசிரியர் குறிப்பு :

இப் பாடல் ஆசிரியர் "முத்தமிழ்ச் சேத்திர மதுர பாஸ்கரதாஸ்" ஆவார். வள்ளல் பொன். பாண்டித்துரைச்சாமித்தேவர் அவர்களைப் பற்றி 1925-ஆம் ஆண்டில் பாடப்பட்டுள்ள இப்பாடல் "இந்து தேசாபிமானிகள் செந்தமிழ்த் திலகம்" என்னும் நூலில் வெளிவந்துள்ளது. நாடகத் துறைக்குச் சிறந்த தொண்டாற்றியவர் இவர். அவரைப் பெருமைப்படுத்தும் வண்ணம் மதுரை மாநகராட்சி நகர் மத்தியப் பேருந்து நிலையத்திற்கு அருகேயுள்ள ஒரு குடியிருப்புக்கு இவர் பெயரை இட்டு அழைக்கிறது.

இவ்வரிய பாடலை அளித்து உதவியவர் இக் கவிஞரின் மருமகன் திரு. K. S. கருப்பையா ஆவார். அவருக்கு எங்கள் நன்றி.

பாடலை அளித்து உதவியவர்

நிகண்டுகள்

(முதுபெரும்புலவர் ரா. ராகவ ஐயங்கார்)

வடமொழி - தென்மொழிகளிலே, நிகண்டு என்பது சொற்களின் பொருளே விளக்கும் நூல்கட்குப் பெயராக வழங்குகிறது. நன்னூல் விருத்திகாரர் நிகண்டு என்னுஞ் சொல் இடுகுறிப்பெயர் என்பர். இதனைச் (சொற்களின்) கூட்டம், தொகுதி என்னும் பொருளில் வந்த 'நிக்ரந்து' என்பதன்றிரிபு என்று கூறுவாருமுண்டு. இந் நிகண்டுகள் கவிரூபமாகவும், சூத்திரரூபமாகவும் மாணாக்கர் எளிதில் மனப்பாடம் பண்ணுவதற்கு ஏற்றபடி, முன்னோரால் செய்யப்-பட்டுள்ளன. பாஷையில் அழுத்தமான ஞானத்தை நம் முன்னோர் இந் நிகண்டுப் படனத்தாலே மிகுதியும் அடைந்து வந்தனர். நச்சினார்க்கினியர் முதலிய புலவர் பெருமக்கள் எந்தச் சதுரகராதி, வின்ஸ்லோ அகராதிகளைக் கொண்டு தம் அருங் காரியங்களைச் சாதித்தார் ? அவர்கள் மனத்தில் நின்ற சொற்கடல்முன் அவ்வச்சு அகராதிகள் குட்டங்களே யன்றே ! ஆகவே நிகண்டு கற்று இலக்கிய இலக்கணந்தொடங்கிய நம்முன்னோரது வழக்கம், அவரது அழுத்த-மான பாஷை ஞானத்துக்கு முக்கிய காரணமாயிருந்ததென் பதில் ஐயமில்லை. இத்தகைய நிகண்டு நூல்கள், அந்நிய தேசத்தவர்க்குப் புதியனவாகத் தோன்றினும், நமக்கு அவை இன்று நேற்றுக் கிடைத்தவையல்ல; ஆரியருஷிகள் வேதத்துக்கு அங்கங்களாக வகுத்த ஆறுவகைச் சாஸ்திரங்களுள்ளே நிருத்தம் என்பது ஒன்று. இஃது உலகியற் சொல்லொழித்து, வைதிகச் சொற்களின் பகுதி விகுதி முதலிய உறுப்புக்களைக் காட்டி, பதப் பொருள் முதலியவற்றை விளங்க-வுரைக்கும் ஒரு கருவி நூலாம். இச் சாஸ்திரத்தை வேதத்திற்குச் செவியெனப் புனைந்து கூறுவர். ''கற்பங் கைசந் தங்கால் எண்கண், முற்றெ னிருத்தம் செவி சிக்கை மூக்கு, உற்றவியாக ரணமுகம் பெற்றுச் சார்பிற் றேன்றும் ஆரணவேதா'' என்பது மணிமேகலை.

இந் நிருத்த வகையுள்ளேதான் நிகண்டு நூல்களையும் அடக்கிக் கூறுவர். இதனால், முற்காலந் தொடங்கியே, பதப்பொருள் கூறும் நூல்கள் பூர்வீகரால் கையாளப்பட்டுள்ளவை என்பது வெளியாம். இந் நிருத்தம் வைதிகச் சொல்லையே ஆராய்வதாகலின், அதனுடன் உலகியற் சொல்லையும் ஆராய்கின்ற நிகண்டு நூல்களே யாவர்க்கும் உபயோகமாவன. இந் நிகண்டு நூல்கள்: வடமொழியில் அமரசிம்மம், அமரதத்தம், விசுவம், விஷ்வாமித்தம், சப்தார்ணவம், சரஸ்வதி விலாசம் முதலிய பலவாகவுள்ளன. தென்மொழியில் திவாகரம், பிங்கலம்,

சூடாமணி, உரிச்சொல், கயாகரம், அகராதி, ஆசிரியம் முதலியன. இந் நிகண்டுகளெல்லாம் தமிழ்மொழியுணர்ச்சிக்கு இன்றியமை-யாதனவாக முன்பிருந்தனவாயினும், அகராதிகள் வெளிவரவே, இவற்றின் பயிற்சி நின்று வருகின்றது. ஏனெனில், அவ்வகராதிப் பிரதியொன்று பக்கத்துக் கிடக்குமாயின் பதப் பொருள்களையெல்லாம் மனனம் பண்ணியதுபோலவே அஃது உதவுவதாகின்றது. ஆகவே, இன்னுஞ் சிலகாலத்துள் நிகண்டுகள் பழைமை பெருமை பற்றி மட்டும் போற்றற்குரிய நூல்களாய், முற்றும் வழக்கு ஒழிந்து விடுமென்றே தோன்றுகிறது. இது பெரிதும் இரங்கத்தக்க சம்பவங்களுள் ஒன்றே.

க. திவாகரம்

தமிழில் வழங்கும் நிகண்டுகள், அவ்வக் காலத்து வழக்குகளைத் தழுவித் தக்கவர்களாற் செய்யப்பட்டன. இவற்றுள் திவாகரமே முன்னது. இதிற் சங்கத்துச் சான்றோர் வழக்குகள் மிகுதியாம். பிங்கலந்தை அதனினும் பிற்பட்டது; பிற சான்றோர் வழக்குகளை இதிற் காணலாம். ஏனைய நிகண்டுகளில் பிற்கால வழக்குகள் பயிலும். இவற்றையெல்லாம் விளக்குவதற்கு இஃது இடமில்லையாயினும், நிகண்டுகளைப்பற்றித் தனித்தனியே பேசும்போது முக்கியமான-வற்றைக் குறித்து எழுதப்படும். இனி, இந் நிகண்டுகளின் ஆதி வரலாறுகள் செந்தமிழ் பக்கட்கு இன்பந் தரத்தக்கனவாதலால், அவற்றை ஒவ்வொன்றுகக் காலமுறைப்படியே வைத்து என் சிற்றறிவிற் கேற்ப ஆராய்வேன்.

இம்முறையில் திவாகரம் முந்தியதென்று முன்னரே கூறினேன். இதற்கு முதனூல் ஆதி திவாகரம் என்பதொன்று எனச் சிலர் கூறுவர். அவ்வாறு ஒன்றுண்டென்பது எதனாலும் பெறப்படாமையால் அஃதீண் டாராய்ச்சியில்லை. இந்நூல் சேந்தன் என்னும் சிற்றரசன் வேண்டுகோளின்படி திவாகர முனிவராற் செய்யப்பட்டது; இது பற்றிச் சேந்தன் திவாகரம் எனவும் வழங்கும். இச் சேந்தன் என்பவன், காவிரிக் கரையிலுள்ள அம்பர் என்னும் நகர்க்கு அதிபதி-யென்பதும், ஆரியகுலத்தவனென்பதும், கல்வி கேள்வி மிக்கவ-னென்பதும் வடமொழி-தென்மொழிகளிற் செய்யுளியற்றும் வன்மை-யுடையவனென்பதும் இரவலர்க்கும் புலவர்க்கும் பெரிய களாகணை-வனென்பதும் திவாகரத்தால் விளங்குகின்றன. அன்றியும், சம்பாபதி எனப்படும் புகார்த்தெய்வத்திற்கு அந்தாதியும்; ஸ்ரீராமபிரானது கோதண்டம், அருச்சுனன் காண்டீபம், முருகக்கடவுள் வேலாயுதம்-

ஞ்ம் மூன்றிற்கும் புகழ்ச்சிப்பாடலும் பாடினவனென்றும், இத்தகைய குணவிசேடங்களுடைமையால் நல்லிசைப் புலவராகிய ஔவையாற் புகழப்பட்டவனென்றும், அந்நிகண்டின் தொகுதியிறுதிக் குட்டுரைகள் கூறுகின்றன. புறநானூற்றில் 385-ஆம் பாடலாகிய "வெள்ளி தோன்றிய" என்னும் பாட்டுக் கல்லாடனர் இச் சேந்தனைப் புகழ்ந்து கூறியதாம். இவற்றுல் திவாகரம் சங்க காலத்தே தோன்றிய பெருமையுடையதென்பது ஐயமின்றிப் போதரும். வேறு நிதமாகச் சொல்லின், இற்றைக்கு 1800-வருஷங்கட்கு முந்தியது என்னலாம்.

இனி, திவாகரத்துள்ளே புகுந்தாராயின், அதிற் பிற்கால வழக்-கொன்றும் காணமுடியாதென்பது திண்ணம். பிற்பட்ட நிகண்டுகளிற் போல, தமிழ்வள்ளலார் எழுவர் பெயர் இதிற் குறிக்கப்படவில்லை. இதன் காரணத்தை அறிதல் எளிது. அவ்வெழுவரும் திவாகரம் செய்யப்பட்ட காலத்தும் அதன் பின்னரும் விளங்கியவராதலின், இந் நிகண்டுடையார் அவரை வரையறுத்துத் தொகைகோடல் முடியா-தன்றே? பின்வந்த பிங்கலர் முதலியோர்க்காயின், அவ்வாறு செய்தல் நியமமும். இவ்வாறே பின்வந்தவராகிய குமணனையும் நல்லியக் கோடனையும் பாடிய புலவர்கள் அவ்வேழு வள்ளல்களையுஞ்* சுட்டித் தாகை கொண்டமை காண்க. இனி, பல்லவரென்னுஞ் சொல்வழக்கம் திவாகரர்க்குத் தெரிய வராதது. பிந்திய நிகண்டுகளில் அது காணப்-படும். ஆனல் சாளுக்கிய வரசரைப் பற்றித் திவாகரம் கூறுகின்றது. இவர் வேள் புலவரசர் என்று குறிக்கப்பட்டுள்ளார். வேள்புலம் என்பது இப்போது பம்பாய் மாகாணத்தைச் சார்ந்த ஒரு பகுதியென்பதும் பிற சாளுக்கிய வரலாறுகளும் முன்னரே என்னல் விளக்கப்பட்டுள்ளன. இவ்வசரர் வராகத்துவசம் உடையவரென்பது, திவாகரத்தில், "கேழல் வள்புல வரசர் கொடியே" என வருவதனல் தெரிகின்றது. பிற்பட்ட சாளுக்கிய சாஸனங்களில், "பாலித்துவசம்" என்பதன்றி இவர்க்கு வராகக் கொடி காணப்படவில்லையாயினும் வராக முத்திரை அவற்றிற் பதிக்கப்படுகிறது. பாலித்துவசமும், பிந்திய சாளுக்கர் கொண்டதேயன்றி முன்னைய சாளுக்கியரதன்மை சாஸனத்தாலே அறியப்படுவதால், அப் பிற்கால முன்னையவர்க்கு, முத்திரைபோலக் கொடியும் பன்றி வரைந்ததாகவே கொண்டிருக்கலாமன்றே! இனி, பூழியன்என்னும் பெயர், பாண்டியனுக்கின்றி, சோழனெருவனுக்கே திவாகரத்திற் காணப்படுகிறது. சங்கநூல் முழுதுந் தேடினும் இவ்வாறே அதனைக் காணலாம். பதிற்றுப் பத்துப் பதிக-

---

* புறம் — 158; சிறுபாணாற்றுப்படை.

மொன்றில், களங்காய்க் கண்ணி நார் முடிச் சேரல் என்பவன், ''பூழி நாட்டைப் படையெடுத்துத் தழீஇ'' என்று புகழப்படுவதால், அவன் காலமுதல் 'பூழியன்' என்னும் பெயர் சேரற்கு வழங்கியதாகக் கருதலாம். இப்பெயர் வழக்கம், முத்தொள்ளாயிரமுடையார் திருமங்கையாழ்வார் காலம்வரையிலும் சேரற்கு வழங்கியதென்பது, † ''பூழியர் கோக்கோதை'' எனவும், ''பரனே பஞ்சவன் பூழியன் சோழன் பார்மன்னர் மன்னர்'' எனவும் வரும் அவ்விருவர் வாக்கிலுந் தெரிகின்றது. பிற்பட்ட நிகண்டுகளிலும் நூல்களிலுந்-தான் இப்பெயர் பாண்டியர்க்கு வழங்கத் தொடங்குகிறது. இவை போன்ற சங்க காலத்து வழங்கிய செய்திகள் பல திவாகரத்தில் அறியக் கிடத்தலால், சரித்திர வாராய்ச்சிக்கு இது பெரிதும் உபயோகமான தென்னலாம்.

உ. பிங்கலம்

இனி, அடுத்த பிங்கலத்தைப் பற்றிச் சிறிது ஆராயப்படும். இந்-நிகண்டின் பாயிரத்தே இதனுசிரியராகிய பிங்கல முனிவர் திவாகரர் புத்திரர் என்று கூறப்படினும், நூற்கணுள்ள சில வழக்குகளை நோக்கும் போது, இது திவாகரத்திற்கு மிகவும் பிந்தியதாகவே எண்ணப்படுகிறது. உதாரணமாக—பல்லவர் என்னும் பெயர் இழிஞர்க்கு இதில் காணப்-படுகிறது. இதனால், பல்லவ அரசர்தம் நிலைகுலைந்து இழிவுற்ற காலத்தே பிங்கலந்தை செய்யப்பட்டது போலும் என்று கருத இடமுண்டாம். திவாகரத்தில் இச் சொல் வழக்கமே கண்டதில்லை. இவ்வாறே பிற்கால வழக்குகளை அங்கங்கே இதிற் காணலாம். ஆயினும் இற்றைக்கு 725—வருஷங்கட்கு முந்தியதென்று தெளியப்-பட்ட நன்னூலுக்கு முற்பட்டதென்பது ''பிங்கல முதலா நல்லோருரித் தொல்'' என்பதனாற் றெளிவாம். திவாகரத்திற் கண்ட சாளுக்கியர் முதலிய வழக்கு பிங்கலந்தையிற் காணப்படினும், அவை முந்நூலி னின்று தழுவப்பட்டவை எனக் கொள்ளலே பொருத்தம். இதுநிற்க, ''குடம்பை தனித் தொழியப் புட்பறந் தற்றே, உடம் போடுயிரிடை நட்பு'' என்னுந் திருக்குறட்குப் பரிமேலழகர் கூறிய உரையில் குடம்பை—முட்டை என்றெழுதப்பட்டதை, அவ்வாறு முன்னூல்களிற் பயிலும் வழக்கில்லை என்று மறுத்தாருமுளர். 'குடம்பை முட்டையுங் கூடுமெனும்' என்பது பிங்கலந்தைச் சூத்திரமாதலால், பரிமேலழ கருரை முழுதும் ஆதரவற்றதென்பது பொருந்தாமை காண்க.

இச் சூத்திரம் ஏட்டுப் பிரதியிலுங் கண்டது.

---

† முத்தொள்ளாயிரச் செய்யுட்கள் — 6, 7. (செந்தமிழ்த் தொகுதி — 4) பெரிய திருமொழி 7, 7, 4.

3. சூடாமணி நிகண்டு

இனி, இப் பிங்கலந்தையைக் காலத்தாலடுத்துக் கூறற்குரியது டாமணி நிகண்டு. இது வீரை மண்டல புருடர் என்னும் ஞ்ஜனரால் யற்றப்பட்டது. இவர் ஆசிரியர் திருநறுங்குன்றை-குணபத்திரா-ரியர் என்பவர். மண்டல புருடர் கிருஷ்ணராயர் காலத்தவ-ன்பது 'கிருட்டிணராயன் கைபோற் கொடை மடமென்ப தம்ம ரையாது கொடுத்தலாமே' எனக் கூறுதலால் வெளியாகிறது. இந்-கண்டுடையாரே அருகத் தேவர்க்குப் புராணமொன்றும் இயற்றி-ந்தார் என்பது பாயிரத்தாலும், தொகுதியிறுதித் தற்சிறப்புப் டலாலும் அறியப்படும்.

இனித் தஞ்சைத் 'தமிழகம்' என்னும் பத்திரிகையிலே ஸ்ரீமத்-ப்புசாமி சாஸ்திரி அவர்கள்,

''ஒருங்குள பொருளு மோர்ந்திட் டுரைத்தனன் வீருத்தந் தன்னில் இருந்தவை நல்லோர்குற்ற மியம்பிடா ரென்ப தெண்ணித் திருந்திய கமலவூர்தி திருப்புகழ்ப் புராணஞ் செய்தோன் பரந்தசீர்க் குணபத்ரன்ருள் பணிந்த மண் டலவன்ருனே'

னும் பாடலில், 'திருப்புகழ்ப் புராணஞ் செய்தோன்' என்னும் சேடணத்தைக் ''குணபத்திர''னுக்கேற்றி மகாபுராணத்தின் பிற்பாக-கிய உத்தரபுராணத்தைச் செய்தவரும் இரட்டவரசனுகிய அமோக ஷன் காலத்தவருமாகிய குணபத்திராசரியரே மண்டல புருடர் ரியரென்றும், அதனல் இந் நிகண்டின் காலம் இற்றைக்கு 1000 ஷத்துக்கு முற்பட்டதாகல் வேண்டுமென்றும் எழுதியிருக்கிறர்கள். ர்கள் ஆராய்ச்சி உண்மையிற் புகழத் தக்கதாயினும் சில விஷ-கள் எமக்கு ஐயந்தருகின்றன. சூடாமணி நிகண்டுப் பாயிரத்திலே ால்லொடு பொருளுணர்ந்தோன்' என்னுங் கலிமுதலாக ''செக-னும் பளிங்குமாட'' என்னுங் கவியீருக மண்டல புருடராசியராகிய ணபத்திரர் புகழப்பட்டிருத்தலும் அவற்றுக்கு அடுத்த கலியிரண்-றும் மண்டல புருடர் கூறப்படுதலும் நோக்குவார்க்கு நன்கு புலப்-ம். இவற்றில் பிற்கூறியதிற்ருன் ''திருந்திய கமலவூர்தி திருப்புகழ்ப் ாணஞ் செய்தோன், பரந்த சீர்க்குணபத்ரன்ருள் பணிந்த மண்டல ருனே' எனப் புராணச் செய்தி வருகிறது.

இங்கே கூறிய ''திருப்புகழ்ப் புராணஞ் செய்தோன்'' என்பது உத்தரமகா புராணஞ் செய்த குணபத்திராயின், அவரைப் பற்றிா பாடலிற் கூறும் விசேடணங்களோடு முக்கியமான இவ்விஷயமுப் சேர்க்கப்படுவது முறையன்ரே? மண்டல புருடரைப் புகழுமிடத்து ஐயத்துக்கிடமான நிலையில், அத்தொடர் வைக்கப்பட் நியாயமில்லை; ஆதலால், ''திருப்புகழ்ப்புராணஞ் செய்தோன்'' என்பது மண்டல-வனுக்குக் கூறப்பட்ட அடையாகக் கொள்வதே நேரானதாம். சாஸ்திரிகள் சூடாமணி நிகண்டைப் பற்றி எழுதியதற்கு முன்பே வெளிவந்த மணிமேகலைப் பதிப்பில், மஹாமஹோபாத்தியாய-ழரீ. சாமிநாதையரவர்கள் ''இந் நூலாசிரியர் சைந மதத்தினரும் பெரு-மண்டூர் என்கிற வீரபுரத்திலிருந்தவரும் அருக தேவன் சரித்திரத்தைப் புராணமாகச் செய்தவருமாகிய மண்டல புருட ரென்பவர்''. (பக்கம் 390) என்றெழுதியிருத்தலால், அத் தொடர்க்கு அவர்கள் கொண்ட கருத்தும் நான் கூறியதேயாதல் காண்க. அன்றியும் சூடாமணி வாக்கையும் போக்கையும் நோக்கும்போது, சாஸ்திரிகள் கூறியபடி, அவ்வளவு பழங்காலத்துக்கு அஃதுரியதா என்ற ஐயம் தமிழறிஞர்க்குத் தோன்ருமலிராது.

ஆயினும் குணபத்திராசாரியர் வேறு யாவர்? என்னுங்கேள்வி இங்கேயுண்டாகலாம். விஜய நகர ராயர் காலத்தில் அப்பெயர் தரித்த ஒருவர் இருந்திருத்தல் கூடாதென்பதற்கு நியாயமில்லை. அன்றே, அமோகவர்ஷன் காலத்துக் குணபத்திரர் தமிழ்நாட்டவரே என்பதற்கேனும் ஆதாரம் உண்டா? இவ்வாறு, குணபத்திரர் இருவராகவேண்டுமென்று நான் கூறுவது சிறிதும் ஆதரவற்ற விதண்டையன்று. சென்னை ராசாங்கக் கையெழுத்துப் புத்தகசாலையில், (Government Oriental Manuscript Library) ''யதிதர்மம் சாவகதர்மம்'' என்ருரு பிரதியுள்ளது. இதில் ஜைனமத விஷயங்களும் வரலாறுகளும் பரக்க எழுதப்பட்டுள்ளன. முழுதும் வசன-நடையில் அமைந்த இக்கிரந்தம் சிறந்தபண்டிதரால்எழுதப்பட்டதாகத் தெரியவில்லையாயினும், தம் சொந்த மத வரலாறுகளை நன்கறிந்த ஜைனரொருவரால் இஃது எழுதப்பட்டதென்று நிச்சயமாய் நம்பலாம். இதில் ''பண்டிதர்வயணம்' என்பதன் கீழ், குணப்பத்திராசாரியர் என்பவர் ஐந்நூற்றுச் சில்லறை வருஷங்கட்கு முன் விஷ்ணு தேவராயர் காலத்தில்,* ஜைன மார்க்கத்திலே நடந்த சில மாறுபாடுகளை நீக்கி அதைக் காத்தற்காகப் ''பண்டிதர்களை'' நியமித்தார் என்னும்

*கிருஷ்ணதேவராயர் என்பது இவ்வாறு பிறழ்ந்தது போலும்.

ஷயங் கூறப்பட்டுள்ளது. இதனல், குணபத்திராசாரியர் என்பவ-
ாருவர், பிற்காலத்து ராயர் நாளில் தென்னுட்டிலே விளங்கின-
ரன்று தெரியவருதலால், இரட்டவரசனுகிய அமோகவர்ஷன்
லத்தனை மண்டல புருடர் ஆசிரியராகக் கொள்ள வேண்டிய
வசியமில்லையென்றே தோற்றுகிறது.

இனி, சோதிட நூலாகிய ''சூடாமணி உள்ளமுடையான்''
யற்றியவர் இம்மண்டல புருடரேயென்பது அந்நூற்பதிப்பிலும்,
வறு சிலரெழுத்துக்களிலுங் காணப்படுகிறது. இவ்வாறு
றியதற்குக் காரணம்:—''சூடாமணி'' என்னும் விசேடணம்,
ண்டுக்கும் உள்ளமுடையானுக்கும் ஒப்ப அமைந்திருத்தலே
ாலும்! அவ்வுள்ளமுடையானூலாசிரியர், கடவூராயரின் திருக்-
ாட்டி நம்பி என்பது அந்நூலிறுதிச் செய்யுளால் நன்கறியப்-
ுவதை அன்னேர் பார்த்திலர். ''செந்தமிழ்'' முதற்றொகுதி 469ஆம்
கத்தும் அவ்வாசிரியர் வரலாறு காண்க.

4. உரிச் சொல்

இவ்விவரும் நிகண்டுகளைக் காலத்தால் ஒருமுறை பெறும்படி
ய்ப்பதில் சிறிது இடர்ப்பாடுண்டாயினும், எல்லாவற்றுக்கும்
திய ஆசிரிய நிகண்டுடையார் நமக்கு ஒரு வழி காட்டியுள்ளார்.
ந்நிகண்டுப் பாயிரத்திலே,

''முந்துள திவாகரம் பிங்கல நிகண்டுசீர்
முந்துகாங் கயனுரிச் சொல்
முறைபெறு கயாகரம் பகருமக ராதியிவை
முற்று மொன்றுத் திரட்டி.''

என, நிகண்டுகளின் வரிசை கூறப்பட்ட அடிகள் வருகின்றன.
முறைப்படியே, சூடாமணியை யடுத்து உரிச்சொனிகண்டைக்-
லாம். இவ்வாறு உரிச்சொனிகண்டைப் பிற்காலத்ததென்று
ள்வதற்குச் சிறந்த காரண்மொன்றும் உண்டு. வணங்கற்
ருளில் சலாஞ் செய்தல் என்னும் சொல்வழக்கம் நம் நாட்டில்
ங்கத் தொடங்கியது துருக்கராட்சிக்குப் பிந்தியகாலத்தே என்பது
ருக்குந் தோன்றத்தக்கது. இச் சொல்வழக்கு பிங்கலந்தை
மணி நிகண்டுகளில் காணக்கிடையாதாயினும், உரிச்சொ
ண்டில்,

''வந்தனை காணல் வணங்கல் பணிதலே
தந்தலை தாழ்தல் சலாஞ் செய்தல்''

(6-வது செயல் பற்றிய பெயர்த் தொகுதி — பாட்டு. 2)

என வணங்கற் பொருளில் எடுத்தாளப்படுகிறது. இதனல் இந் நிகண்டுடையார்க்குப் பழமை கூறுதல் சிறிதும் பொருந்தாதை காண்க. இதே சொல்வழக்கை, துருக்கராட்சிக்காலத்து விளங்கிய ஸ்ரீ குமரகுருபரமுனிவர், தம் மீனாக்ஷியம்மைப் பிள்ளைத்தமிழ் ''குறவர் மகட்குச் சலாமிடற் கேக்கறு குமரனே முத்துக்குமரனே போற்றுதும்'' என்னுந்தொடரில் ஆண்டனர். ஆகவே உரிச்சொல நிகண்டும், அம்முனிவர்காலத்தை யடுத்துச் சிறிது முன்னே பின்னே இயற்றப்பட்டிருத்தல் வேண்டுமென்று கருதலே பொருத்தமாகும்.

இனி, இந் நிகண்டியற்றிய காங்கேயரைப் பற்றி விசேட மொன்றும் அறிதல் கூடவில்லை. இவர் பெயரால், இவர் கங்க வம்சத்தவராயிருக்கலாமென்று தோன்றுகிறது. ''இம்முடி'' என்னும் பட்டம் இவர்க்குக் கூறப்படுகிறது. இப் பட்டம், கொங்கு நாட்டு வேளாள வகுப்பாராகிய ''கவுண்டரில்'' ஒரு பிரிவினர்க்குரிய குடிப் பெயராக இன்றும் வழங்குவதாகக் கேள்வி. இவர் நிகண்டு 288 இனிய வெண்பாவில் அமைந்தது.

இவ்வுரிச்சொல் நிகண்டு, சூடாமணி நிகண்டுக்கு முந்திய தென்பது, தொண்டை மண்டல சதகமுடையார் கொள்கை. இதனை:—

''பண்டை நிகண்டு திவாகரம் பிங்கலம் பன்னுரிச் சொ
லெண்டிசையின் சொல்வடமொழிச் செய்யுளெல்லா முணர்ந்தே
தண்டமிழ் கொண்டு நிகண்டு சூளாமணி தானுரைத்த
மண்டலவன் குடிகொண்டது நீடொண்ட மண்டலமே''.

என்பதனற் காண்க. இப்பாடலால் மண்டலவனிகண்டுக்கு ''நிகண்டு சூளாமணி'' என்பது பெயரென்று தெரிகிறது.

ரு. கயாகர நிகண்டு

முன்கூறிய முறைப்படி இக் காங்கேயனுரிச்சொல்லையடுத்து நிற்பது கயாகர நிகண்டு. இந் நூல் இனிய கட்டளைக் கலித்துறையில் அமைந்தது. இதன் நிகரந்தரபிதியொன்று இச்சங்கத்துப் பாண்டியன் புத்தகசாலையில் உண்டு. இது கயாகரப் பன்மொழாற் செய்யப்பட்ட தாகலின் இப் பெயர் பெற்றது. (கயாகரம் — சொற்குழியிடமானவை;

சொல்). இக் கயாகரர் – தேவை எனப்படும் இராமேசுவரத்தவ-
பதும், வேதம்வல்ல அந்தணரில் காசிப கோத்திரத்தவரென்பதும்,
கேள்வி மிக்கவரென்பதும், இராமீசுவரர்பேரில் கோவையொன்று
னவரென்பதும் இவர் நூலாலே விளங்குகின்றன. இவற்றை :–

தையர் பித்தர் அறியாத பால்சொற் பேதங்கொள்ளார்
ருங் குற்றந் தெரியார் பெரியவ ரோங்கிடப
னன் பற்று மறவாத தேவைக் கெயாத ரன்ரேல்
யென் சொற்ற வுரிச்சொற் பனுவலு மேம்படுமே.''

டு மறைபயில் நாவினன் என்னுஞ் செந்தமிழ் நூல்
ட செவியின் கேளா வறிவன் கெயாதரத்துள்''

சிப கோத்திரம் வாழ்வந் தோன்றென் கலைத்தமிழ் தேர்
ல் பெருந்தகை மாரு வறிவன் மலரயனும்
வ னும்புகழ் தேவை நன்னுடன் கெயாதரம்.''

மரும்பொரு ளந்தாதி கேட்டிந்த மேதினியோர்
ம் வினைகெடச் சாற்றிய தென்றமிழ்த் தேவை மன்னும்
வை யிராமீ சுரக்கோவை சொற்ற குருபரன் மற்
த லின்றி மையத் தான்பத் தாவ தொலியியலே.''

வற்றுற் காண்க. இவர் பாடியதாகத் தெரியும் இராமேசுவரக்
வை இப்பொழுது எங்குள்ளதோ தெரியவில்லை. இந்நிகண்டு
ய நிகண்டுச் சொற்களேயே கொண்டுள்ளமையால் இதனின்று
விசேடங்கள் என் பார்வையிற்பட்டில. இக் கயாகரத்தின்
மை, தொண்டைமண்டலத்தாராகிய ஆசிரிய நிகண்டுடை
க்கு நன்கு தெரியவந்து அவராற் புகழப்படுதலாலும், அகராதி
ன்டுக்கும் முந்தி இதுவைத்துக் கூறப்படுதலாலும் இஃது
றைக்கு 300-வருஷங்கட்கு முற்பட்டதென்பது திண்ணம்-
ாதி நிகண்டின் காலம் பின்னர்த் தெளியக் காட்டப்படும்.

6. அகராதி நிகண்டு

இக கயாகரத்தையடுத்து அகராதி நிகண்டு என்பது ''முறை
கயாகரம் பகரு மகரா தியிவை'' என்னும் ஆசிரிய நிகண்டுத்
டரால் விளங்கும். இதன் பிரதியிரண்டு இச் சங்கப் புத்தகசாலையில்
னை. இந்நூல், சிதம்பரமிரேவணசித்தர் என்னும் பெரியவரால்
ற்றப் பெற்றது. ''இரேவணராத்திரியர் சூத்திர வகராதி'' என்று
ப்படுவது இதுவேயாதல் வேண்டும். இச் சித்தர், தொண்டை
டு வேளாளராயிருந்ததும் சிதம்பரத்திலிருந்தவரென்பதும்

கல்வி கேள்வி வல்லவரென்பதும், சிவஞானியென்பது இந் நிகண்டால் அறியப்படுகின்றன. இவ்வகராதி நிகண்டு சகாப்தம் கி. பி. 1594ல் முடிக்கப்பெற்றது. இந் நிகண்டின் தொடக்கத்தே இவர் பாடியதாகக் காணப்பட்ட அகவலொன்று' இந்நூலின் வரலாற்றை நன்கு விளக்குதல் அடியிற் காண்க:-

"உலகினர் பவமற
தேசு கொளும்பட்
தொலிகெழு கடல்சூ
இயற் சொறிரிசொறி
றுரைதரு சொற்கள்
றிரிசொலின் பேத
ஒருசொற் ருனே
பல சொற் ருனே
வரு மிதி லொரு சொற்
தெரிதரு பீங்கலந்
பரவிய நிகண்டு
அதிற்சில திரட்டி
மதித்தெழு வகர
எழுத்து நூற்ருெரு
எழுதரு சூத்திர
வருபெய ரீதிப்
ஒருபெயர் முதனூற்
நிகழ்தரு வுரைக்குந்
அடைவினி லங்கங்
இடையிடை யடைவிலங்
மன்னுசூத் திரமுவாயிர்த்
முந்நூற் றறுபத்
வந்திடுந் தொகுதியீ
அரிய சகாத்த
ருெருபத் தாறென
ஐந்ததி காரம்
உந்திய வறிவா
நாற்கவி வாணர்
நூற்பா வதனு
ஆதர வாலக
ஓதினன் யாவரு

மலைம்க டவஞ்செயும்
டீசுரன் பதம்பணிந்
முலகினிற் றெரிக்கும்
சைச்சொல் வடசொலென்
ஒருநான் கதனிற்
மிருவகை யது தான்
பலபொரு ளாகியு
யொருபொரு ணிலவியும்
பலபொரு ளதனேத்
திவாகர முதலாப்
பலவெடுத் தாராய்ந்து
அகர முதலா
மீருய் மொழி முதல்
நாலி னடைவே
முதற்பதந் தோறும்
பொருளா லெடுத்தே
பத்தா றீரு
தொகை..... .....பெயர்
கம்ர்ந்துள பெயரும்
கில்லாப் பெயரும்
துடனே
தெட்டெனுந் தொகையா
ரைந்தென வகுத்தே
மாயிரத் தைஞ்நூற்
வுனாத்திடு மாண்டினில்
அறுபத்து நாற்கலே
லொருங்குட ணுணர்ந்த
நகைதர யானும்
ணுண்ணிய வுணர்வில்
ராதி நிகண்டென
முணர்தர நினைந்தே"

இவ் விரேவணசித்தர் திருமேற்றளிபபுராணம், திருவலஞ்சுழிப் புராணம் திருப்பட்டீச்சுரப் புராணம் என்னும் மூன்று புராணங்கள் இயற்றியவரென்பது:-

"பவமறத் தெளிந்த சிவதரி சனத்தோன்
திருமேற் றளிக்குச் செழுந்தமிழ்ப் புராணம்
தெரிதரு சிதம்பர ரேவண சித்தன்".

"வரமிரு வலஞ்சுழி வாணர்தம் புராணமும்
உரைதரு ரேவணன்".

"திருப்பட் டீச்சுரச் செந்தமிழ்ப் புராணம்
தெரிந்தநற் சிதம்பர ரேவணன்".

என்னும் அடிகளிற் கண்டு கொள்க. திருமேற்றளியென்பது காஞ்சிப்பிரதேசத்தைச் சார்ந்தது. திருவலஞ்சுழியும், திருப்பட்டீசுவரமும் கும்பகோணத்துக்குப் பக்கத்திலுள்ள சிவஸ்தலங்களாம். இவையன்றி சிவஞானதீபம் என்னும் சைவசமய கிரந்தமொன்றும், இவராற் செய்யப்பட்டதென்று தெரிகிறது. இந்நூல் சுபானுவருஷம் பகிப்பிக்கப்பட்டது.

எ. ஆசிரிய நிகண்டு

இனி, இந் நிகண்டுகளிலெல்லாம் பிற்பட்டது ஆசிரிய நிகண்டு. இஃது ஆசிரிய விருத்தத்தால் அமைந்தமையின் அப்பெயர் பெற்றது. இஃதியற்றியவர் தொண்டை மண்டலத்துச் செஞ்சிச் சீமையைச் சார்ந்த ஊற்றங்காலில், பாவாடை வாத்தியார் குமாரர் ஆண்டிப் புலவர் என்பார். இப்புலவர், இந்நிகண்டுடன், நன்னூற்கு ஓர் உரையும் இயற்றியவரென்றும் தெரியவருகிறது. இச் சங்கத்துப் புத்தகசாலையில் சங்கரநமச்சிவாய ருரையல்லாத வேரேர் உரைப்பிரதியுமுண்டு; ஆனல் அதுவே இந்நிகண்டுடையார் செய்தவுரையென்பது துணியக்கூடவில்லை. இவர் நன்னூற்கு முரைசெய்தவரென்பதை ஆசிரிய நிகண்டுப் பாயிரத்தில்வரும், "இயம்பிய நிகண்டினு மறியன்னூலினெ டிரண்டுமே செய்து வைத்தான்" என்னுந் தொடரால் அறிக. இந் நிகண்டின் முதலிரண்டு தொகுதிகள் சில வருடங்களுக்கு முன்பு அச்சிடப்பட்டன.

இவ்வாறு வழங்கும் ஏழு நிகண்டுகளையன்றி வேறு சில நிகண்டுகளும் இந்நாட்டில் வழங்கலாம். ஆனல் பிரசித்தமானவை மேற்காட்டிய நூல்களாகும். ஐந்திணை நிகண்டு என்பதொன்றுள்ளதாகக் கேள்விப்பட்டதுண்டு. இந் நிகண்டுகளெல்லாம் பெரும்பான்மை வழக்கு வீழ்ந்தனவாயினும், தமிழர்க்குப் பெரிதும் அலங்காரந் தருவனவாதலின் அவற்றின் வரலாறுகளை எழுதத் துணிந்தேன். எண்ணத்திலடங்காத செய்திகள் பல இவற்றைக் குறித்திருத்தல் கூடும். அவையெல்லாம் அறிந்தவர்வாய்க் கேட்டு மகிழ்ந்து கொள்க.